# பிழைக்கும் வழி

## PRACTICAL LIFE


ஜி. எ. வைத்தியராமன், பி. எ., பத்திராதிபர்.

G. A. VaidyaRaman, B. A., EDITOR.

புஸ்தகம் 3. Vol. 3. } விரோதிகிருதுஸ்ரீ புரட்டாசிமீ — SEPTEMBER 1911. { ஸஞ்சிகை 9. No. 9.


## Practical Life.

A popular illustrated Tamil monthly magazine of general information and instruction devoted largely to agriculture, trade, industry, citizenship and popular, scientific and technical education.

RATES OF SUBSCRIPTION POST FREE.

| | *Inland.* Rs. A. P. | *Foreign* Rs. A. P. |
|---|---|---|
| Per annum ... | 4 0 0 ... | ... 6 0 0 |
| Single copy ... | 0 6 0 ... | ... 0 8 0 |
| Sample copy ... | 0 2 0 ... | ... 0 3 0 |

RATES OF ADVERTISEMENT.

| | | |
|---|---|---|
| 1 Page | ... 5 0 0 | per month. |
| ½ do | ... 2 8 0 | do |
| ¼ do | ... 1 4 0 | do |
| Less than ¼ page ... | 0 8 0 | per *inch* per month. |

The above rates are all *net* and subject to no discount whatever. Orders should be accompanied with advance.

**Notice to Contributors.**—The Editor solicits contributions on subjects relating specially to agriculture, trade, industry and popular, scientific and technical education. Articles intended for the journal should be written in plain colloquial Tamil on one side of the paper only and on half margin. All articles which may be accepted will be paid for on publication. It will be understood that the publishers may at their discretion republish in book form articles which have been paid for at the time of publication in the journal.

No money should be paid to any Agent. All remittances and letters should be addressed to the Publishers Messrs. G. A. Vaidya Raman & Co., 3 & 4, Sunkurama Chetty Street, Georgetown, Madras.

## பிழைக்கும் வழி.

முக்கியமாய் விவஸாயம், வியாபாரம், கைத்தொழில், ப்ராஜா லக்ஷணம், வித்யா விஷயங்கள் அடங்கிய ஸகலருக்கும் உபயோகமான படங்களடங்கிய, ஒரு மாஸாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

**தபாற்கூலி உள்பட சந்தா விவரம்.**

| | உள் நாடு. | அந்நிய நாடு. |
|---|---|---|
| வருஷம் 1க்கு | .. 4 0 0 .. | 6 0 0 |
| தனிப்பிரதி | .. 0 6 0 .. | 0 8 0 |
| மாதிரி காபி | .. 0 2 0 .. | 0 3 0 |

சந்தாப்பணத்தை ஒரு ஏஜெண்டினிடத்திலும் கொடுக்கக்கூடாது. ஸகல பணத்தையும் எங்களுக்கு நேரில் அனுப்பிவிடவேண்டும்.

**விளம்பர விகிதங்கள்.**

| | | | |
|---|---|---|---|
| 1 பக்கத்திற்கு | மாஸம் | ஒன்றுக்கு | 5 0 0 |
| ½ பக்கத்திற்கு | ,, | ,, | 2 8 0 |
| ¼ பக்கத்திற்கு | ,, | ,, | 1 4 0 |
| ¼ பக்கத்திற்குக் குறைந்தால் மாஸம் ஒன்றுக்கு அங்குலம் ஒன்றுக்கு | | | 0 8 0 |

**வியாஸம் எழுதுகிறவர்கள் கவனிக்கவேண்டியவை.**

விவஸாயம், வியாபாரம், கைத்தொழில் விஷயங்களைப்பற்றி வியாஸங்கள் தேவை. அவைகள் ஒப்புக்கொள்ளப்பட்டால் பிரசுரமானதும், எழுதினவர்களுக்கு தக்க ஸம்பாவனை செய்யப்படும். ஒவ்வொரு வியாஸத்தையும் கடுதாசியின் ஒரேபக்கத்தில் ஒருபாதியை விட்டு மறுபாதியில் மட்டும் எழுதவேண்டும். பேசும் தமிழ்தான் தேவை. கடினமான தமிழ் உதவாது.

இந்தப் பத்திரிகையில் பிரசுரமாகும் வியாஸங்களுக்காக நிருபர்களுக்கு ஸம்பாவனை செய்திருக்கும் பக்ஷத்தில், அந்த வியாஸங்களை நாங்கள் எங்கள் இஷ்டப்படி எந்த விதம் வேணுமானாலும் மறுபடி பிரசுரிக்க அதிகாரமுண்டு என்பதை நிருப நேயர்கள் அறியவேணும்.

ஜி. எ. வைத்தியராமன் அண்டு கம்பெனி,
3 & 4, சுங்குராம செட்டித் தெருவு, மதராஸ்.

# பிழைக்கும் வழி.

# PRACTICAL LIFE.

புஸ்தகம் 3. Vol. 3. — விரோதிகிருது௵ புரட்டாசி௴—SEPTEMBER 1911. — ஸஞ்சிகை 9. No. 9.

## பொருளடக்கம்.

| | பக்கம் |
|---|---|
| **பத்திராதிபர் குறிப்புகள்** | |
| கரென்ஸி நோட்டுகள்-ஸ்ரீ மார்த்தாண்டப் பொருள்காட்சி-பாலங்கள்-மதுரையில் சாயங்கள்—நீதிப்படிப்பு-காகித கைகுட்டைகள்—பெருத்த லாபம்—ப்ராவிடெண்ட் பண்டு மசோதா-இந்தியாவிலுள்ள இருப்புப் பாதைகள்—பிஸ்கோத்துக்குப் பேர்பெற்ற பால்மர்ஸ் கம்பெனியார்-இன்ஷுரென்ஸ் மசோதா .. | 451-456 |
| **விசேஷ வியாஸங்கள்** | |
| தீண்டாத ஜாதியார் —ஸர் வி. வி. தேசிகாசாரியார் நைட் | 457 |
| ஊத்தங்கரை கோ ஆபரேடிவ் கான்பரென்ஸ் .. .. .. | 459 |
| படிக்காரம் அல்லது சீனக்காரம் —எஸ். முத்துஸாமி பிள்ளை .. | 462 |
| இந்திய விவஸாயத்தை சீர்படுத்துவதிலுள்ள கஷ்டங்கள் —மிஸ்டர் கௌச்மனுடைய ப்ரஸங்கம் | 464 |
| தஸ்தவேஜுகளை ரெஜிஸ்டர் செய்வதின் பயன்கள் .. .. .. | 466 |
| தாராபாய் ராணி —டி. எஸ். வைத்யநாதன் .. | 468 |
| **விசேஷத்திரட்டு** | |
| சாதம் சமைத்தல் .. .. | 473 |
| இளங்கைம் பெண்கள் .. .. | 473 |
| இடிமின்னலாயிருக்கும்பொழுது செய்ய வேண்டியவைகள் .. .. | 475 |
| தென்னந்தோப்பு வைத்தல் .. | 477 |
| **பத்திரிகை ஆராய்ச்சி** | |
| இந்தியாவின் ஊழியக்காரர்கள் .. | 481 |
| இந்தியாவில் பருத்தி ஆலைத்தொழில் | 481 |
| ஜப்பானின் கைத்தொழில் அபிவிருத்தி | 482 |
| **புஸ்தக ஆராய்ச்சி** .. .. | 483 |
| **சிறுவர் பகுதி** .. .. .. | 485-486 |
| **ஸ்திரீகள் பகுதி** .. .. | 487-488 |
| **பகுதிக் குறிப்புகள்** | |
| விவஸாயக் குறிப்புகள்—கைத்தொழில் குறிப்புகள்—வித்யா விஷயக் குறிப்புகள்—சாஸ்திரீயக் குறிப்புகள்—வைத்தியக் குறிப்புகள்—சட்டக் குறிப்புகள்—மனுஷ்யர்களைப் பற்றிய குறிப்பகள்—வேடிக்கையும் துக்கடாக் கதைகளும்—விநோதங்கள் .. | 489-498 |
| **மாஸ வர்த்தமானம்** .. .. | 499-503 |
| **மதராஸ் மார்க்கெட் நிலைவரங்கள்.** .. | 504 |

## CONTENTS.

| | PAGE |
|---|---|
| **Editorial Notes** | |
| CURRENCY NOTES-THE SRI MARTHANDA EXHIBITION-BRIDGES-DYES IN MADURA-MORAL INSTRUCTION-PAPER TOWELS BIG PROFITS-THE PROVIDENT SOCIETY'S BILL-INDIAN RAILWAYS-MESSRS. PALMERS OF BISCUIT FAME-THE INSURANCE BILL ... | 451-456 |
| **Special Articles** | |
| THE DEPRESSED CLASSES — Sir V. C. Desika Chariar, *Knight* ... ... | 457 |
| THE UTTANKARAI CO-OPERATIVE CONFERENCE | 459 |
| ALUM — Pandit S. Muthusami Pillai .. ... | 462 |
| DIFFICULTIES IN THE IMPROVEMENT OF INDIAN AGRICULTURE — Mr. Couchman's Lecture ... ... ... | 464 |
| ADVANTAGES OF REGISTRATION ... ... | 466 |
| RANI TARABAI — T. S. Vaidyanathan ... ... ... | 468 |
| **Selections** | |
| COOKING RICE ... ... ... ... | 473 |
| VIRGIN WIDOWS ... ... ... ... | 473 |
| PRECAUTIONS AGAINST THUNDER AND LIGHTNING ... ... ... ... | 475 |
| COCOANUT PLANTING ... ... ... | 477 |
| **Review of the Press** | |
| The Servants of India ... ... ... | 481 |
| The Cotton Mill Industry in India ... ... | 481 |
| The Industrial Progress of Japan ... ... | 482 |
| **Reviews of Books** ... ... ... ... | 483 |
| **The Boys' Section** ... ... ... ... | 485-486 |
| **The Ladies' Section** ... ... ... ... | 487-488 |
| **Departmental Notes** | |
| Agricultural Notes ... ... ... ... | 489 |
| Industrial Notes ... ... ... ... | 491 |
| Educational Notes ... ... ... ... | 492 |
| Scientific Notes ... ... ... ... | 493 |
| Medical Notes ... ... ... ... | 494 |
| Legal Notes ... ... ... ... | 495 |
| Personal Notes ... ... ... ... | 496 |
| Fun and Anecdote ... ... ... ... | 497 |
| Curiosities ... ... ... ... | 498 |
| **News of the Month** ... .. ... ... | 499-503 |
| **Madras Market Reports** ... ... ... | 504 |

## EDITORIAL NOTES.

## பத்திராதிபர் குறிப்புகள்.

### Currency Notes.

கரேன்ஸி நோட்டுகள்.—வருகிற அக்டோபர் மாஸம் முதல்தேதி முதல் கரென்ஸி நோட்டுகளை முழுசாகவோ பாதியாகவோ இன்ஷ்யூர் செய்யாமல் தபால் மூலமாய் அனுப்பக்கூடாது.

### The Sri Marthanda Exhibition.

ஸ்ரீ மார்த்தாண்டப் பொருள்காட்சி.—டில்லியில் தர்பார் நடக்கும் தினமாகிய வருகிற டிஸம்பர் மாஸம் 12-ம் தேதி செவ்வாய்க்கிழமையன்று புதுக்கோட்டையில் மகாராஜா டவுன் ஹாலில் விவஸாயம், கைத்தொழில், வித்யாவிஷயம் முதலியவைகளைப் பற்றிய பொருள்காட்சி ஒன்று வைக்கப்படும். அதை டிஸம்பர் மாஸம் முடிய எல்லாரும் போய்ப் பார்க்கலாம். அப்பொழுது இங்கிலீஷிலும் தமிழிலும் ப்ரஸங்கங்கள் செய்யப்படும். இவைகளோடு ப்ரஸங்கங்களைச்சேர்ந்த விஷயங்கள் நிதர்சனமாயும் காண்பிக்கப்படும்.

### Bridges.

பாலங்கள்.—ஏற்கனவேயுள்ள பாலங்களைப் பழுது பார்க்கவாவது அல்லது புதுப்பாலங்கள் அவசியமான இடங்களில் கட்டவாவது கையில் பணமில்லாமலிருக்கும் டிஸ்ட்ரிக்டு போர்டுகளுக்கு கவர்ன்மெண்டார் பண உதவி செய்யத் தயாராயிருக்கிறார்கள். ஆகவே, எந்தெந்த ஜில்லாக்களில் எங்கெங்கே அப்படிப்பட்ட வேலைகள் செய்யவேணுமோ அவைகளுக்கு என்ன செலவாகும், வேலை எத்தனை நாள் பிடிக்கும், டிஸ்ட்ரிக்டு போர்டார் எவ்வளவு பணம் கொடுக்கக்கூடும், என்று எல்லா விஷயங்களையும் எழுதியனுப்பும்படி கவர்ன்மெண்டார் உத்தரவுசெய்திருக்கிறார்கள்.

### Dyes in Madura.

மதுரையில் சாயங்கள்.—மதுரையில் துணிக்கு சாயம்போடுவது ஒரு பெருத்த தொழில். இந்தத்தொழிலுக்கு வேண்டிய சாயமெல்லாம் இதர தேசங்களிலிருந்து வருகிறது. முக்கியமாய் இங்கிலாந்தில் ஒரு கம்பெனியும் ஜெர்மனியில் இரண்டு கம்பெனிகளும் வேண்டிய சாயங்களை ஸப்ளைசெய்து வருகின்றன. இந்த மூன்று கம்பெனிகளும் சில வருஷங்களுக்கு முன்வரையிலும் ஒன்றுக்கொன்று போட்டிபோட்டு விற்றதினால் சாயத்தின்விலை மலிவாக இருந்தது. ஸமீபத்தில் இந்த மூன்று கம்பெனிகளும் கட்டுப்பாடு செய்துகொண்டு விற்பனைசெய்வதால் சாயத்தின்விலை ஏறிவிட்டது. இப்பொழுது ஜெர்மெனியிலிருந்து வேறொரு கம்பெனி இந்தக் கட்டுப்பாட்டில் சேராமல் வியாபாரம் செய்ய ஆரம்பித்திருக்கிறதாம். ஆகையால் சாயத்தின் விலை இறங்கலாமென்று தோன்றுகிறது.

### Moral Instruction.

நீதிப்படிப்பு.—தற்காலத்து பள்ளிக்கூடத்துப்பிள்ளைகள், பெரியோர்கள், ராஜாங்கத்தார் முதலியவர்கள்முன் நடந்துக்கொள்ளவேண்டிய வழிப்படி நடப்பதில்லையென்றும், அதற்குக்காரணங்களை கண்டுபிடித்து அவர்களுக்கு நீதிமார்க்க போதனைகள் செய்ய ஏற்பாடாக வேண்டுமென்றும், கவர்ன்மெண்டாரும், பல ப்ரமுகர்களும், சங்கங்களும், முயற்சிசெய்து வருகிறார்கள். தற்காலச் சிறுவர்கள் முன்காலத்துச் சிறுவர்களைப்போல படிந்து நடக்காததற்கு ஒரு காரணம் என்னவென்றால் முன்காலத்தில் சிறுவர்களுக்கு போதித்து வந்த சிறந்த நூல்களை விலக்கிவிட்டு புதுமுறைப்படி எழுதிய புஸ்தகங்களென்று சிபார்சு செய்யப்பட்ட புஸ்தகங்களை பள்ளிக்கூடங்களில் போதித்து வருவதே. தமிழ்ப்

பாஷையைப்பற்றியமட்டில் டக்தி ரஸம், நீதி நெறி முதலிய சிறந்த போதனைகள் அடங்கிய புஸ்தகங்கள் எவ்வளவோ முன்காலத்தில் சிறுவர்களுக்குப் பாடமாயிருந்தன. உதாரணமாக,

1. ஆத்திச்சூடி.
2. கொன்றைவேந்தன்.
3. வெற்றிவேற்கை.
4. முதுமொழிக்காஞ்சி.
5. உலகநீதி.
6. மூதுரை.
7. நல்வழி.
8. நன்னெறி.
9. இன்னாநாற்பது.
10. இனியவை நாற்பது.
11. நீதிவெண்பா.
12. நீதிநெறி விளக்கம்.
13. திரிகடுகம்.
14. நான்மணிக்கடிகை.
15. சிறுபஞ்சமூலம்.
16. ஏலாதி.
17. அறநெறிச்சாரம்.
18. ஆசாரக்கோவை.
19. பழமொழி.
20. நாலடியார்.
21. திருக்குறள்.

ஆகிய இவைகளையெல்லாம் தற்காலத்தில் எத்தனை ஸ்கூல்களில் சிறுவர் வாசித்து வருகிறார்கள். இவைகளைப் பழையபடி வழக்கத்தில் கொண்டுவந்தால் ராஜாங்கத்தாருக்கும் ஜனஸமுகத்துக்கும் குறைவுண்டாகாது.

**Paper Towels.**

காகித கைகுட்டைகள்.—நம்முடைய தேசத்தில் ஸ்திரீகளானாலும் ஸரி, புருஷர்களானாலும் ஸரி, சாப்பிட்டுவிட்டு கையை அலம்பினால் அலம்பின கையை உடுத்திக் கொண்டிருக்கும் புடவையிலும் சோமனிலும் துடைத்துக்கொள்வது ஸதாரண வழக்கம்' இங்கிலீஷ் தோரணையில் இருக்கிறவர்கள் சிறு கைகுட்டைகளை வைத்துக்கொணடு டிபன் முதலியவைகளைச் சாப்பிட்டுவிட்டு கையை துடைப்பார்கள். இவர்களிலேயே சிலர் கைகுட்டை வைத்துக் கொள்ளாமல் டிபனைச் சாப்பிட்டுவிட்டு டிபன் கட்டிக் கொண்டுவந்த காகிதத்திலோ, டேபில் மேல் போட்டிருக்கும் கம்பளியிலோ, அல்லது தலைக்குமேல் ஆடும் பங்காத் துணிகளிலோ கையைத்துடைத்துவிடுவார்கள். இவைகளெல்லாம் அநாசார வழக்கங்களே. ஆகையால் சாப்பிடும் பொழுதும் இன்னும் கைகால் கழுவும் பொழுதும் ஈரத்தைத் துடைக்க ஒரு சிறு கைகுட்டை வைத்துக்கொள்வது நலம். இப்படிப்பட்ட கைகுட்டைகள் சீக்கிரத்தில் அழுக்காகிவிடுவதால் அவைகளை அடிக்கடி வண்ணானுக்குப் போடவேண்டியிருக்கும். இது வாஸ்தவத்தில் கொஞ்சம் தொந்தரவோடு பணச்செலவுங்கூடத்தான். ஆகையால் இந்தத் தொந்தரவுகளை நிவர்த்திக்க அமெரிக்கா ஐக்கிய நாடுகளில் துணி கைகுட்டைகளை உபயோகிக்காமல் காகித கைகுட்டைகளை ஸாதாரண துணி கைகுட்டைகளைப் போலவே உபயோகிக்க ஆரம்பித்திருக்கிறார்கள். அவைகள் சிறியனவாயும் மிருதுவாயும் ஈரத்தை இழுக்கும்படியாயும் ஈரம்பட்டால் கிழியாதனவாயும் இருக்கின்றன. இவைகள் தனித் தனியாய் வேணுமானாலும், கிடைக்கும் அல்லது நீளமாக வாங்கி அப்பப்போ ஒருகுட்டையைக் கிழித்து கொள்ளலாம். ஒருதடவை ஒரு குட்டையை உபயோகித்ததும் அதை எறிந்து விடலாம். வண்ணானுக்குப்போட்டால் என்ன கூலிகொடுக்கவேணுமோ அதைவிட இந்தக்காகித கை குட்டையின் கிரயம் வெகு குறைச்சலாகவே

இருக்கிறதாம். ஆகலால் அதை எறிந்து விடுவதே செட்டான காரியம். இந்த கைகுட்டைகள் 250, அல்லது 500 சேர்ந்த கட்டுகளாக விற்கப்படுகின்றன. இந்த கைகுட்டைகளை முகத்திலும் கைகளிலும் துடைத்துக் கொள்வதால் யாதொரு கெடுதலும் நேரிடாது. சில கைகுட்டைகள் வாஸனையாகவே இருக்கின்றன. நாகரிகம் அதிகமாகி வருகிற இந்தியாவில் இது செலவாகுமென்று தோன்றுகிறது. ஊக்கமுள்ள வியாபாரிகள் இதைப் பற்றிவிசாரித்து வரவழைத்தால் முந்துகிறவர்களுக்கு நல்ல லாபம் கிடைக்குமென்று தோன்றுகிறது.

**Big Profits.**

பெருத்த லாபம்.—மேலே எழுதிய குறிப்பில் காகித கைகுட்டையை வாங்கி விற்ருல் அந்த வியாபாரத்தில் முந்துகிறவர்களுக்கு நல்ல லாபம் கிடைக்குமென்று சொன்னோம். இந்நாளில் வேறு விதத்தில் பெருத்தலாபம் கிடைக்கும் வியாபாரங்கள் இல்லையா என்பதைப் பொதுவாக விசாரிப்போம். பெரும் லாபம் ஸம்பாதிக்க வேணுமானுல் தற்போது இரண்டுவழிகள் தான் தோன்றுகின்றன. ஒன்று பெரும் முதல் போட்டு பலவிதச்சரக்குகளையும் வைத்துக்கொண்டு, வந்தவர்களுக்கு இல்லை என்று சொல்லாமல், விற்று வருவது. இந்த வியாபாரத்தில் கடைவாடகை, சிப்பந்திச்செலவு, கணக்குச்செலவு, இவைகள் குறைவாக அடங்குவதோடு சரக்குகளை ஏராளமாக வியாபாரத்துக்கு வாங்குவதில் கொள் முதலும் குறைவாகவே இருந்து, மொத்தத்தில் நல்ல லாபம் கிடைக்கிறது. இரண்டாவது புதிய தினுஸான வியாபாரங்களைச் செய்தல். நூதனமான சரக்குகள் விற்பனைக்கு வரும் பொழுது அதை சில வர்த்தகர்கள் மட்டுமே முதலில் விற்பார்கள். அதன்விலை விகிதங்களும்வியாபாரிக்கு மட்டும் தெரியுமே ஒழிய வாங்குகிறவர்களுக்குத் தெரிய ஹேதுவில்லை. ஆகையால் இப்படிப்பட்ட சரக்குகளின் மேல் வைக்கும் லாபமெல்லாம் பெருத்த லாபமாகவே இருக்கும். நாளாக நாளாக விலை விகிதங்கள் வெளிப்பட்டு, போட்டியும் ஏற்பட்டு, விலை இறங்கவே, லாபமும் இறங்கும். முன் காலத்தில் இஸ்பானியர்கள் அமெரிக்காவைக் கண்டுபிடித்தபோது அங்கே நல்ல பகட்டான துணிகளைக் கொண்டுபோய்க் காட்டினுர்கள். அப்போது அவ்விடத்து ஜனங்கள் அந்தத் துணிகளுக்குத் தங்கத்தை கட்டி கட்டியாகத் தூக்கிக் கொடுத்தார்களாம். இதை லாபமென்று சொல்லாமல் கொள்ளை என்றே சொல்லவேண்டும். இதை அறிந்து பல வியாபாரிகள் போய் விழவே, சரக்கின் விலை 'குட்டு' வெளிப்பட்டு, அங்கேயுள்ள ஜனங்கள் முதலில் ஒரு துணிக்குக்கொடுத்த தங்கத்துக்கு ஒரு மூட்டை துணிகொடுக்க வேணுமென்று பேரம் செய்ய ஆரம்பித்து விட்டார்கள். அவ்வளவு தூரம் போவானேன். பைஸிகிள் வியாபாரத்தைப் பார்க்கிறதானே. முதல் முதல் பைஸிகிள் வந்தவுடனே என்ன விலையாய் விற்றது? இப்பொழுது என்னவிலையாய் விற்கிறது? பைஸிகிள் வியாபாரிகள் முன்னே அடித்த லாபத்தில் இப்பொழுது பாதிகிடைக்கிறதோ ஸந்தேகம். வரவர பைஸிகிள் கடைகள் அதிகமாகவே விலையும் குறைந்து லாபமும் குறைந்துவிட்டது. ஆகவே, இந்தக் காலத்தில் ஏதோ வாரிக்கொட்டி விடலாமென்று எண்ணி வியாபாரம் தொடங்குவது அநேகமாய் கைகூடாமலே போகும். அதனுல் வியாபாரத்தில் லாபம் கிடையாதென்று சொல்வதாக எண்ணக்கூடாது. ஸ்வல்பலாபத்துக்குவிற்று முதலை எவ்வளவு புரட்டலாமோ அவ்வளவும் புரட்டினுல்

கூடியமட்டில் நல்ல லாபம் ஸம்பாதிக்கலாம். கோடீசுவரனுய் ஆகாவிட்டாலும் பணக்காரனுகலாம்.

**The Provident Society's Bill.**

ப்ராவிடெண்ட் பண்டு மசோதா.—மரண பண்டென்றும், கலியாண பண்டென்றும், பல விதமான பண்டுகள் தஞ்சாவூர் முதலிய ஜில்லாக்களில் கொஞ்சகாலமாக நடந்து வருவதை நேயர்கள் அறிவார்கள். இந்த பண்டுகளுக்கு மாஸம் ஒன்றுக்கு ஒரு ரூபாயோ அல்லது வேறு கட்டணமோ கட்டிக்கொண்டு வந்தால், எதற்காகக் கட்டணம் கட்டிவரப்பட்டதோ, அந்தக் கலியாணமோ, சாவோ, எந்த வருஷத்தில் ஏற்படுகிறதோ, அந்த வருஷத்தில் சேர்ந்தபணத்தில் செலவு போக பாக்கியை, வீதப்படிப்பிரித்துக் கொடுக்கிறார்கள். இப்படிப் பிரித்துக்கொடுப்பதில் கட்டணத் தொகைகூடக் கிடைப்பதில்லை. சில பண்டாபீஸ்க் காரர்கள் பணங்களை எடுத்துக்கொண்டு ஓடியே போய்விடுகிறார்கள். இப்படிப்பட்ட ப்ராவிடெண்ட் பண்டுகளை அடக்குவதற்கு இந்தியாசட்ட நிர்மாண ஸபையில் ஒரு மசோதாக் கொண்டுவரப் பட்டிருக்கிறது. அதுசட்டமாகி நடவடிக்கைக்கு வரும் பட்சத்தில் மேற்சொன்ன ப்ராவிடெண்ட் பண்டுகளெல்லாம் ரிஜிஸ்டர் செய்யப்பட வேண்டும். பண்டுகளின் ரூல்களையும் ரிஜிஸ்ட்ராரிடத்தில் தாக்கல் செய்யவேண்டும். தவிர, காலாகாலங்களில் ரிஜிஸ்ட்ரார்களுக்குக் கணக்குகளையும் ஒப்புவிக்க வேண்டும். இவைகளையெல்லாம் பார்த்து ரிஜிஸ்ட்ராருக்கு ஸரியான பண்டு அல்லவென்று தோன்றினுலும் ஸரி, ரூல்படி நடத்தப் படவில்லை யென்று தோன்றினுலும் ஸரி, அல்லது மோசம் நடக்கிறதென்று தோன்றினுலும் ஸரி, அவர் ஒரு "ஆக்சுயெரி" என்று சொல்லப்படும் நிபுணக்கணக்கரை ஏற்படுத்தி, பண்டு விஷயங்களை பரிசோதிக்க செய்யலாம். அந்த "ஆக்சுயெரி" நல்ல அபிப்பிராயம் கொடுத்தாலொழிய பண்டையே ரிஜிஸ்ட்ரார் கலேத்துவிடலாம். இது ஏழைகள் பணத்தைப் பாதுகாக்கும் நல்ல சட்டமாகும்.

**Indian Railways.**

இந்தியாவிலுள்ள இருப்புப்பாதைகள்.—1910-௵த்தில் 602 மைல் தூரம் இருப்புப் பாதைகள் போடப்பட்டன. அதைத்தவிர இஷி ௵த்தில் 350மைல் புதிதாக பாதைபோடும் படியாகவும் உத்தரவாயிருக்கிறது. ஆகவே இது வரையிலும் இந்தியா முழுவதிலும் ஸுமார் 32,399 மைல் ஏற்கனவே போடப்பட்டும் 2,765 மைல் புதிதாகப் போடும்படியும்உத்தரவாகியிருக்கிறது.

இந்தியா முழுவதிலும் போடப்பட்டுள்ள இருப்புப் பாதைகளுக்காக ஏறக்குறைய 447 கோடி 49 லட்சம் ரூபாய் செலவு செய்திருக்கிறார்கள்.

இந்தியாவில் இருப்புப்பாதைகளினுல் உண்டான மொத்த வருமானம் 1909ம் வருஷத்தில் 4706 லக்ஷம் ரூபாய். 1910 ௵த்தில் 5,114 லக்ஷம் ரூபாய். அதாவது முன் வருஷத்தைவிட 408 லக்ஷம்ரூபாய் ஜாஸ்தி. செலவு எல்லாம் போக மீதியாயுள்ள வருமானம் ரூ 2398 லக்ஷம்.

1909 ௵த்தில் ரெயில் மார்க்கமாய் பிரயாணம் செய்த ஜனங்களின் மொத்தம் 3,290 லக்ஷம். 1910 ௵த்தில் 3,720 லக்ஷம். அப்படிப் பிரயாணம் செய்ததனுல் உண்டானவருமானம் 1909௵த்தில்ரூ 1566 லக்ஷம். 1910 ௵த்தில் ரூ. 1,712 லக்ஷம். 1909 ௵த்தைவிட 1910 ௵த்தில் 3 வது வகுப்பில் 410 லக்ஷம் ஜனங்கள் அதிகமாய்ப் பிரயாணம் செய்திருக்கிறார்கள்.

பிரயாணிகளுக்காக ஏற்படுத்தப் பட்ட சார்ஜு மனிதன் ஒருவனுக்கு மைல் ஒன்றுக்கு ஸராஸரி $2\frac{3}{4}$ பைஸா வாகிறது.

1910ஸூல் ரயில் மார்க்கமாய் 660 லக்ஷம் டன் ஸாமான்கள் அனுப்பப்பட்டன. அதனால் வருமானம் 3043 லக்ஷம் ரூபாய். அதாவது முந்திய வருஷத்தை விட 50 லக்ஷம் டன் ஸாமானும் 231 லக்ஷம் ரூபாயும் அதிகம்.

ஷை ஸூத்தில் இந்தியாவிலுள்ள நிலக்கரிச் சுரங்கங்களி லிருந்து ஸுமார் 110 லக்ஷம் டன் கரி எடுத்து இந்தியாவிலுள்ள துறைமுகங்களுக்கு அனுப்பப் பட்டிருக்கிறது. அப்படி அனுப்பியதால் இங்கிலாந்திலிருந்தும் இதர தேசங்களிலிருந்தும் இந்தியாவுக்கு அனுப்பப்படும் நிலக்கரி 174,000 டன்வரையில் குறைந்திருக்கிறது.

ஸாமான்களை ரெயில் மார்க்கமாய்க்கொண்டு போவதற்காக ஏற்படுத்தப்பட்ட சார்ஜு மைலுக்கு ஸுமார் 5 பைஸா வாகிறது.

1910 ஸூத்தில் இந்தியா ரயில்வே உத்யோகஸ்தர்களைக் கணக்கிட்டுப் பார்த்ததில் மொத்தமாய் 543,493 மனிதர்கள் வேலை செய்துகொண்டிருந்தார்கள். இதில் 7411பேர்கள்ஐரோப்பியர், 9583 பேர்கள் ஆங்கிலேய-இந்தியர்கள்; மற்றவர்கள் இந்தியர்கள்.

1910 ஸூ டிசம்பர் மீ 21உ தென் இந்தியா ரெயில்வே கம்பெனியார் 1945 ஸூ டிசம்பர் மீ 31உ வரையில் தாங்களே கம்பெனியை நடத்தும்படி புதிதாக ஒரு எக்ரீமெண்டு இந்தியமந்திரியோடு செய்து கொண்டிருக்கிறார்கள். அதன் பிரகாரமாக இப்போது வேலைநடத்திவருகிறார்கள்.

**Messrs. Palmers of Biscuit fame.**

பிஸ்கோத்துக்குப்பேர்பெற்றபால்மர்ஸ் கம்பெனியார்.—இங்கிலாந்திலும் இந்தியாவிலும் பிஸ்கோத்துக்குப் பேர்பெற்ற வியாபாரிகளாகிய மெஸர்ஸ் பால்மர் கம்பெனியார் தாங்கள் பிஸ்கோத்து செய்யும் ரீடிங்க் பட்டணத்தில் ஒரு ஸர்வகலாசாலை ஸ்தாபிப்பதற்காக இரண்டுலக்ஷம் பவுன் அதாவது 30லக்ஷம் ரூபாய் நன்கொடை கொடுத் திருக்கிறார்களாம். வியாபாரத்தில் பணம் ஸம்பாதிப்பது பெரிதல்ல. ஸம்பாதித்த பணத்தை நல்ல வழியில் உபயோகப்படுத்தத் தெரியவேணுமே! நம்முடைய தேசத்தில் இதுவரையில் இப்படிப்பட்ட தருமம் செய்தவர் மிஸ்டர் ஜெ.என் டாட்டா ஒருவர்தான். அவருடைய 30லக்ஷம் ரூபாய் நன்கொடையால் பங்களூரில் அமைக்கப்பட்ட டாட்டா சாஸ்திர ஆராய்ச்சிசாலை ஸமீபத்தில்தான் கட்டி முடிந்து திறக்கப்பட்டது.

**The Insurance Bill.**

இன்ஷூரென்ஸ் மசோதா.—இங்கிலீஷ் படித்தவர்கள் 'இன்ஷூரென்ஸ்' என்றால் இன்னதென்று நன்றாய் அறிவார்கள். இது பணம்சேர்ப்பதற்கான ஒரு உபாயம். அனேக குடும்பஸ்தர்கள் ஸம்பாதிப்ப தெல்லாம் செலவழிந்துபோய் பிற்காலத்தில் வயதான பிறகு உழைத்து ஸம்பாதிக்க சக்தியில்லாமல் தரித்திரத்தால் வருந்துகிறார்கள். இப்படிப்பட்டவர்கள் ஸம்பாதிக்கும் காலத்தில் வருஷம் ஒன்றுக்கு சில வருஷங்களுக்கு ஸ்வல்பக் கட்டணம் கட்டிவந்தால் ஒரு குறிப்பிட்டவயதில் கட்டணம் கட்டி வந்தவனுக்கோ அல்லது அவனுக்குப் பின்பு அவனுடைய வார்ஸுகளுக்கோ கட்டணத்துக்குத் தகுந்தபடி குறிப்பிட்ட தொகை கொடுப்பதற்காக சில வியாபாரக் கம்பெனிகள் ஏற்பட்டிருக்கின்றன. ஒரு உதாரணத்தை எடுத்துக்காட்டினால் இந்த விஷயம் நன்றாய் விளங்கும். ஒருவன் ஸுமாராய் ஸம்பாதிக்கிறான். வந்ததெல்லாம் செலவழிந்துபோகிறது. வயது காலத்தில் தன

க்கோ அல்லது தனக்குப்பிற்பட்டு தன்னுடைய குழந்தைகளுக்கோ ஆஸ்தி ஏற்படும் என்று எண்ணஹேதுவில்லை. அல்லது அப்படி ஏற்பட்டாலும் அது ஸ்வல்பமாகவே தான்இருக்குமென்று தோன்றுகிறது. குழந்தைகளுககு 1000 ரூபா ஆஸ்தியாவது வைக்க வேணுமென்ற ஆஸ்தையிருக்கிறது. இவனுக்கு தற்போது 45 என்று வைத்துக்கொள்வோம். 55 வயது வரையில் சரீரம் திடமாயிருந்து ஸம்பாதிக்கலாமென்று தோன்றுகிறது. இவன் என்னசெய்யக் கூடுமென்றால், ஒருகம்பெனியில் இன்ஷ்-ஊர் செய்தால் 1000 ரூபாய்க்கு வருஷம் ஒன்றுக்குரூ72 முதல் 84 வரையில், கம்பெனிக்குத் தக்கபடி, கட்டணம் செலுத்தும் பட்சத்தில், இவன் செத்த பிறகு இவனுடைய வார்ஸுகளுக்கு 1000 ரூபாய் அந்தக் கம்பெனியார் கொடுப்பார்கள். கட்டணம் கட்டிய மறுவருஷத்தில் செத்துப் போனாலும் 1000 ரூபாய் கொடுத்துவிடுவார்கள். மொத்தத்தில் 10 வருஷத்துக்குமேல் கட்டணம் கொடுக்கவேண்டியதில்லை.

இன்ஷ-ஊரென்ஸ் கம்பெனிகள் என்ன விதமாய் கட்டணத்தை நிர்மாணம் செய்கிறார்களென்றால், அவர்கள் அந்தந்த தேசங்களில் பொதுவாக ஜனங்களுடைய ஆயுள் காலமென்ன என்று கணக்கிட்டு பார்த்து ஒரு ஸரா ஸரி ஏற்படுத்திக்கொள்ளுகிறார்கள். கட்டணமாகக் கிடைக்கும் பணங்களுக்கு ஸாதாரணமாக வட்டி என்ன கிடைக்கும், இன்ஷ-ஊரென்ஸ் தொழிலை செய்வதற்கு செலவு என்ன ஆகும், என்று இப்படிக்கெல்லாம் கணக்குப் போட்டுக் கொள்கிறார்கள். ஒருவன் 1000 ரூபாய்க்கு இன்ஷ-ஊர் செய்யவேண்டுமென்றால், அவன் கேட்கும் காலத்தில் அவனுக்கு என்னவயதோ அதை மேலேசொன்னஸராஸரி வயதிலிருந்து கழித்து, பாக்கிவருஷங்களில் எத்தனை ரூபாய் மேனிக்கு வருஷாவருஷம் கட்டணம் கட்டினால் அவையெல்லாம்சேர்ந்து 1000ம்ரூபாயாகுமென்று பார்த்து, கட்டணத்தை நிர்மாணம் செய்கிறார்கள்.

இன்ஷ-ஊரென்ஸ் வியாபாரம் நல்ல லாபம் தரக்கூடியதாகையால் அநேகம் பேர்கள் தங்களுடைய ஸ்வய நலத்தையே நாடிகட்டணம் கட்டுவோர்களுடைய பணங்களெல்லாம் மூழ்கிப்போகும்படியாக கம்பெனிகளை ஏற்படுத்தி நடத்தி வருவதால் அப்படிப்பட்ட போலிக் கம்பெனிகளை அடக்க இந்தியா கவர்ன்மெண்டார் தங்களுடைய சட்ட நிர்மாண ஸபையில் ஒரு மசோதாக் கொண்டு வந்திருக்கிறார்கள். இதன் முக்கிய அம்சங்கள் என்னவென்றால், இந்தியாவில் வியாபாரம் செய்யும் இன்ஷ-ரன்ஸ் கம்மெனிகள் கவர்ன்மெண்டாருக்கு கணக்கு ஒப்புவிக்கவேணும். ஐந்து வருஷத்துக்கு ஒருதடவை "ஆக்சுயெரி" என்று சொல்லப்படும் ஒரு தக்க கணக்கரைக்கொண்டு கணக்குகளைப்பரிசோதித்து கவர்ன்மெண்டுக்கு ஒரு கணக்கு அனுப்பவேண்டும். இன்ஷ-ஊரென்ஸ் கம்பெனி, வியாபாரம் தொடங்குவதற்கு முன்னால், கவர்ன்மெண்டாரிடத்தில் லக்ஷ ரூபாய் டிபாஸிட் செய்யவேண்டும். இங்கிலாந்தில் ஏற்பட்டு இந்தியாவில் வியாபாரம் செய்யும் இன்ஷ-ஊரென்ஸ் கம்பெனிகளுக்கு மேற்சொன்ன நிபந்தனைகள் ப்ரயோகிக்கப்படமாட்டா. ஏனென்றால் அவைகள் இங்கிலாந்தில் கவர்ன்மெண்டுக்கு தங்கள் கணக்குகளை ஒப்பிவிக்கிறார்கள். தவிர, அங்கே மூன்று லக்ஷ ரூபாய் டிபாஸிட்டும் செய்திருக்கிறார்கள்.

மேற்சொன்ன மசோதா சட்டமாகி அமுலுக்கு வரும் பட்சத்தில் ஏழை ஜனங்கள், நெற்றிவேர்வை நிலத்தில் விழுந்து கஷ்டப்பட்டு ஸம்பாதித்த பணங்களை இழக்காமல், அவர்களும் அவர்களைச் சார்ந்தவர்களும், ஜீவனம் செய்ய ஹேதுவாகும்.

## THE DEPRESSED CLASSES.

BY

SIR V. C. DESIKA CHARIAR, *KNIGHT*.

## தீண்டாத ஜாதியார்.

---

இப்பொழுது கொஞ்சகாலமாய், தீண்டாத வகுப்பினரைப்பற்றி உயர்ந்த ஜாதியில் சிலரும் பாதிரியார்களில் சிலரும் கூட்டங்கள் கூடி ப்ரஸங்கங்கள் செய்துவருகிறார்கள். தவிர, பத்திராதிபர்களும் பத்திரிகைகளில் எழுதிவருகிறார்கள். நமது தேசத்தில் பிறந்து வளர்ந்து, ஜாதிவித்யாஸத்தால் உண்டாகும் கொடுமைகளுக்குக் கீழ்ப்பட்டு நாளுக்கு நாள் க்ஷீணமடைந்து அவிவேகத்தாலும் அசுத்த நடைவடிக்கைகளாலும் அவமதிக்கப்பட்டு கஷ்டஜீவனம் செய்துகொண்டு மிருகங்களுக்கு ஒருபடி மாத்திரம் மேலான ஸ்தானத்திலிருப்பது போல நமது மாகாணத்தில் ஒவ்வொரு ஜில்லாக்களிலும், பறையரென்றும், பள்ளரென்றும், மாலரென்றும், மாதிகளென்றும், ஏனாதியென்றும் இப்படிப்பட்ட இழிவான பெயர்களால் கூப்பிடப்பட்ட ஜனங்களை எப்படி அபிவிருத்தி செய்யலாம் என்கிற ஆவலும் எண்ணமும் நமது ராஜாங்கத்தாருக்கும் உண்டாயிருக்கிறது. ஆனால் நமது முன்னோர்கள் செய்த தவத்தின் பயனாலோ அல்லது நம்முடைய விசேஷ அதிர்ஷ்டத்தாலோ இந்தியா தேசத்துக்கு அதிபதிகளாக இருக்கும் ஆங்கிலேய துரைத்தனத்தார் இந்த தேசத்திலுள்ள பலஜாதி பல வகுப்பினர்களையும், விசேஷ வித்யாஸமில்லாமலும், நிஷ்பக்ஷபாதமாகவும் நடத்திவருகிறார்களென்பதில் ஸந்தேகமில்லை. ராஜாங்கத்தாரால் ஏற்பட்டிருக்கும் சட்டத்திட்டங்கள் எல்லாருக்கும் பொதுத்தான். இன்னும் யோசிக்குமளவில் சில சட்டங்கள் பல சாலிகளிடமிருந்தும், தனாட்டியர்களிடமிருந்தும், பல ஹீனர்களையும், பொருள் இல்லாத கீழ்மை தசையில் உள்ளவர்களையும், காப்பாற்றும் பொருட்டு அந்தந்த நிலைமைக்குத் தக்கப்படியான ஸாதாரணம் போலல்லாமல் ப்ரத்யேக சட்டங்களையும் செய்திருக்கிறார்கள். அதாவது, ஒருவன் கொலைக் குற்றமோ, களவுக் குற்றமோ, செய்தால் அப்படிக்குற்றம் செய்தவன் என்ன ஜாதியானென்று ராஜாங்கத்தில் விசாரிக்கிறதில்லை. அவன் உயர்ந்த ப்ராம்மண ஜாதியில் பிறந்தவனாயிருந்தாலும் ஸரி, அதிகீழ்மையாய் நினைக்கப்பட்ட ஹீனஜாதியனாயிருந்தாலும் ஸரி, தண்டனை ஒன்றுதான். மேலும் பப்ளிக் ரோட்டுகளில் ஜாதிவித்யாஸமில்லாமல் எல்லாரும் நடக்கலாம். பப்ளிக் குளங்கள், நதிகள், இவைகளில் எல்லாரும் ஸ்னானபானங்கள் செய்யலாம். கவர்ன்மெண்ட்டு பாடசாலைகளில் எல்லாஜாதி சிறுவர்களும் சேர்ந்து படிக்கலாம். ராஜாங்கத்தில் எந்த உத்யோகத்துக்கும் ஜாதிவர்ணா சிரமமில்லாமல் வேலை பார்க்கத் திறமையுள்ள யாரையும் ஏற்படுத்தலாம்.

சில மாஸங்களுக்கு முன் இந்நகரத்தில் கூடிய ஒரு மகா ஸபையில் அனேகர் ப்ரஸங்கம் செய்ததில் தீண்டாத ஜாதியாரை அபிவிருத்திக்குக் கொண்டுவர வேணுமானால் அவர்களைப் படிப்பிக்கவேணுமென்று ஒருவிதமான தீர்மானமானதாகத் தோன்றுகிறது. படிப்பு என்பதை அனேக வகையாகப்பிரிக்கலாம்.

1. எழுதப்படிக்கவும், கூட்டவும், கழிக்கவும் தெரிந்துகொள்ளுதல். இது ஸகல ஜனங்களும் ஆண்பெண் வித்யாஸமில்லாமல் தெரிந்துகொள்ளவேண்டியது. இதைத்தான் "எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்" என்று ஔவையார் சொன்னது. மனுஷ்

யாளுக்கு இரண்டு கண்கள் எவ்வளவு உபயோகமோ அதேமாதிரி எழுதப்படிக்கவும், கூட்டவும், கழிக்கவும் தெரிந்துகொள்ளுதல் மூலாதாரமான படிப்பு. இது ஸாதாரணமாய் 2 அல்லது மூன்று வருஷங்களில் செம்மையாய்த் தெரிந்துகொள்ளக்கூடியது. இதுதான் மற்ற எவ்விதமான விசேஷப்படிப்புகளுக்கும் அஸ்திவாரமாயிருக்கும். யோசித்துப்பார்த்தால் இத்தேசத்தில் தீண்டக்கூடிய உயர்ந்த ஜாதியென்று சொல்லிக்கொள்வோரில் 100ல் 80 பேர், மேலே சொல்லிய எண் எழுத்து என்கிற இரண்டுகண்ணுமில்லாத குருடர்களாகத் தானிருக்கிறார்கள். இது விஷயத்தில் தான் ராஜாங்கத்தார் முக்யமாயும் அந்தந்த ஜில்லாக்களிலுள்ள தனிகர்களும், ப்ரமுகர்களும், கூடியவரையில் எல்லா தானங்களைவிட வித்யாதானம் சிறந்ததென்று நினைத்து அங்கங்குள்ள சிறுவர்களுக்கு மூலாதாரமானபடிப்பை கட்டாய மாகவும், ஏழைகளிடத்தில் சம்பளம் வாங்காமலும் பரவும்படி செய்யவேண்டியது. இது விஷயத்தில் ராஜாங்கத்தார்

"சொல்வது யாருக்கும் அறிது,
"சொல்லியவண்ணம் செய்தலரிது,"

என்கிற நியாயப்படி, இதற்கு வேண்டிய திரவியம் தற்காலத்தில் இல்லை யென்றும், உபாத்தியாயர்கள் கிடைப்பதரிது என்றும் சொல்லுகிறதாகத் தெரிகிறது.

2. மேலே சொன்ன மூலாதாரமான படிப்புக்குமேல் இரண்டாவதுபடி என்று சொல்லும் படிப்பு ஸெகண்டரிப்படிப்பு. அது ஆவசியத்தில் கொஞ்சம் கீழ்ப்பட்டதேனும் ஜீவனார்த்தமானப் படிப்பா யிருக்கிறது. மனுஷ்யாளுக்கு முக்யமாய் வேண்டிய ஆறு ஸங்கங்களில் ஒன்று (அர்த்தகரீச வித்யா) பொருள் ஸம்பாதிக்கக்கூடிய வித்தை. இதைப் பலவிதமாகப் பிரிக்கலாம். முதலில் இலக்கிய இலக்ஷண விஷயங்களில் விசேஷப்பயிற்சியடைந்து ஒருவிதமான சாஸ்திரமும் படியாமல் வெகு திறமையோடு எழுதவும் பேசவும் தெரிந்துகொள்ளுதல். இது ராஜாங்கத்தில் ஆரம்பம் முதல் நடுத்தரமான உத்யோகங்களை திறமையுடன் பார்க்கவேண்டிய யோக்யதையைக் கொடுக்கும். மேலும், தர்க்கம், நியாயம் கணிதம், வைத்தியம், ரஸாயனம், முதலான சாஸ்திரங்களைக் கற்க வேண்டுபவர்க்கும் அவசியமானப் படிப்பா யிருக்கிறது. இதல்லாமல், டெக்னிகல் படிப்பு என்று சொல்லப்படும் ஸகலகலைகளும், கைத்தொழில்களும் தெரிந்துக் கொள்வதும் ஜீவனார்த்தந்தான். இதில் தச்சுவேலை முதலான கைத்தொழில்களும், படமெழுதுதல், சூக்ஷமலிகிதம், ஸங்கீதம், இன்னும் இதர சித்திர வேலைகள் ஆகிய படிப்புகளை அவனவன் திறமைக்கும் தகுதிக்கும் தக்கப்படி கற்பிக்கலாம்.

மேலே சொன்ன மூலாதாரமான படிப்பு கற்றவர்களில்பலர் அந்தப்படிப்போடு த்ருப்தியடைந்து முன்னோர்தேடிய பொருளைக்கொண்டோ, பூமிகளைப்பயிர்செய்தோ, ஜீவிக்கக்கூடும். ஆனாலும் வெகுசாய் இரண்டாவதானபடிப்பை முக்யமாய் பெரும்பான்மை யோருக்குச் சொல்லிக்கொடுக்கவேணும். இந்த இரண்டுக்கு மேல்தான் விசேஷப்படிப்பு வேண்டியவர்கள் முதல் க்ரேட் காலேஜ்களில் சேர்ந்து சாஸ்திரங்களைப்படித்து, விசேஷ அபிவிர்த்தி யடைந்து, செல் வாக்குள்ளவர்களாகவும், ராஜாங்கத்திலுள்ள பெரிய வேலைகளைப் பெற்றும், லாயர்களாகவும், டாக்டர்களாகவும் ஆகக் கூடும்.

நாம் ப்ரக்ருதத்தில் எழுத ஆரம்பித்த அடிமை வகுப்பினரை அபிவிருத்திக்குக் கொண்டுவரும் விஷயத்தில் அவர்களை இரண்டு

தரமாகப் பிரிக்கலாம். அதாவது, 15 வயதுக்குள்பட்ட சிறுவர்களும் அதற்கு மேற்பட்டவர்களுமாகப் பிரித்தால், பதினைந்து வயதுக்கு மேற்பட்டவர் 100-ல் சுமார் 60 அல்லது 70-பேர் தேறலாம். இவர்களுக்கு எண்ணும் எழுத்தும் கூட சொல்லிக்கொடுப்பது அஸாத்தியமில்லாவிட்டாலும் வெகு கஷ்டஸாத்யமாகும். அவர்கள் இப்பொழுதுள்ள ஜீவனத்தைவிட்டு வேறே தொழில்களைத் தெரிந்துக் கொள்ளவும் இஷ்டப்படமாட்டார்கள். இவர்கள் பெரும்பான்மையா யிருக்கும்போது எவ்விதமான அபிவிருத்திசெய்யமுடியும்? எனக்குத்தோன்று மளவில் இவர்களுக்கு இப்போது கிடைக்கும் சம்பளத்தைவிட கொஞ்சம் அதிகமான சம்பளங்கள் கிடைக்கும்படியாய் ப்ரதான பட்டணங்களிலாவது இங்கிலீஷில் 'எம்ப்ளாய்மெண்ட் பீரோ' என்று சொல்லப்படும் ஒருவிதமான நிர்வாக ஸபைகள் எற்படுத்தி அவைகள் மூலம் அவர்களுடைய தற்கால நிலைமையை விருத்திசெய்யலாம். அதேமாதிரியாக கீழ் ஜாதியாருக்கு வீடுகள் கட்டிக்கொள்ள நிலங்கள் இனமாக ராஜாங்கத்தாரும், முனிஸிபாலிடியாரும் கொடுக்கலாம். சென்னைப்பட்டணம் முனிஸிபாலிடியார் கொஞ்ச வருஷங்களாக பறச்சேரிகளில் சிலவற்றை அடியோடு எடுத்துவிட்டு சுகாதாரமானவும் வாஸயோக்யமானவுமான புதுக்கட்டிடங்களைக்கட்டி சுலபமான குடிக்கூலிக்கிவிட்டு வருகிறார்கள். இதேமாதிரி வெளி ஜில்லாக்களிலும், முனிஸிபாலிடியார் செய்யத் தொடங்கினால் பெரிய க்ராமங்களிலுள்ள மிராசுதார்களும் தங்கள் ஸ்வய ப்ரயோஜனத்தை யனுஸரித்தாவது, தங்கள் நிலங்களைப் பயிரிட்டும், தங்கள் மாடு கன்றுகளை மேய்த்துப் பாதுகாத்துவரும்படி ஆள்களுக்காவது சுமாரான குடியிருப்புகளை கட்டிக்கொடுப்பார்கள். இது விஷயத்தில் ஜமீன்தாரர்கள் ரொம்பவும் செய்யக்கூடும். 15-வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு இவ்வளவுதான் செய்யமுடியும். அவர்களை அடியோடு குடிக்காமலிருக்கும்படி செய்யவும் முடியாது. ஆனால் அவர்கள் புத்தி வேறு விதத்தில் ப்ரவேசிக்கும்படியாக பாதிரிகள் செய்வதுபோல இதராளும் அவர்களை கூட்டம் கூட்டி புத்திமதிசொல்லி கதைகள் மூலமாயும் ஸங்கீதம் முதலான விநோதங்களினாலும் பறச்சேரிகள் ஸமீபத்தில் கள்ளு சாராயக்கடைகள் வைக்க ராஜாங்கத்தாரை லைஸென்ஸ் கொடுக்க வொட்டாமலும் தடுத்து அவர்களை சீர்திருத்த எத்தனிக்கலாம். 15 வயதுக்குள்பட்டவர்களுடைய சீர்திருத்தலைப்பற்றி விவரமாக பின்னாடி எழுதுகிறேன்.

வி. வி. தேசிகாசாரி.

---

## THE UTTANKARAI CO-OPERATIVE CONFERENCE.

## ஊத்தங்கரை கோஆபரேடிவ் கான்பரென்ஸ்

---

[சேலம் ஜில்லா ஊத்தங்கரை தாலூக்கா பைர் நத்தத்தில் நடந்த கோஆபரேடிவ் கான்பரென்ஸில் கம்பெநெல்லூர் ஜமீன்தாரும் கான்பரென்ஸின் உபசரணைக் கமிட்டி சேர்மேனுமான ம-ா-ா-ஸ்ரீ க. சேஷகிரி ராயர் அவர்கள் செய்த உபந்யாஸத்தின் ஸாரம்.]

* * * * *

கான்பரென்ஸ் கூடுவதின் ப்ரயோஜனம் என்னவென்றால்:—

வெகு தூரங்களிலிருக்கும் நாம் எல்லோரும் ஒரு பொதுவான இடத்தில் சேர்ந்து குடிகள் ஏழ்மை அடைய, க்ஷாமம் முதலா

னவை வர காரணம் இன்னதென்று அவா ளவாள் பேசிக்கொள்ளவும், ஒருவருக் கொரு வர் தங்களுடைய அனுபவத்தை எடுத்துச் சொல்லவும், குடிகளுக்காக கவரன்மெண்டா ரால் ஏற்படுத்தப் பட்ட கோ ஆபரேடிவ் பாங்கிகளின் பிரயோசனத்தைப் பற்றிக் கூடி பேசவும், அவாளவாள் புத்திக்குத் தோணு கிறபடி அபிவிருத்தி செய்யும் பொருட்டு ஆலோசிக்கவும் ஒரு ஹேதுவாய் இருக்கும்.

எறும்பு முதல் அரசுவரையில் எல்லாருக் கும் தேவையானது உணவு. அந்த உண வுக்கு கிருஷி அவசியமானது. போதுமான வரையில் கிருஷி இல்லாவிட்டால் க்ஷாமங் கள் ஸம்பவிக்கும். கிருஷிகனுக்கு திரவிய ஸகாயம் அதிக அவசியமானது. இவைகளுக் கெல்லாம் முதன்மையானது குடிகளில் ஐக் கியமும் சிக்கனமும் இருக்கவேண்டியது. அப் பேர்ப்பட்ட ஐக்கியம் மனு மாந்தாதாக் களுக்குப் பிந்தி ஆண்டுவந்த சில ஹிந்து ராஜாக்கள் காலத்தில் கூட, கூட்டுறவு, ஐக்கியம், லேவாதேவி, கிருஷிகர்களில் ஒருவ ருக்கொருவர் உதவி செய்தல், விவஸாயத்துக் காக ஸகல ஸௌக்கியமும் செய்துக் கொள்ளு தல், கிராமப் பஞ்சாயத்து, கூட்டுச் சீட்டு, பொதுச் செலவுக்காக திரவியம் சேர்த்தல், முதலானவைகள் இருந்து இப்பொழுது வட மாகாணங்களில் பஞ்சாப் முதலான இடங்களி லும் சென்னைராஜதானியில் செங்கல்பட்டு, தஞ்சாவூர், திருநெல்வேலி ஜில்லாக்களில் சில வைகளிலும் தொன்றுதொட்டு நடந்து வரு கிறதே நிதரிசனம்.

ஏதோ ஹிந்து ஜனங்களுடைய கஷ்டவசத் தால் அந்தவழக்கங்கள் நின்றுபோய்விட்டன. அதனால் கிராமங்களில் கிருஷிகர்களின் ஐக் கியமில்லாமல் ஒருவருக்கொருவர் ஸகாயம் செய்துக்கொள்வது நின்றுபோய் விளைவு குறைந்து, தேசத்தில் க்ஷாமங்கள் வரநேர்ந்து, நாளடைவில் கிருஷியும் குறைந்துவிட்டது.

சுமார் 35 வருஷத்துக்கு முந்தி ஸம்பவித்த க்ஷாமத்துக்குப் பிறகு அதன் காரணத்தை அறிந்து இந்துதேசத்தின் குடிகளுடைய நல்ல அதிர்ஷ்டவசத்தால் கிடைத்திருக்கும் இந்த கவர்ன்மெண்டார் அதைத் தடுக்க நன்றாய் முயற்சி எடுத்துக்கொள்ளத் தொடங்கினார்கள். இச்சபையில் வந்திருக்கும் சரித்திரம் படித்த அநேகர்களுக்கு மற்ற எல்லா கவரென்மெண் டுகளை விட நம்ம ப்ரிடிஷ் கவரென்மெண்டு ஸர்வ உத்தமமானதென்றும் இதனால் நாம் சொல்ல முடியாத நன்மைகள் அடைந்திருக் கிறோமென்றும் தெரிந்திருக்கலாம். அவை களில் எல்லாவற்றிலும் ஒன்றாகிய கோ ஆபரேடிவ் ஆக்டு ஏற்படுத்தினது ஒரு நிதரிசனம்.

இந்தியா தேசத்தின் வறுமைக்குக்காரணம் இன்னதென்றும், அது எவ்விதம் நீங்குமென் றும், நம்தேசத்திற்கு மாதா, பிதாக்களைப் போலிருந்த காலம் சென்ற மாட்சிமை தங் கிய விக்டோரியா சக்ரவர்த்தினி அவர்களும், அவருடைய மூத்த குமாரரான ஏழாவது எட்வர்டு சக்ரவர்த்தி அவர்களும், யோசித்துக் கொண்டிருக்கையில், ஸர். வில்லியம் வெட்டர் பர்ன் துரை அவர்கள் இப்பொழுது ஈஜிப்டு தேசத்தில் அனுஷ்டானத்திலிருக்கும் முறைப் படி கோ ஆபரேடிவ் பாங்கிகளை இத்தேசத்தில் ஸ்தாபிக்கும்படிக்கு பிரேரேபித்தார். அம் மாதிரியான முறைகள் இத்தேசத்துக்கு ஒத்து வரா என்பதாக இந்தியா ஸ்டேட் ஸெக்ரி டெரி, அனுமதி கொடுக்கவில்லை. பிறகு, இப்பொழுது நம்ம கவர்னராயிருக்கும் மகா கனம் பொருந்திய ஸர் ஆர்தர்லாலி அவர்களு டைய ஜேஷ்ட ப்ராதா லார்டு வென்லாக் பிரபு அவர்கள் இந்த ராஜதானியில் கவர்ன

ராய் இருக்கும்பொழுது அனந்தபூர் ஜில்லா கலெக்டராயிருந்த ஸர் ப்ரெடெரிக் நிக்கல்ஸன் துரை அவர்கள் அன்னிய தேசங்களின் மாதிரியைக் கற்றுவர கமிஷன் கொடுத்து அனுப்பினார்கள். அவர் ஜெர்மனி தேசத்தில் ஸ்தாபித்திருக்கப்பட்ட ரெய்பீஸன் பாங்கிகள் இந்த தேசத்துக்கு ஏற்றவையென்று தெரிவித்ததின் பேரில் இந்தியா கவரென்மெண்டார் 1904௵த்து 10-வது ஆக்டாகிய கோ ஆபரேடிவ் ஆக்டை ஜாரிசெய்தார்கள்.

இந்த ஆக்டுக்கு, ம-௱-௱-ஸ்ரீ திவான் பஹதூர் ராஜகோபாலாசாரியார் அவர்கள் மிகவும் சிரமம் எடுத்துக்கொண்டு, உயிர் கொடுத்தார். பிறகு ம-௱-௱-ஸ்ரீ திவான்பகதூர் ராமசந்திர ராயர் அவர்கள் இதை பால்யதிசைக்குக் கொண்டுவந்தார். இப்பொழுது இந்த ஸபையில் நடுநாயகம்போல் விளங்காநின்ற ம-௱-௱-ஸ்ரீ திவான்பஹதூர் ஸ்வாமிகண்ணு பிள்ளை அவர்கள் யௌவனதிசைக்கு அதாவது விவஹார திசைக்கு கொண்டு வருவார்களென்று நம்புகிறேன்.

இந்த பாங்கிகளை அபிவிருத்திக்குக் கொண்டு வரவேணு மென்று கேவலம் கவர்ன்மெண்டார்மட்டும் பாடுபட்டால் போதாது. அவர்களுடன், அதனால் நன்மை பெறப்பட்ட நாமும் அதிக சிரமம் எடுத்துக்கொண்டு அதை அபிவிருத்தி செய்யமுயலவேண்டியது. அப்படிச் செய்ய சென்னைராஜதானி முழுவதிலும் வெகு ஸ்வல்பமான ஜனங்கள் மட்டும் பிரயாசை எடுத்துக்கொள்ளத் தொடங்கினார்கள். நம்முடைய ஜில்லாவில், இந்தக் கான்பரென்ஸுக்கு அக்ராஸ்தானதிபதியாய் இருக்க ஒத்துக்கொண்ட ம-௱-௱-ஸ்ரீ ஆதிநாராயண செட்டியார் இந்த விஷயத்தில் ரொம்பவும் பாடுபடுகிறாரென்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். இம்மாதிரி ஒவ்வொருவரும்தன்னால் கூடிய மட்டும் பொதுஜன ஸௌக்கியத்திற்கு பாடு படவேண்டுமென்பது என்னுடைய பிரார்த்தனை.

ரூரல் பாங்கிகள் அபிவிருத்தி ஆகவேணுமாய் இருந்தால் அதற்கு திரவியம் தேவை. நம் நாட்டில் திரவியவான்கள் அனேகம் பேர் தம்முடைய திரவியத்தை எல்லாம் ஆர்பத்நட் போல பாங்கிகளிலும் இன்னும் இதர நிதிகளிலும் டிபாஸிட்டு செய்து வட்டி முதல் உள்பட 8-ல் ஒருபங்குகூட வாப்ஸ் அடையாமல் நஷ்டப்படுகிறார்கள். அப்படிச் செய்யாமல் அந்த திரவியங்களை இம்மாதிரி ஜனோபகாரமாய் இருப்பதோடுங்கூட, நஷ்டத்துக்கு ஹேது இல்லாமல், கவர்ன்மெண்டார் பார்வைக்குட்பட்ட இந்த பாங்கிகளில் போட்டுவைத்தால் மேல் கண்ட நஷ்டங்கள் ஸம்பவிக்கா. ஆகையால் இனிமேலாவது கோ ஆப்ரேடிவ் பாங்கிகளில் பணம் போட்டு வைத்தால் போடுகிறவர்கள் அதிகப் பிரயோசனம் அடைவதுடன் புண்ணியத்திற்கும் ஆளாவார்கள்.

இந்த பாங்கிகளின் முக்கிய பிரயோசனம் யாதெனில் இத்தேசத்து ஏழை ஜனங்கள் வர்த்தகர்களிடம் அதிகவட்டிக்குக் கடன் வாங்கி கிருஷித்தொழில் முதலானவைகள் செய்து, ஸம்பாதித்த திரவியம் அரைவயிறு ஆகாரம் சாப்பிடுவதற்கு கூடப்போதாமல், யாவற்றையும் இழந்து பாபராய்விடுகிறார்கள்; அப்படிக் காகாமல் ஜனங்களை விருத்திக்குக் கொண்டு வரும்படிசெய்ய ஹேது வாயிருக்குமென்று கவர்ன்மெண்டார் இந்த பாங்கிகளை பிரபலப்படுத்த முயலுகிறார்கள்.

ஆனால் கூட்டுறவை இம்மாதிரியான கான்பரென்ஸ்களினாலும் பிரஸங்கங்களினாலும் மட்டுமே உண்டாக்க முயன்று உண்டாக்கினாலும் அது ஸ்திரப்படாது, அது ஸ்திரப்பட

வேண்டுமானால் விவஸாயிகளுக்கு, போதித்தவைகளை கிரஹிக்க போதுமான படிப்பு கற்பிப்பதுடன் கைத்தொழிலும் வேண்டும். பிறகு நூதன முறைப்படிக்கு விவஸாயம் செய்ய, கருத்துடன் பாடுபட்டு பயனடைய முயலவேண்டும். அப்படி அடைந்தவைகளை வீண்போக்கி வர்த்தகர்களிடம் கடன் வாங்கச் செல்லாமல், செட்டாய் அவசியமான செலவு மட்டும் செய்யப்பாடுபடவேண்டும். மேல் கண்டபடி செய்யவேண்டுமானால் அண்டை அயலார்களுடன் ஸ்நேகம், ஒருவருக்கொருவர் நன்றிசெய்தல், கிராமஸ்தர்களுக்குள் நடத்த வேண்டிய நல்ல தருமத்தைப் பாராட்டுதல், ஆகிய இம்மூன்றும் ஒவ்வொரு கிருஷிகனுக்கும் இருக்கவேண்டும். இவைகளுக்கெல்லாம் அதி அவசியமானது கிராம பஞ்சாயத்து.

குடி உயர முடி உயரும், ஆகையால் அதற்கு கிருஷி ஆகாரவு, அக்கிருஷிக்கு மூலதனம், உழைப்பு; ஜலாதாரங்கள் தேவை, நம்முடைய இப்போதைக் கிருக்கும் சக்ரவர்த்தி காலத்தில் மேல் கூறிய கிருஷிகர்களுடைய குறைகள் நீங்கி குடிகளும் சக்ரவர்த்தியும் க்ஷேமமடைவார்களென்பதற்கு ஸந்தேகமில்லை. எப்படி யெனில் மாட்சிமை தங்கிய ஐந்தாவது ஜார்ஜ் சக்ரவர்த்தி இளவரசாய் இருக்கும்பொழுது இந்த தேசத்தாருடைய நற்குணங்களையும், ராஜபக்தியையும், ஏழ்மையையும் நன்றாய் அறிந்திருக்கிறார் என்னும் விஷயம் அவர் சீமைக்குத் திரும்பிப்போனபோது கில்ட்ஹால் விருந்தில் இங்கிலாந்து தேசத்து ப்ரபுக்களுக்கும் பாதிரிகளுக்கும் ப்ரஜைகளுக்கும் போதித்த சொல்களினால் நன்றாய்விளங்கும். தவிரவும் அந்த அபிமானத்தை ஹிருதயத்தில் உட்கொண்டு நம்மதேசத்து பூர்வீக ராஜர்களைப்போல தன்னுடைய மகுடாபிஷேக மகோத்ஸவத்தை டில்லியில் நடத்திக்கொள்ள ஸங்கல்பித்துவிட்டார். இப்பேரானந்தத்தைப் பார்க்கவும், கேழ்க்கவும், அவர், சக்ரவர்த்தினி மக்களுடன் நன்றாய் நீடூழி வாழவேணுமாய் நாம் கடவுளை பிரார்த்திக்க ஜன்மாந்திரத்தில் ஏதோ புண்ணியங்களைச் செய்தவர்கள் ஆகவேணும்.

## ALUM.

BY

PANDIT S. MUTHUSAMI PILLAI.

## படிக்காரம் அல்லது சீனக்காரம்.

நமது உடம்பை அணுகும் பிணிகள் பல. அவைகளை வருமுன் காப்பது சிறப்பேயானாலும் அது யாவருக்கும் ஸாத்யமன்று. ஆதலால் வந்தபின் நீக்கும் முறைகளையும் நாம் அறிந்திருத்தல் நலமேயாகும். நமது நாட்டில் தற்காலம் ஆங்கில வயித்திய பண்டிதர்களும் ஆயுள்வேத விற்பன்னர்களும் அவ்வளவு அபூர்வரல்ல. என்றாலும் ஸாமான்ய ஜனங்களுக்கு அவர்கள் உதவி கிடைப்பது அரிதாக இருக்கின்றது. ஆகையால் யாவருக்கும் எளிதாய்க் கிடைக்கக்கூடிய மருந்துகளின் குணங்களை நம்மவர் ஒவ்வொருவரும் அறிந்திருத்தல் இன்றியமையாததாகும்.

படிக்காரம் அல்லது சீனக்காரம் எல்லாக் கடைகளிலும் கிடைக்கக்கூடிய ஒரு மருந்து. அது அநேக நோய்களைக் கண்டிக்கும் சக்தியுடையது.

(1) சிறுவர்களுக்கு உண்டாகும் கண்ணோவுக்கு இது நிகரற்ற ஔஷதம். இரண்டு மேஜைக்கரண்டி தண்ணீரில் 3 க்ரேயின் சீனக்காரத்தைப் பொடித்துப் போட்டுக் கரைத்து தினம் நாலைந்து தரம் கண்ணைக் கழுவவேண்டும். பிராயமானவர்களுக்கு சீனக்காரத்தின் அளவை இரட்டித்துக் கொள்ளலாம். அந்தத் தண்ணீரில் ஒரு வெள்ளைச் சீலைத் துண்டை நனைத்து அடிக்கடி கண்களில் துடைத்துக் கொள்வதும் நலம். இமைகள் அதிகமாய் வீங்கி யிருந்தால் காலையில் சூடான பாலை விட்டுக் கழுவி இமைகளை மெல்லத்திறந்து பின் மேற்சொன்ன சீனக்கார ஜலத்தை சொட்டுச் சொட்டாய்விடவும்.

(2) மூக்கிலிருந்து ரத்தம் வந்தால் கொஞ்சம் சீனக்காரத்தை 6 அவுன்ஸ் தண்ணீரில் கலக்கி பீச்சாங்குழலிலாவது, மெல்லிய சீலையை நனைத்தாவது மூக்கினுள் செலுத்தினால் நிற்கும். அட்டைகடித்த காயத்திலிருந்து ரத்தம் பாயும்பொழுதும் சீனக்காரப் பொடியை வைத்து விரலால் கெட்டியாய் அமிழ்த்தினால் நிற்கும்,

(3) ஜுரமில்லாமல் மூலத்திலிருந்து மிகுதியாய் ரத்தம் போனால் 120. க்ரெயின் சீனக்காரத்தை 8 அவுன்ஸ் தண்ணீரில் கலக்கி அதில் ஒருதுண்டுச் சீலையை நனைத்து மூலத்தில் வைத்திருந்தால் ஸுகப்படும்.

(4) குழந்தைகளின் மலத்வார வழியாய் குடல் தள்ளினால் 60 க்ரெயின் சீனக்காரத்தை 8 அவுன்ஸ் கடுக்காய்க் கஷாயத்தில் கரைத்து தள்ளின குடலை மறுபடியும் உள்ளுக்குச் செலுத்தி அதன்மேல் இந்தக் கஷாயத்தை நாளொன்றுக்கு இரண்டு மூன்றுதரம் நன்றாய்த் தொட்டுப்போடவும். மலத்வாரம் சுருங்கி குடல் இறங்காது.

(5) தொண்டையில் புண்ணாய் அல்லது சிவப்பாயிருக்கிற தொண்டை நோய்க்கு கடுக்காய்க்கஷாயம் அரைப்புட்டியில் 120க்ரெயின் படிக்காரத்தைச் சேர்த்து கொஞ்சந்தேனும் கூட்டி தினம் மூன்று நான்கு வேளை வாயை அலம்பவும். ரஸத்தில் ஔஷதம் சாப்பிட்டதினாலுண்டான ரணம், பல்லீறிலுண்டாகும் ரணம்முதலிய வியாதிகளுக்கு படிக்காரத்தை கடுக்காய்க் கஷாயத்தில் கலக்கி வாயைக் கழுவினால் குணமுண்டாகும். சிறு குழந்தைகளுடைய வாயிலுண்டாகிற வெண்ணிறமான புண்களுக்கு 20 க்ரெயின் படிக்காரத்தை பொடிசெய்து ஒரு அவுன்ஸதேனில் சேர்த்து விரலால் தொட்டு வாயினுள் தடவவும்,

(6) குழந்தைகளுக்கு கக்கிருமல் உண்டானால் 3. க்ரெயின் படிக்காரத்தை நுணிக்கி தேனில் கலக்கி நாளொன்றுக்கு இரண்டு மூன்றுதரம் கொடுக்கவும். குணங்காணவிட்டால் படிக்காரத்தின் இடையேகூட்டி அதோடு கொஞ்சம் நல்ல காயமும் சேர்த்துக்கொண்டால் மிகுந்த குணத்தைக் கொடுக்கும்.

(7) நெடு நாட்பட்ட நாற்றமுள்ள படரும் புண்களுக்கு ஸன்னமாய்த்தூள் செய்த படிக்காரம் 8. ட்ரும், காசுக்கட்டி 2. ட்ரும், அபின் 1. ட்ரும், தேங்காய் எண்ணெயில் காய்ச்சி யெடுத்து தேன் மெழுகுக் குழம்பு 2 அவுன்ஸ், இவைகளை யெல்லாங் கூட்டி யரைத்து ஒரு துண்டுச் சீலையில் தடவி காலை மாலை புண்ணிலிடவேண்டும். வேதனை யுண்டானால் தேன்மெழுகுக் குழம்பை அதிகமாய்ச் சேர்த்துக்கொள்ளலாம்.

(8) மூட்டு வீக்கங்களுக்கும், சுளுக்கு முதலிய காரணங்களால் உண்டாகிற வீக்கங்களுக்கும், அரைப்புட்டிக் காடியையும் அவ்வளவு சாராயத்தையும் ஒன்றாய்க் கலந்து அதில் 4 ட்ரும் படிக்காரத்தைக் கரைத்து அதில் சீலையை நனைத்து மேற்படி வீக்கங்களில் இடவேண்டும்.

(9) நீரழிவுள்ளவர்களுக்கு, ஒரு புட்டிப்பசுவின் பாலைக்கொதிக்கவைத்து அதில் 2 ட்ரும் படிக்காரத்தூளைப் போட்டு கொஞ்சநேரம் கலக்கினபின் இறக்கி வடிகட்டி, வேளைக்கு 4 அவுன்ஸ் வீதம் நாளொன்றுக்கு மூன்று தரங்கொடுக்கவும். இதனால் நோய் தீரநிற்காவிட்டாலும் மிகுதியான நீர்ப்போக்கு நிற்கும்.

மேலே சொன்னபடி உபயோகிக்கும் படிக்காரம் அல்லது சீனக்காரம் சுத்தமானதாகவும் பெருந்துண்டுகளாகவும் இருக்கவேண்டும். சீனக்காரப்பொடியானால் அதோடு பலவித அழுக்குப்பொருள்கள் சேர்ந்திருக்கக்கூடும்.

எஸ். முத்துஸாமி பிள்ளை.

## DIFFICULTIES IN THE IMPROVEMENT OF INDIAN AGRICULTURE.

### MR. COUCHMAN'S LECTURE.

## இந்திய விவஸாயத்தை சீர்படுத்துவதிலுள்ள கஷ்டங்கள்.

### மிஸ்டர் கௌச்மனுடைய ப்ரஸங்கம்.

---

'பிழைக்கும் வழி'யின் 1909-வருஷத்து ஜூலை ஆகஸ்டுமாஸத்து ஸஞ்சிகைகளிலும் இன்னும் இதர ஸஞ்சிகைகளிலும் கவர்ன்மெண்டார் விவஸாய விஷயமாய்ச்செய்து வரும் காரியங்களைப்பற்றியும் உதவிகளைப் பற்றியும் விஸ்தாரமாய் எழுதியிருக்கிறோம். ஆயிரம், ஐநூறு என்று பெரிய சம்பளம் கொடுத்து ஐரோப்பாவிலிருந்து விவஸாய நிபுணர்களை வரவழைத்தும், கோயம்பத்தூரில் ஸுமார் ஐந்து லக்ஷம் ரூபாய் போட்டு பெரியகட்டிடம்கட்டி வருஷாவருஷம் 20பேர் படித்துத் தேறும்படியான ஒரு விவஸாய காலேஜ் ஏற்படுத்தியும், சென்னை ராஜதானியில் பலபாகங்களில் பண்ணைகளை ஏற்படுத்தி சோதனைகள் செய்தும், விவஸாயிகளுக்கு உதவிசெய்ய சிலவருஷங்களாக ஸர்க்காரில் முயன்று வருகிறார்கள். இப்படி ஏராளமாக பணச்செலவுசெய்து கவர்ன்மெண்டார் என்ன மலையைக் கெல்லிவிட்டார்கள்?, குருணி நெல் கூட விளைந்திருக்கிறதா?, என்று இங்க்லீஷ் படிக்கிறவர்களில் அநேகம் பேர்கள் கேட்கிறார்கள். இவர்கள் ஏன் இப்படிக்கேட்கிறார்கள் என்றால் அவர்கள் இதரதேசக் கவர்ன்மெண்டுகள் ஏராளமாகப்பணச்செலவுசெய்து தம்தம் குடிகளுக்கு ஸாகுபடி விஷயத்தில் பலவித போதனைகளைச்செய்து வருகிறார்கள். இவைகளை எல்லாம் இங்க்லீஷ் படித்தவர்கள் நியூஸ் பேபர்களில் படிப்பதால் நம்முடைய தேசத்தில் அப்படி ஒன்றும் விசேஷமாய்ச் செய்யாததைப்பற்றி நம்முடைய கவர்ன்மெண்டின் மேல் குற்றஞ் சொல்லுகிறார்கள்.

இப்படிக்குற்றங் கண்டு பிடிப்பது நியாயமல்லவென்று வாதித்து விவஸாய இலாகா டைரெக்டராகிய மிஸ்டர் கௌச்மன் ஸமீபத்தில் மைலாப்பூரில் ஒரு ப்ரஸங்கம் செய்தார். உலகத்தில் எங்கேயும் விவஸாயிகள் என்ன சொன்னாலும் தங்கள் தொழிலைப்புதுவிதமாய் செய்ய ஸம்மதிக்கிறதில்லை. வருஷாவருஷம் உழுது நட்டுப்பயிர்செய்து அறுப்பறுத்து, ஜீவித்துப்பலனடைந்தவர்களானதால் அவர்களை அத்தொழிலை வேறுவிதமாய்ச் செய்யென்றால் அவர்களுக்கு அந்தவார்த்தை ஏறுவதில்லை. தவிர விவஸாயஞ்செய்து ஆயிரம் ஐநூறு ஸம்பாதிக்கவேண்டுமென்ற ஆசையுமில்லை. அகப்பட்டதைக் கொண்டு கௌரவமாய்ஜீவனம் செய்யவேணுமென்பதே முக்கிய எண்ணமானதால் விவஸாயத்தில் புதிய முறைகளை அநுஷ்டிக்க இஷ்டமிருப்பதில்லை. ஆகையால் வாஸ்தவத்தில் நல்ல லாபமுள்ள முறை ஒன்றைச் சொன்னாலுங்கூட விவஸாயிகள் அதை அசட்டைசெய்து விடுகிறார்கள். அவர்கள் செய்யும் முறையைப்பற்றி ஏன் அப்படிச்செய்யவேணு மென்று கேட்டால் விவஸாயிகள் ஸரியானபதில் சொல்லாமல் தப்புக்காரணங்களை ஒருக்கால் சொல்லலாம். அதனால் அவர்களுடைய முறை தப்பானதென்று நாம் சொல்லமுடியாது.

இப்படிப் பட்டவர்களுக்கு படித்தவர்களைக் கொண்டு சொல்லச்சொல்லுவோ மென்றால் படித்தவர்களுக்கும் விவஸாயத்துக்கும் வெகு தூரமாயிருக்கிறது. படித்தவர்களுக்கு விவஸாய விஷயங்கள் தெரியாது. விவஸாயிகளுக்கு

ப்படிப்புத் தெரியாது. ஆகவே விவஸாய உத்தியோகஸ்தர்கள் இரண்டுவகுப்பாருக்கும் பதில் சொல்ல வேண்டியதாயிருக்கிறது.

இரண்டாவது, ஸர்க்கார் விவஸாய இலாகாதாரர்கள் இந்திய விவஸாயிகளுக்கு "இது நிச்சயமாய் லாபந்தரக்கூடிய முறை, ஆகையால் நீங்கள் இப்படியே செய்யுங்கள்" என்று சொல்லக்கூடிய நல்வமுறைகளும் விசேஷமாய் இல்லை. ஆனால் இதரதேசங்களில் விவஸாய நிபுணர்கள் ஜனங்களுக்கு எவ்வளவோ புதுமுறைகளைச் சொல்லிவருகிறார்களே, அவர்கள் செய்யக்கூடியது ஏன் இந்தியாவில் முடியவில்லை.? என்று கேட்கலாம். அமெரிக்கா போன்ற தேசங்களுக்கும் இந்தியாவுக்கும் ரொம்ப வித்யாஸமுண்டு. அமெரிக்கா, ஆபிரிக்காவில் காடாயிருந்து இப்பொழுதுதான் ஸாகுபடி செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள். அங்கேபோய்குடிஏறி ஸாகுபடி செய்கிறவர்களும், பணம் ஸம்பாதிக்கவேண்டுமென்று போனவர்களே ஒழிய பரம்பரையாய் ஸாகுபடி செய்து தேர்ச்சி அடைந்தவர்களல்ல. ஆகையால் அவர்களுக்கு ஸாகுபடி என்றால் இன்னதென்றும், பயிர் எப்படிச்செய்கிறதென்றும், அங்கேயுள்ள விவஸாய நிபுணர்கள் சொல்லிவருகிறார்கள். ஆதலால் அந்த தேசங்களில் ஏதோநிபுணர்கள் ப்ரமாதமாய்ச்செய்துவருவதாகத் தோன்றுகிறது. இந்தியாவிலோ ஜனங்கள் பரம்பரை விவஸாயிகள். அவர்கள் அநேக ஸமாசாரங்களை அனுபோகஸித்தமாய் அறிந்தவர்கள். ஆகையால் இவர்களுக்குப்புதிதாக ஏதாவது சொல்வதென்றால் கஷ்டந்தான். ஆனால் இந்தியாவில் அனுபோகஸித்தமாய் அறிந்த விஷயங்கள் எல்லாருக்கும் தெரியவில்லை. ஆகையால் நல்ல முறை என்று ஏற்பட்டவைகளை தெரியாதவர்களுக்கு ஸர்க்கார் விவஸாய இலாகாக்காரர்கள் போதித்து வருகிறார்கள். தவிர இப்பொழுது விவஸாயத்தைப் பற்றி சாஸ்திர ஆராய்ச்சி செய்து அறிந்த விஷயங்களெல்லாம், சீதோஷ்ணம் மிதமாயிருக்கிற தேசங்களில் கண்டறிந்தவைகள். அவைகளை உஷ்ணதேசமாகிய இந்தியாவில் ப்ரயோகிக்க ஸாத்யப்படாது, இந்தியாவில் வெகுகாலம் உழைக்கவேண்டும், அப்படி உழைத்து ஏதாவது ஒரு புது முறை ஏற்படும்பட்சத்தில் அது அதிர்ஷ்ட வசமே ஒழிய யுக்தி புத்தியால் கண்டு பிடிக்கப்பட்டதாக மாட்டாது. மிஸ்டர் கௌச்மன் இன்னொன்றுஞ் சொன்னார். அதாவது, திருநெல்வேலி, ராமநாதபுரம், மதுரை இந்த இடங்களில் கம்பொடியாப் பருத்தி பரவியிருக்கிறதைப்பார்த்தால், நல்ல லாபந்தரக்கூடிய பயிர் இருக்கும் பட்சத்தில் அதைஇந்தியவிவஸாயிகள்உடனேகைப்பற்றுவார்களென்பதற்கு ஸந்தேகமில்லை. ஆனால் இப்படிப்பட்ட அம்சங்களை அவர்களுக்கு எடுத்து போதிக்க மனுஷ்யர்களை ஊரூராய் அனுப்பி ப்ரஸங்கம் செய்யச்சொல்ல வேண்டுமென்று அநேகம்பேர்கள் சொல்லுகிறார்கள். ப்ரஸங்கங்கள் செய்ய முதலாவது நிபுணர்கள் இல்லை. தவிர ப்ரஸங்கங்களால் விவஸாயம் முன்னேறிவிடாது. அங்கங்கே நிலத்துக்குத் தக்கபடி மாறுபாடுகள் செய்ய வேண்டியிருக்கும். ஆகவே இன்ன நிலத்தில் பயிரிடவேண்டும், இன்ன காலத்தில் இன்னமாதிரி பயிரிடவேண்டும், என்று வ்யக்தமாய் சொன்னாலொழிய விவஸாயிகள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். அப்படி ஏற்றுப் புதுமுறைகளில் இறங்கவும் அவர்களுக்குக் கட்டாது. ஆகையால் விவஸாயிகளுடைய நிலைமை, நிலத்தின் தன்மை, முதலிய விஷயங்களை அறியாமல் ப்ரஸங்கங்கள் செய்வதில் ப்ரயோசனமில்லை.

கடைசியாக மிஸ்டர் கௌச்மன் சொன்னதாவது: இந்தியாவில் விவஸாயத்தை முன்னேற்ற முயலுகிறவர்கள் முதலில் விவஸாயிகளுடைய ஸங்கதிகளை முழுமையும் அறிந்துகொள்ளவேணும். அவஸரப்படாமலிருந்தால் நாளாவட்டத்தில் விவஸாயிகளே அறிந்துகொள்ளுவார்கள் அவஸரப்பட்டு தப்பும் தவறுமாய் அவர்களுக்கு எதையாவது நல்ல முறையென்று சொல்லி அது சொன்னபடி ஆகாவிட்டால் பிற்பாடு அவர்களை திருத்துவது வெகு கஷ்டம்.

## ADVANTAGES OF REGISTRATION.

## தஸ்தவேஜுகளை ரெஜிஸ்டர் செய்வதின் பயன்கள்.

தஸ்தவேஜுகளை ரெஜிஸ்டர் செய்துகொள்வதினாலும் செய்து கொள்ளாததினாலும் உண்டாகும் பயன்களைப் பற்றி இந்த வியாஸத்தில் பேசுவோம். ரெஜிஸ்டரான தஸ்தவேஜு, ரெஜிஸ்டரான தேதி முதற்கொண்டல்லாமல் எழுதப்பட்ட தேதி முதற்கொண்டே செலாவணியாகிவரும். ஸ்தாவர ஸொத்தைப் பொறுத்த தஸ்தவேஜுகள் எல்லாம் ரெஜிஸ்டர் செய்யப்பட்டால் தான் பயனுள்ளவையாகும். இல்லாவிட்டால் அவைகளில் காணப்படும் ஸொத்தைப் பாதிக்கமாட்டா. கோர்ட்டுகளில் சாட்சியமாக ஏற்றுக்கொள்ளப் படமாட்டா. ரெஜிஸ்டர் செய்யப்பட்ட தஸ்தவேஜுகளில் பின்னால் மோசடியாக ஏதேனும் மாறுதல் செய்வதற்கு முடியாது. தஸ்தவேஜுகள் காணாமல் போனாலும், நாசமாய்ப் போனாலும் அவைகளுக்கு ஸரியான நகல்களை ரெஜிஸ்ட்ரார் ஆபீஸ்களிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். அந்த நகல்கள், அஸல் தஸ்தவேஜுகளைப்போலவே, கோர்ட்டுகளில் சாட்சியமாக ஏற்றுக்கொள்ளப்படும். ஒரு ஸொத்தைப்பற்றி ஏற்பட்டிருக்கும் வில்லங்கங்கள் இன்னின்னவை யென்று தெரிந்துகொள்ளலாம். இதனால் மோசமான விநியோகம் தெரிந்து விடுவதினால் வாங்குகிறவர்கள் ஜாக்கிரதையாக இருக்கலாம்.

ரெஜிஸ்டர் செய்துகொள்ளும்பொருட்டு வரும் கக்ஷிக்காரர்கள் தஸ்தவேஜுகளை நேராக ரெஜிஸ்டர் செய்யும் உத்தியோகஸ்தரிடமே கொடுக்கவேண்டும். அவருடைய குமஸ்தாவினிடமாவது ஸே[illegible]களிடமாவது கொடுக்கக்கூடாது. ஸ்டாம்புத் தீர்வை, பத்திரத்தேதி, இவைகள் ஸரியானபடி யிருந்தால், ரெஜிஸ்டர் செய்யும் உத்தியோகஸ்தர் அந்த தஸ்தவேஜின் மேல் அது தாக்கல் செய்யப்பட்ட தேதி, மணி, இடம் முதலியவைகளை எழுதிக்கொண்டு தாக்கல் செய்தவருடைய கையெழுத்தையும் வாங்குவார். பின்பு எழுதிக்கொடுப்பவரை விசாரணை செய்வார். அவருடைய கையெழுத்தும், சாக்ஷிகளுடைய கையெழுத்தும் பத்திரத்தில் வாங்கப்படும். எழுதிக்கொடுப்பவருடைய கையெழுத்தோடு அவருடைய இடது பெருவிரல் குறியும் பத்திரத்தில் வாங்கப்படும். ஒருவருடைய விரல் மற்றவர்களுடைய விரல் அடையாளங்களோடு ஒத்திருப்பதில்லை. ஆதலால் பொய்க் கையெழுத்து, ஆள் மாறுட்டம் முதலிய குற்றங்களைத் தடுப்பதற்கும் கண்டுபிடிப்பதற்கும் இந்தப் பெருவிரல் குறி பயன்படுகிறது. ரெஜிஸ்டர் செய்யும் உத்தியோகஸ்தர்களுக்கு நேரில் தெரிந்தவர்கள், குஷ்டரோகிகள், முதலியவர்களிடமிருந்து பெருவிரல் குறி எடுக்கவேண்டியதில்லை.

தஸ்தவேஜு எழுதிக் கொடுப்பவருக்கு, ரெஜிஸ்ட்ரார் முன்பு பணமாவது, வேறு பொருளாவது கொடுப்பதாக இருந்தால் அவ் விஷயமும் தஸ்தவேஜில் எழுதப்படும். ரெஜிஸ்ட்ராருக்கு வரும் தஸ்தவேஜுகள் வாஸ்தவத்தில் செல்லக்கூடியவையா என்பதைப் பற்றி விசாரிக்க ரெஜிஸ்ட்ராருக்கு அதிகாரமில்லை. அவருடைய வேலை யெல்லாம், பத்திரத்தை எழுதிக் கொடுத்ததுண்டா என்னும் விஷயத்தை மட்டும் தெரிந்து கொள்ள வேண்டியது. எழுதிக்கொடுத்ததுண்டானால் பத்திரத்தை ரெஜிஸ்டருக்கு அங்கீகரிக்க வேண்டும். ரெஜிஸ்டருக்கு வரும் தஸ்தவேஜுகளை ரெஜிஸ்டர் செய்யமாட்டோமென்று ரெஜிஸ்ட்ரார் மறுதளிப்பதற்குப் போது

மான காரணங்கள் இருக்கவேண்டும். அத்தாக்ஷி செய்யப்படாத வரிபிளப்பு, அடித்தல், திருத்தல், முதலியவை பத்திரத்தில் இருந்தாலும், தஸ்தவேஜில் குறிக்கப்பட்ட ஸொத்து ஸரியானபடி விவரிக்கப்படாமலிருந்தாலும், ரெஜிஸ்ட்ராருக்குத் தெரியாத பாஷையொன்றில் தஸ்தவேஜு எழுதப்பட்டிருந்தாலும், தஸ்தவேஜுடன் வரும் படங்களுக்கு நகல் ஆஜராகாமலிருந்தாலும், தஸ்தவேஜு குறித்த காலம் கடந்தபின் ஆஜர் செய்யப்பட்டாலும், எழுதிக்கொடுப்பவர்கள் குறித்தகாலம் ஆனதன்பின் ஆஜர் ஆனாலும், எழுதிக்கொடுப்பவர் இன்னார் தான் என்று ரெஜிஸ்ட்ராருக்குத்திருப்திகரமாகத் தெரியாவிட்டாலும், ஏஜெண்டு மூலமாய் வருபவர்களுக்கு அப்படி வரும் பாத்தியதை திருப்திகரமாய் விளங்காவிட்டாலும், பத்திரத்தை எழுதிக்கொடுத்ததாகப் பொருள்படும் ஒருவன், தான் அதை எழுதிக்கொடுத்ததில்லை என்று சொன்னாலும், எழுதிக்கொடுத்தவன் மைனராகவாவது, உன்மத்தனாகவாவது, பைத்தியம் பிடித்தவனாகவாவது இருந்தாலும், பத்திரம் எழுதிக்கொடுத்தவன் இறந்து போனபின் அவனுடைய பிரதிநிதியாக வருபவன் பத்திரம் எழுதிக்கொடுக்கப் படவில்லையென்று மறுதளித்தாலும், எழுதி வைத்தவன் இறந்துபோனபின்வரும், உயில், ஸ்வீகார அதிகாரம், இவைகள் உண்மையாக எழுதி வைக்கப்படவில்லை யென்று விசாரணையால் ரெஜிஸ்ட்ராருக்குத் தோன்றினாலும், உயிலை அடக்கம் செய்திருக்கும் பை முத்திரையிடப்படாமல் இருந்தாலும், செலுத்தப் படவேண்டிய கட்டணம் செலுத்தாமலிருந்தாலும், அந்தந்தக் காரணங்களைக் கண்டெழுதி ரெஜிஸ்டர் செய்யும் உத்தியோகஸ்தர் அந்தத் தஸ்தவேஜுகளின் மேல் ரெஜிஸ்ட்ரேஷன் நிக்கிரகிக்கப்பட்டது என்று எழுதிக்கொடுத்துவிடவேண்டும். இப்படி ஸப்ரெஜிஸ்ட்ரார்கள் செய்யும் உத்தரவுக்கு மேல்ஜில்லா ரெஜிஸ்ட்ரார் ஆபீஸில் அப்பீல்செய்து கொள்ளலாம். அங்கு ரெஜிஸ்ட்ரேஷன் நிக்கிரகிக்கப்பட்டால் ஸிவில் கோர்ட்டில் பத்திரத்தைத் தாக்கல் செய்து ரெஜிஸ்டர் செய்யச் சொல்லும்படி கேட்கலாம்.

இனி, ரெஜிஸ்ட்ரேஷன் இலாகாவினால் உண்டாகக்கூடிய வேறு சில பயன்களைக்கூறிவிட்டு இவ்வியாஸத்தை முடிவு செய்வோம். பொதுவாக எல்லாவித தஸ்தவேஜுகளும் ரெஜிஸ்டர்செய்யப்படுவதால், ஜனங்களுடைய செல்வ ஸ்திதி இன்னபடி யிருங்கிறதென்பது தெரியவரும். அதிகக் கடன் பட்டுவிட்டபடியால் நிலத்தை விற்றுவது கடனைக்கொடுக்க முந்துபவர் சிலர்; கல்யாணம் முதலியவைகளில் வீண் செலவுக்காகப் பணம் வாங்குபவர் சிலர், விவஸாயச்செலவு, வியாபாரம், ஸர்க்கார் கிஸ்தி, முதலியவைகளுக்காகப் பணம் தேடுபவர் சிலர்; இவர்களுடைய செல்வ நிலையெல்லாம் அவர்கள் எழுதிக்கொடுக்கும் தஸ்தவேஜினால் வெளியாகும். ஷைலாக்கைப்போல அநியாய வட்டி வாங்குவோரும், வெகு அற்பமான வட்டிக்குக்கடன் கொடுப்போரும் இன்னின்னாரென்று விளங்கும். பூமிகளின் விலை வரவர அதிகரிக்கிறதா, குறைகிறதா, என்பதைத்தெரிந்து கொள்ளலாம்; விவஸாயிகளிடமிருந்த பூமி அவர்களுடைய கையை விட்டுக்கடன் காரணமாக வேறு வகுப்பாரிடத்துக்குப் போகிறதா என்பதைக்கவனிக்கலாம். உண்மையில் மேற்கூறிய விவரங்களை ரெஜிஸ்ட்ரேஷன் ஆபீஸ்களில் வெகு சிரமப்பட்டுத் தேடி வருஷாவருஷம் கணக்குகள் கொடுக்கப்படுகின்றன. தேச க்ஷேமத்தைக்கவனிக்கும் மகான்களுக்கு இவ்விஷயம் வெகுஉபயோகமுள்ளதாக விருக்கும்.

இவ்வளவு பெரிய இலாகாவின் வரவு செலவைப்பற்றி இரண்டொரு வார்த்தை சொல்லுவது மிகையாகாது. ரெஜிஸ்டருக்கு வரும் தஸ்தவேஜின்மேல்செலுத்தப்படும்கட்டணம், நகல்கள் எடுப்பதற்காகச்செலுத்தப்படும் தேடுகூலி, நகல் கூலி, வில்லங்க ஸர்டிபிகேட் வாங்கக்கொடுக்கும் கட்டணம், விசேஷ காரணங்களை முன்னிட்டுச்செய்து கொள்ளும் ரெஜிஸ்ட்ரேஷன் கட்டணங்கள், ஆகிய இவைகளிலிருந்து தான் இந்த டிபார்ட்டு மெண்டின் வரும்படி வருகிறது. உத்தியோகஸ்தர்கள் ஆபீஸ் சிப்பந்திகள் சம்பளம், புஸ்தகம், கடுதாசி, மசி, அச்சுக்கூலி, ஆபீஸ் கட்டிடங்கள் முதலிய செலவுகள், ஆகிய இவைகள் பற்றுக்கலத்தில் சேருகின்றன. நாளுக்கு நாள் தஸ்தவேஜுகள் அதிகமாக ரெஜிஸ்டர் செய்யப்படுவதால் இந்த டிபார்டுமெண்டுக்கு ஏராளமான லாபமுண்டாகிறது. 1909-ம் வருஷத்தில்வருமானம் ரூ19,29,095ஆகவும், செலவு ரூபா 13,71,558 ஆகவும் இருந்து ரூ5,57,537 லாபம்கிடைத்தது.

---

## RANI TARABAI.

BY

T. S. VAIDYANATHAN.

## தாராபாய் ராணி.

---

சற்றேறக்குறைய எண்ணூறு வருஷங்களுக்கு முன்னே டில்லியில் அலாவுடீன் என்னும் கில்ஜி வம்சத்தைச் சேர்ந்த அரசன் அரசாண்டுவந்தான். அதேகாலத்தில் மீவாருக்கருகிலிருக்கிற தோடாவென்னும் பட்டணத்தை சூரசேனன் என்னும் ரஜபுத்ரன் ஆண்டுவந்தான். அலாவுடீன் இருந்தகாலத்தில் சுதேச அரசர்கள் எல்லாருக்கும் அவனைக்கண்டால் ரொம்பவும் பயமுண்டு. திடீரென்று அர்த்தராத்திரியில்போய் சூதுவாது தெரியாத இந்தியர்களை பயமுறுத்துவான், ரஜபுத்ர ஸ்திரிகளின்பேரில் அடிக்கடி ஆசைகொண்டு அந்த ஸ்திரீகளைத் தான் அடையவேண்டி யுத்தம் பண்ணுவான். இப்படிக்கெல்லாம் இவன் அந்யாயம் செய்துகொண்டிருந்தபொழுது மேற்சொன்ன தோடாதேசத்து சூரசேனனும் இவனிடம் ரொம்ப அவஸ்தைகளைப்பட்டான். அடிக்கடி அலாவுடீன் கையினால் அபஜெயப்பட்டான். கடைசியாக தன்னுடைய ஸைன்யமெல்லாம் யுத்தகளத்தில் மாண்டுபோய் தன்னுடைய தோடப்பட்டணமே எதிரி கைவசமாய்ப் போய்விட்டபிற்பாடு தன் உயிருக்கே மோசம் வந்துவிடும் போலிருக்க, தனது பெண்சாதியையும், அருமைப் புதல்வியான தாராபாய் என்னும் புத்ரியையும் அழைத்துக்கொண்டு மீவார்தேசத்தை ஆண்டுவந்த ராணு ரெய்மாலிடம் போய் அடைக்கலம் புகவே, ரெய்மால் சூரசேனை, தன்னுடைய ராஜ்யத்தைச்சேர்ந்த பிஜ்னூர் என்னும் பட்டணத்தில் பயமில்லாமல் இருக்கும்படி ஆக்ஞாபித்தான். அப்படியே சூரசேனனும் பிஜ்னூருக்குப் போய்தன் கதி இப்படியானதைப்பற்றி ஸர்வதாவ்யாகுலப்பட்டுக் கொண்டு, திரும்பவும்தன் கையைவிட்டுப்போன தோட தேசத்தை அடையப்போகிற காலத்தை எதிர்பார்த்தவண்ணமாயிருந்தான்.

மேலேசொன்ன சூரசேனனின் புத்ரியான தாராபாய் என்பவள் பால்யமாயிருந்தபோதிலும் தீரப் படித்தவள். அவள் அழகுக்கு ஈடுகிடையாது. தனது தகப்பனுருடைய ராஜ்யத்தில் துளிகூட, அன்னியன், அதிலும் பட்டாணியன், கையில் இருப்பதில் அவளுக்கு மஹா ஆத்திரமாயிருந்தது. எப்பொழுதுதிரும்பவும் கையை விட்டுப்போனதை அடையப்போகிறோம் என்கிற கவலையே மேல் கொண்டிருந்தது. தான் ஏன் புருஷனுகப்பிறக்க வில்லை என்று தன்னையே அடிக்கடி நொந்துகொள்ளுவாள். அநேகயோசனைகள் செய்துபார்த்தாள், ஒன்றிலும் பயனிராது போலிருந்தது.

கடைசியாக ஒரு தீர்மானம் செய்தாள், அதாவது :"நாம் புருஷனாகப் பிறந்திருப்பதாகவே எண்ணிக் கொள்வோம். நாம் மாத்திரம் அப்படி யிருந்திருந்தோமேயானால் கட்டாயம் நம் தகப்பனார் நமக்கு வில்வித்தை, குதிரைசவாரி முதலிய வித்தைகளையெல்லாம் கற்றுக்கொடுப்பாரல்லவோ. இப்பொழுதுதான் என்னமோசமாய்ப் போய்விட்டது. ரஜபுத்ர ஸ்திரீகளில் எத்தனைபேர் சண்டைகளில் யுத்தம்செய்து வெற்றி பெறவில்லை! நாமும் ஏன் அப்படி செய்யக்கூடாது? கொஞ்சநாளில் எல்லாவற்றையும் கற்றுக்கொண்டு விட்டோமேயானால் பிற்பாடு ஒரு பெரிய சைன்யத்தைச் சேர்த்துக் கொண்டு நமது தேசத்தைக்கைப்பற்றியிருக்கும் அலாவுடீன்பேரில் படையெடுத்து யுத்தம்செய்து ஜெயித்து, ராஜ்யத்தை அடைந்து ரஜபுத்ர வல்லமையை நிலை நிறுத்துவோம். நமக்கும் ஒருநல்லபேர் உண்டாகும்,'' என்று இவ்வண்ணம் யோசித்து தன் தந்தையிடம் தனது விருப்பத்தைத் தெரிவித்தாள். சூரசேனனும் ஸம்மதித்தான். ஆகவே தாராபாய் தான் அணிந்திருந்த பட்டு வஸ்திரங்களையெல்லாம் களைந்துவிட்டு, ராஜாக்கள் மாதிரி உடுப்பணிந்து அதிசீக்கிரத்தில் ஸகல வித்தைகளையும் கற்றுக்கொண்டாள். எப்பேர்கொத்த முரட்டுக் குதிரைகளையும் பழக்கிவிடுவாள். குதிரை சவாரியில் அவளுக்கு ஸமானம் ஒருவருமில்லை என்று ஏற்பட்டுவிட்டது. வெயிலை கவனிக்கமாட்டாள். தன் தேகத்தில் பலம் அதிகமாய் இருக்கவேண்டு மென்று அநேக விதமான கஸரத்துவேலைகளைச்செய்து தன்னை நல்ல பலசாலியாக்கிக்கொண்டாள். அநேக யுத்த வீரர்களுக்கு தானே யுத்தம் செய்ய வேண்டிய விதங்களைப்பற்றி போதிப்பாள். அலாவுடீனுடைய சைன்யத்துடன் இன்ன விதமாய் போர்புரிந்தால் வெற்றிபெறலாம் என்பதையும் தெரிந்து கொண்டாள்.

ஆகவே சூரசேனனும் கொஞ்சநாளைக்கெல்லாம் ஒருசிறிய சைன்யத்தைச் சேர்த்து, தனது பெண் தாராபாய்க்கு ஆண் உடுப்புப்போட்டு, தான் ஒரு குதிரையிலும் அவள் ஒரு குதிரையிலுமாக ஏறி, தனது சைன்யத்தைச்சேர்த்துக்கொண்டு பிஜ்னூரைவிட்டு தோடாவை நோக்கிப்புறப்பட்டான். தாராபாய் கொஞ்சங்கூட அதைரியப்படவில்லை. மேலும்போகும் வழியெல்லாம் தன் தகப்பனுருக்கு தைரிய வார்த்தையே சொல்லிவந்தாள். கடைசியாக தோடாநகரம் சேர்ந்தார்கள். ஆனால் அலாவுடீனுக்கு இவர்கள் வருகிறது முன்னதாகவே தெரிந்து ஒருபெரிய சைன்யத்தைச்சேர்த்து யுத்தத்துக்குத் தயாராயிருந்தான். ஒருகோரமான யுத்தம் நடந்தது. தாராபாய் தன்னால் ஆனமட்டும்பார்த்தாள், மாளவில்லை. முதலில் தோல்வியடையவே திரும்பவும் பிஜ்னூருக்கு வந்துவிட்டார்கள், எல்லாரும் கவலைப்பட்டார்கள். ஆனால் தாராபாய் மாத்திரம் ஒன்றும் பேசவில்லை. தனது தைரியத்தை விட்டுவிடவில்லை, இன்னொரு தரமானும் போய் யுத்தம் செய்து வெற்றி பெறலாம் என்றே எண்ணிக் கொண்டிருந்தாள்.

நிற்க, தாராபாய் நல்ல ரூபவதி என்று முன்னமேயேசொன்னேம். அவளுடைய அழகும், தேகபலமும், தைரியமும், சாஸ்திர வித்தையில் அவளுடைய ஞானமும், அநேகதேசத்து ராஜாகளுக்குத்தெரிந்தது. அநேகர் அவள்மேல் மோகம் கொண்டார்கள். அநேகர் தன்னைக் கல்யாணம் செய்துகொள்வாள் என்று எண்ணி வணக்கமாய் கடிதங்களும் நல்ல கொடைகளும் அனுப்பினார்கள். சூரசேனன் தனது பெண்ணைப்பார்த்து, என்னயோசனை பண்ணுகிறாய், இவ்வளவு ராஜாக்கள் உன்னைவிவாஹம் செய்ய வலுவிலே வரும்பொழுது நீ சும்மா விருப்பது அழகாயில்லை. ஆகையினால் நீ யாரைக்கல்யாணம் செய்ய நிச்சயித்திருக்கிறு

யோ என்னிடம்சொல். நான் முடித்துவைக்கிறேன் என்றுசொன்னான். அதற்குஅவள்பதில் சொன்னது ஒன்றுதான். அதாவது: "யார் என்தகப்பனாருடைய ராஜ்யத்தை அலாவுடீன் கையிலிருந்து மீட்டிக்கொடுக்கிறாரோ, அவருக்கே நான் மாலையிடுவேன்" என்றாள். இந்த ஸமாசாரம்எல்லாராஜாக்களுக்கும்தெரிந்தது. ஆனால்ஒருவருக்கும் அலாவுடீனிடம் சண்டை செய்து ஜெயிக்கலாம் என்ற நம்பிக்கை கிடையாது. கடைசியாக எல்லாரும் விட்டுவிடவே முந்திச்சொல்லிய ராணா ரெய்மாலின் புத்ரன் ஜெய்மால் என்பவன், தான் யுத்தம் செய்து ராஜ்யத்தைத் திரும்பவும் மீட்டிக் கொடுக்கிறதாகப்பொய்சொன்னான். ஆனால்அதைப்பொய் என்று முதலில் ஒருவரும் நினைக்கவில்லை. தாராபாயும்நினைக்கவில்லை. ஆகவே ஜெய்மால் சொல்லுகிறதை நம்பி சந்தோஷித்தவளாய் தன் தகப்பனாரிடம் ஜெய்மாலை வரவழைக்கச் சொல்லவே அப்படியே அவனும் தாராபாயைப்பார்க்கவந்தான். மூடன் தான் முன்னால் சொன்னது பொய் என்று தன் வாயாலேயே வந்துவிட்டது. உடனே சூரசேனனுக்குக் கோபம் வந்துவிட்டது. கோபத்தில் தன்இடுப்பில்இருந்த கத்தியை உருவிஉடனே ஜெயமாலைக்கொன்றுவிட்டான். மற்றெல்லா ராஜாக்களும் சூரசேனன் செய்ததைப்பற்றிக் கோபித்தார்கள். பிற்பாடு ரெய்மால் சூரசேனனை தண்டிப்பதற்காக அழைத்துக்கேட்டபொழுது, சூரசேனன் சொன்னதாவது: "எப்பொழுது ரஜபுத்ரனாக ஒருவன் பிறந்துவிட்டானோ, பொய் சொல்லுவதும் துரோகம் செய்வதும் அவனிடத்தில் துளிக்கூட வாஸம் செய்யக்கூடாது. ஆகையினால் அப்பேர்கொத்த ரஜபுத்ரன் இறந்ததற்கு நீ சந்தோஷப்படவேண்டியது." பிற்பாடு ரெய்மால் தன் முதல்புத்ரன் செய்தது தப்பிதந்தான் என்று அறிந்து ஒன்றும்பதில் போசாமலிருந்துவிட்டான்.

ரெய்மாலுக்கு 2-வது புத்ரன் ஒருவன்இருந்தான் அவன்பெயர் ப்ருத்விராஜன். அவனுக்கு தாரா கைக்கொண்டிருக்கிற விரதம் எட்டியது. அவனுக்கு காடுகளில் வேட்டையாடுவதில் ஸமானமாய் ஒருவரும் கிடையாது. அவனுக்கு வெகுகாலமாக அலாவுடீனிடம் சண்டைசெய்ய வேணுமென்ற ஆசை வாஸ்தவத்திலேயே இருந்தது. இது நல்லஸமயம் என்று எண்ணினவனாய் பிஜ்னூருக்கு வந்து தனது அபிப்பிராயத்தை சூரசேனனிடமும் தாராபாயிடமும் வெளியிடவே, தாராபாய் அவளுடைய கூர்மையானகண்ணாலே அவனைப்பார்த்த வண்ணமாகவே, "வாஸ்தவத்திலே தாங்கள் அலாவுடீனிடம் சண்டை செய்து ராஜ்யத்தை மீட்டி என் தகப்பனாரிடம் கொடுப்பீரா!? என்றுகேட்டாள். உடனே ப்ருத்விராஜன் தயங்காமல், "நான் அலாவுடீனிடம் சண்டைசெய்து யுத்தத்தில் ஜெயித்து ராஜ்யத்தை உனது தகப்பனாருக்குச்சேர்த்து வைப்பேன் என்பதற்கு ரஜபுத்ர மதத்தின் பேரில் சத்தியம்" என்று உறுதியாய்ச் சொன்னான். ஆகவே தாராபாய் அவன்பேரில் நம்பிக்கை வைத்து சீக்கிரத்திலேயே கல்யாணத்தையும் செய்துகொண்டாள். ஏன் சீக்கிரம் கல்யாணம் செய்துகொண்டாள் என்றால், அலாவுடீனிடம் சீக்கிரத்தில் சண்டைசெய்து ராஜ்யத்தை தகப்பனார் அடையவேண்டும் என்றஆத்திரம் அவளுக்கு ரொம்ப இருந்ததினால் தான்.

ப்ருத்விராஜன் யுத்தத்தில் ஸமர்த்தன் என்பது பின்னால் சொல்லப்போகிறதினால் விளங்கும். சண்டைக்குப் புறப்படவும் நாள்பார்த்தான். அப்பொழுது துலுக்கர் மொஹரம்பண்டிகை வந்திருந்தது. எல்லாரும் மொஹரம் நாள்களில் பட்டினியாய் இருந்துகொண்டு மசூதிக்குப்போய் ஜெபம் சொய்துகொண்டிருப்பார்கள். அப்பொழுது ஆயுதபாணிகளா

யிருக்கமாட்டார்கள். அப்பொழுது போனால் வெற்றி சுலபத்தில் பெறலாம் என்று ப்ருத்வி ராஜனுக்குத் தோன்றி ஒரு ஸைன்யத்தைச் சேர்த்துக்கொண்டு, தோடாப் பட்டணத்துக்கு வந்து, வெளியில் மறைவான ஓர் இடத்தில் ஸைன்யத்தை இருக்கச்சொல்லி, தானும் தாராவை ஆண்வேஷம் போட்டுக் கொள்ளச் சொல்லி, அவளையும், கூடத்துணைக்கு ஒரு நம்பிக்கையுள்ள போர்வீரனையும் அழைத்துக்கொண்டு, எல்லாரும் கூட்டத்தோடு கூட்டமாகப் போய்க்கொண்டிருந்தார்கள். மசூதியைச்சுற்றிக் கூட்டமாயிருந்தது. அலாவுடீனும் ஒருபெரிய வீட்டில் ஜன்னல் வழியாக எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டிருந்தவனாய் இவர்கள் மூவரையும் கவனித்து அவர்கள் மூவரும், யார், எந்ததேசம், என்று விசாரிக்கும்படி மந்திரியிடம் சொன்னான் உடனே அவன், எங்கே, என்றுகேட்டான், 'அதோ' என்று அலாவுடீன் காட்டுவதற்குள்ளாக, அவன்தேகத்தில் ஒருஅம்பும் ஈட்டியும் அதிவேகமாய் வந்துபாயவே அப்படியே கீழே விழுந்து விட்டான். எல்லாரும் அழ ஆரம்பித்து விட்டார்கள். அவரவர்கள் மசூதியை விட்டு வெளியே ஓட ஆரம்பித்து விட்டார்கள். சிலர் இந்த மூன்றுபேர்களையும் பிடிப்பதற்காக ஓட்டமாய் வந்தார்கள். ஆனால் இவர்களா அவர்கள் கையில் அகப்படுகிறவர்கள்? காற்றுப்போல் ஓடிவந்தார்கள், வரும் வழியில் அநேகரைக் கொன்றார்கள், கோட்டைவாசலுக்கு வந்துவிட்டார்கள், கோட்டைவாசலில் பெரிய யானை ஒன்று கட்டியிருந்தது,' முன்னால் போனால் யானை வழிமறிக்கிறது, பின்னாலேயோ, கற்களும் கழிகளும், மேலே விழுந்த வண்ணமாகவே இருக்கின்றன. உடனே ப்ருத்விராஜன், தாராபாயைப்பார்த்து "தயங்காதே, தைர்யமாயிரு, யானையின் தும்பிக்கையில் உன்கையில் இருக்கிற ஈட்டியால் குத்து" என்று உரக்கச் சொல்லவே, நல்லபலத்தையுடைய தாராபாய் ஒரு நிமிஷங்கூட நிற்காமல் யானையின் தும்பிக்கையில் ஈட்டியால் ஓங்கிக்குத்தவே அது அப்படியே அலறிக்கொண்டு கீழேவிழுந்தது. வெளியில் வந்துவிட்டார்கள். ஸைன்யம் தயாராயிருந்தது. தங்கள் குதிரைகளில் ஏறிக்கொண்டார்கள். துலுக்கரோடு சண்டை செய்தார்கள். எல்லாரும்பட்டினி. ஓட்டமெடுத்தார்கள். அநேகர் மாண்டார்கள். தோடாப்பட்டணம் காலியாய் விட்டது. தாராபாயும் ப்ருத்விராஜனும் ஜெயித்து விட்டார்கள் உடனே பிஜ்னூரிலிருந்த தனது தகப்பனாருக்கு செய்தி சொல்லியனுப்ப ஆள்களை அனுப்பி அவரை வரவழைத்தாள். திரும்பவும் தோடதேசத்துக்கு சூரசேனன் ராஜாவானான். அவன்தன் பெண் பேரிலும் மாப்பிள்ளை பேரிலும் வைத்திருந்த விசுவாஸத்துக்கு ஒரு கணக்குக்கிடையாது. இப்படி கொஞ்சகாலம் இருந்து வந்தார்கள். மகமதியர்கள் தாங்கள் தோல்வியடைந்ததை மறந்துவிடவில்லை. ஆஜ்மீர்தேசத்தை ஆண்டுவந்த துலுக்க ராஜா ப்ருத்வியை தண்டிக்க வேண்டுமென்று கருதிக் கொண்டிருந்தான். அவன் எண்ணத்தை யறிந்துகொண்ட ப்ருத்விராஜன் ஒரு ஸைன்யத்தைச் சேர்த்துக்கொண்டு ஆஜ்மீரை நோக்கிச்சென்று துலுக்கனைத்தோற்கடித்து, ஆஜ்மீரைத் தன்னுடைய தாக்கிக்கொண்டான். பிற்பாடு ஒருவனும் தன்னிடம் யுத்தம் செய்ய வரமாட்டான் என்று தெரிந்ததும் ப்ருத்விராஜன் தனது ராணி தாராபாயை அழைத்துக் கொண்டு கோமல்மீர் என்னும் பட்டணத்திற்குப்போய் அங்கே ஒருகோட்டை கட்டிக்கொண்டு வெகு காலம் இருவரும் ஸௌக்யமாயிருந்தார்கள்.

ஒரு நாள் ஒரு ஸேவகன் ஒரு கடிதம் கொண்டுவந்து ப்ருத்வியிடம் கொடுத்தான். அது ப்ருத்வியின் தமக்கையாரிடமிருந்து வந்திருந்தது. அந்த தமக்கையார் விரோஹி தேசத்து ராஜாவைக் கல்யாணம் செய்திருந்தாள். ஆனால் அவனுக்கு ராஜ குணங்கள் என்பதே கிடையாது. பெரிய குடிகாரனாய் இருந்துகொண்டிருந்தான். அபின் தின்பதுக்கு எல்லை கிடையாது. இப்படி யிருந்ததினால், அவனிடமிருக்கவேண்டிய தயை, தாக்ஷண்யம், அன்பு யென்பவை போய், கோபம் மூர்க்கத்தனம், கொடூரத்தனம் அவனிடம் குடிகொண்டன. எப்பொழுதும் தனது ராணியை அடிப்பான். லஜ்ஜையின்றிப் பேசுவான். அவள் பொறுக்கமாட்டாமல் தன் தமயனை ப்ருத்விக்குக் கடிதமெழுதியிருந்தாள். அதில் "அண்ணாவுக்கு கோடி நமஸ்காரம். இந்தமனுஷனிடமிருந்து காப்பாற்றவேண்டியது உன் கடமை. என்னால் பொறுக்கமுடியவில்லை. என் தகப்பனார் வீட்டுக்குக் கொண்டுபோய்ச் சேர்த்துவிடு" என்று கண்டிருந்தது. அதற்கு ப்ருத்வி 'நான் வருகிறேன்' என்றுமாத்திரம் பதில் எழுதிக் கொடுத்தனுப்பிவிட்டான்.

ஒருநாள் ராத்திரி விரோஹி ராஜா, படுக்கையில் குடித்துவிட்டுப் படுத்துக்கொண்டிருந்தான். அவனுடைய ராணி தனது நிலைமையை நினைத்து வருந்தினவளாய் தரையில் படுத்துக்கொண்டிருந்தாள். திடீரென்று ஈட்டியும் கையுமாக விரோஹிராஜாவுக்கருகில் ப்ருத்விராஜன் நின்றான். அதற்குள்ளாக தமக்கை அவனைப்பார்த்து "கொன்றுபோடாதே. கொன்றுவிட்டால் என் கெதி என்னமாயிருக்கும் என்று யோசித்துப்பார். வேறு ஏதாகிலும் வழிபண்ணு," என்றாள். உடனே ப்ருத்வி ஓங்கின கையை நிறுத்திவிட்டு விரோஹிராஜனைப்பார்த்து "இவளைப் பிரதக்ஷணம்செய்து, நமஸ்காரம் பண்ணி, இவள் காலிலிருக்கும் பாதரக்ஷையை உன் தலையில் வைத்துக்கொள், செய்யாவிட்டால் குத்திவிடுவேன்" என்றுபயமுறுத்தினான். உடனே விரோஹிராஜா பயந்து எல்லாவற்றையும் செய்தான். கொஞ்சநாள் ஸரியாய் நடந்துவந்தான். ப்ருத்வி ராஜனும் விருந்தாளிபோல 7,8 நாள் அவ்விடமிருந்தான். விரோஹிபட்டணம் பக்ஷணங்களுக்குப்பேர்போனது. பிருத்விராஜன் ஊரைவிட்டுப் போகும்பொழுது விரோஹிராஜா விஷம்கலந்த பக்ஷணங்களை நிறையப்ருத்வியிடம் கொடுத்தனுப்பினான். ப்ருத்விக்கு விஷமென்றுதெரியாது. வரும் வழியில் பசியாயிருந்தது. அந்த பக்ஷணங்களில் கொஞ்சம் தின்றான் தின்றுவிட்டு மெதுவாக கோமல்மீர்வந்து சேருகிறதற்குள், தலை கிறுகிறுத்து கீழேவிழுந்துவிட்டான். அருகிலிருந்த ஸேவகர்களைப்பார்த்து "சீக்கிரத்தில் போய் தாராபாயை இவ்விடம் நான் வரச் சொன்னதாகச் சொல்லு. இப்பொழுது தவறினால் இனிமேல் பார்க்கமுடியாது என்றும் சொல்லு" என்று சொன்னான். அவர்கள் ஓட்டமாய் ஓடி தாராபாயிடம் ஸமாசாரம் தெரிவிக்க அவளும் விரைவாக வந்தாள். ஆனால் அவள் வருவதற்குள் ப்ருத்வியின் ஜீவனை யமன் அபகரித்துவிட்டான். உடனே அவள் மனம் வெடித்து அருகிலிருந்தவர்களைப் பார்த்து 'என் பர்த்தாபோனபிற்பாடு எனக்கு உயிர் எதற்காக இருக்கிறது. ஜதையை அடுக்குங்கள், நானும் அவர் போகிறலோகத்துக்குப் போகிறேன்" என்று சொல்லவே, அப்படியே மூட்டப்பட்ட ஜதையில் தன்பர்த்தாவுக்கருகில் தானும் விழுந்து வேறு லோகம் சேர்ந்தாள். லோகத்தில் தைர்யத்தை தாராபாயிடம் எல்லாரும் கற்றுக்கொள்ள வேண்டும். பர்த்தாவிடத்தில் விசுவாஸம் இருப்பதற்கும் அப்படியே.

டி. எஸ். வைத்யநாதன்.

## SELECTIONS.

## விசேஷத்திரட்டு.

### COOKING RICE.

### சாதம் சமைத்தல்.

நாம் ஆயிரக்கணக்கான வருஷங்களாய் சாதம் சமைத்து வருகிறோம். சாதம் வடித்துக் கஞ்சியைக்கொட்டுவதினால் என்ன நஷ்டமுண்டாகிறதென்று சாஸ்திரயுக்தமாய் அறியாமலிருக்கிறோம். மகம்மதியர் சாதம் சமைப்பது வேறுவிதமாயிருந்தும் அவர்கள் பழக்கத்தை நாம் கற்கவில்லை. அவர்கள் சாதம் வேகும்போது ஒரு கல் உப்புப்போட்டு சாதம் வடித்து, அதை அனலில்போட்டு, நீர் சுண்டி சாதம் மலர்ந்த பிறகு ஒரு கரண்டி நெய் வார்த்து வைப்பதுண்டு. உப்புப்போடுவதினால் அரிசியில் உள்ள சிகணம் கஞ்சியில் நஷ்டமாகாமல் இருக்கும். உப்புப்போடுவது சாதம் பிளக்காததற்கு முன்னமே நடக்க வேண்டும். அரிசியைக் கொட்டையாக வேவித்தே பிள்ளைப் பெற்றவர்களுக்குப் பத்தியச்சோறு சமைப்பது, அரிசியின் ஸத்து குறையாமலிருக்கவேண்டுமென்ற எண்ணமே. கஞ்சி வடிக்காமலே சீனரும் மற்றவரும் சாதத்தைப் பொங்கிச் சாப்பிடுவதுண்டு. ஆகவே மகம்மதியர் சாதம் சமைப்பது போலவே நாம் அனுஸரிப்பது விசேஷம். அரிசிக்கும் சாதத்துக்கும் உள்ள வித்தியாசம்.

| | அரிசி. | சாதம். |
|---|---|---|
| நீர் | 14·6 | 52·7 |
| சிகணம் | 7·5 | 5·0 |
| மாவு முதலியன. | 76·9 | 41·9 |
| தைலம் | ·5 | ·1 |
| உலோகவர்க்கங்கள் | ·5 | ·3 |
| மொத்தம் | 100·0 | 100·0 |

ஆகசாதத்தில் 38 பாகம் ஜலம் அதிகமிருக்கிறது. $2\frac{1}{2}$ பாகம் சிகணமும், 35 பாகம் மாவும், பத்தில் நாலுபாகம் தைலமும் இரண்டு பாகம் உலோகவர்க்கங்களும் கஞ்சியில் நஷ்டமாகின்றன.

அளிய சமைத்தசாதம் ஜீர்ணமாகாததற்குக் காரணமென்னவெனில் ரத்தத்தில் சேரவேண்டிய சிகணவஸ்து, உலோகப்பொருள்கள்முதலியன கஞ்சியில் வெளிப்பட்டு சாதத்தில் வெறும் மாவு இருந்து அஜீர்ணமுண்டாகிறது. மாவு ஜீரணமாதல் கஷ்டம். சாதம் விறைப்பாக இருப்பதே நல்லது. சாதம் உடையாமலும் வெடிக்காமலும் இருந்தால்தான் அதன் ஸத்து வெளியேறாமல் நிற்கும். இவ்விஷயத்தை நம்மவர்கள் கவனித்து அனுஸரிப்பார்களானால் அரிசியின் முழுப்பலன் தேகத்துக்கு உபயோகப்படும். தற்காலம் அரிசி உணவே எல்லாவற்றிலும் சிரேஷ்டமென்று அமெரிக்காவில் விசேஷமாகச் சாதம் சாப்பிடுகிறார்கள்.—தென்னிந்திய விவஸாயம்.

### VIRGIN WIDOWS.

### இளங்கைம்பெண்கள்.

கைம்பெண்கள் எவ்வளவு பாலியமாயிருந்தாலும், நகையணியக்கூடாதென்றும், வளையல் போடலாகாதென்றும், அலங்காரஞ் செய்துக்கொள்ளத் தகாதென்றும், சுபகாரியங்களில் அவர்கள் வருதல் நல்லதல்லவென்றும், வெள்ளை வஸ்திரந்தவிர மற்ற வஸ்திரங்கள் தரிக்கக்கூடாதென்றும், பிராமணப்பெண்கள் கூந்தலை நீக்கிவிடவேண்டுமென்றும், இவ்வித கோரமான ஏற்பாடுகள் பலவற்றை நமது

தேசத்திற் செய்துவருகிறார்கள். இவ்வேற்பாடுகளுக்கெல்லாம் அவர்கள் இணங்கி நடக்கும் போது இவ்வுலகத்திலுள்ள சுகானுபவம் யாதொன்றும் அவர்களுக் கில்லாமையால் அவர்கள் உயிர்நீங்கிய சரீரத்திற் கொப்பாயிருக்கின்றார்கள். தங்களது அதிர்ஷ்டவீனத்தை யாருடன் முறையிடுவார்கள், அந்தோ! பரிதாபம்! புருஷர்களுடன் கூடி வாழ்ந்து சொற்பகாலமேனும் சுகத்தை யனுபவித்த கைம்பெண்களின் பரிதாபமே இவ்வாறாகில், இரண்டு மூன்று வயதுள்ள பெண் குழந்தைகளைக் கலியாணஞ்செய்து கொடுக்க அவர்கள் பருவமடைவதற்கு முந்தியே அவர்களின் கணவர்கள் பரலோகமடைய, அக்காரணத்தால் அவர்கள் அறியாத பருவத்தில் ஸுமங்கலிகளென்னும் பெயர் பிறராற் கூறப்பெற்றிருந்து, தங்கள் அறிவு தோன்றியது முதல் ஆயுள் முடிவு வரையில் அமங்கலிகளென்னும் பெயரையே யாவருஞ் சொல்லக் கேட்டு, சுகமிழந்து, துக்கக்கடலில் ஆழ்ந்து, ஒன்றுந் தோன்றாத துன்பமுறுகின்ற பேதையர்களின் பெருந்துக்கம் எவ்வளவு பரிதாபமானது? அன்றியும், 30, 40-வயதுடையவர்களுக்கு 3, 4, 5, வயதுடைய பெண்களை மணம்முடிக்கின்றார்கள். அப்பெண்கள் பக்குவ வயதிற்கு வருவதற்குள்ளாக அவர்களின் புருஷர்கள் சரீர தத்துவங்கள் குறைந்து, தடியூன்றி நடக்கும்படியாகவும், பரலோக பாக்கியமடையப் பக்குவமுள்ளவர்களாகவும் ஆகிவிடுகிறார்கள். அப்போது அவ்வளவு பாலியத்திலேயே கைம்பெண்கள் என்னும் பட்டத்தைப் பூண்டுகொள்ளுகின்ற பாவையரின் பரிதாப நிலைமை பார்க்கத்தக்கதோ? இப்படி பலவிதங்களிலும் பரிதபிக்கத்தக்க இக்கைம்பெண்களின் கதி எவ்வாறாகின்ற தென்று சற்று சிந்திப்போம். கைம்பெண்களுள்ளே பதிவிரதா சிரோன்மணிகளா யுள்ளவர்கள் தங்கள் கதி இவ்வாறாயிற்றே என்று மனமுருகிக் கஷ்டங்களை யெல்லாம் நாம் அனுபவித்தால் மாத்திரமே நமது கற்புநிலை யாதெனத் தீர்மானித்துக்கொண்டு ஸதா கடவுளைத் தியானித்துக் கற்பழியாமற் காலங் கழிக்கின்றார்கள். வேறு சிலர் இவ்வளவு துன்பங்களை யனுபவித்து இப்புவியிலிருப்பதைவிட இறப்பது நன்மையென்று தற்கொலை புரிந்து கொள்ளுகிறார்கள். மற்றும் சிலர் தங்களது காம இச்சைக்காசைப்பட்டு கள்ளக்கணவருடன் கலவிசெய்து கற்பழிந்து, கருவளர்ந்து, பிறக்கும் குழந்தைகளைக் கொலை செய்து சிசுஹத்தி தேடிக்கொள்ளுகிறார்கள். இவ்வித துன்பங்கள் நேராவண்ணம் மணவாளன் இறந்த மனைவிமார்களுக்கு ஏன் மறுமணம் புரியலாகாதென்பதைப் பற்றிச்சற்று யோசிப்போம். இந்துக்கள் தவிர மற்ற வகுப்பார்களெல்லாம் மறுமணம் செய்துவர இந்துக்கள் மாத்திரம் செய்யக்கூடாதென்று தடுப்பது அறியாமையே. புருஷர்கள் தங்கள் பெண்சாதி யிறந்து பிரேதம் வெளிப்படுவதற்கு முன்பே பெண்ணை நிச்சயித்துக்கொள்வதை சாம்பிரதாயமாய் வைத்துக்கொண்டு, தங்களைப் பார்க்கிலும் பதின்மடங்கு அதிகமாக காம இச்சையுடைய பேதமை பெண்பிள்ளைகளுக்கு மாத்திரம் இவ்வித நிர்ப்பந்தம் ஏற்படுத்தியது எவ்வளவு அக்கிரமமென்று நம்மவர்கள் கவனிக்கவேண்டும். நாம் சொல்லி வந்ததெல்லாம் சிறு பிராயத்தில் மணம்புரியப்பட்டவர்கள் பருவமடைவதற்கு முன் கணவனை யிழந்து புருஷ சுகமறியாத பாலிய கைப்பெண்களுக்கே.

## PRECAUTIONS AGAINST THUNDER AND LIGHTNING.

## இடிமின்னலாயிருக்கும்பொழுது செய்யவேண்டியவைகள்.

---

மேகத்தில் இடி முழங்கும்பொழுது அநேகம் சிறுவர்களும் பெரியோர்களும் நடுநடுங்கி ஒருவர்மேல் ஒருவர் விழுந்து கொண்டு ஓடி வீட்டிற்குள் புகுந்துக்கொள்வதை நாம் அடிக்கடி காண்கிறோமல்லவா? ஆனால் இடி முழக்கத்தில் சிறிதேனும் பயமில்லை. ஏனென்றால், அது ஒரு சப்தமே தவிர நம்மைக் கொல்லும்படியான காரியம் அதில் யாதொன்றுமில்லை. ஆனால் மின்னல் தான் அபாயகரமானது.

அது எப்படி உண்டாகிறது என்பதைப் பற்றிச் சற்று கவனிப்போம் ஆகாயத்தில் மிதந்துகொண்டிருக்கும். மேகங்களில் சிலவற்றில் ஒருவிதமான மின்சாரமும், மற்றும் சிலவற்றில் வேறொரு விதமான மின்சாரமும் உண்டாகின்றன. காந்தமானது இரும்பை இழுப்பதுபோல் இவ்விரண்டுவித மின்சாரங்களும் ஒன்றையொன்று ஆகர்ஷிக்கின்றது. அவை ஒன்றாய்க் கலக்கும்பொழுது மின்சாரப் பொறிகள் உண்டாகின்றன. அப்பொறிகளில் உண்டாகும் வெளிச்சத்தைத் தான் நாம் மின்னல் என்கிறோம். அவைகள் உறையும் வேகத்தினால் சப்தமுண்டாகிறது. அதற்குத்தான் இடி யென்று பெயர். மேகத்திலிருக்கும் மின்சாரமானது பூமியினால் இழுக்கப்பட்டு அதன் மூலமாய்ச் செல்லும்.

மின்னலில் மூன்று விதமுண்டு. முதலாவது, படலம்போன்றது. இது உண்டாகும்போது மேகமுழுவதும் பிரகாசிக்கும். இது உஷ்ண தினங்களில் சாயந்திர வேளையில் உண்டாகிறது. இதனால் யாதொரு அபாயமுமில்லை. இரண்டாவது, அதிக பலமும் பிரகாசமுமானது. இது பாம்பைப்போல வளைந்து வளைந்து செல்லும். இது சுமார் 10மைல் தூரத்திலுள்ள மேகங்களின் இடையிலும் செல்லுகின்றது. மூன்றாவது, மின்னல் பந்தைப்போன்றது. இது நெருப்புப் பந்தைப் போல் ஆகாயத்தில் மெதுவாய் நகர்ந்து கொண்டு பூமியின்மேல் பட உடனே மிகுந்த பயங்கரமான வெடி ஓசையை உண்டாக்குகிறது. இது மிகவும் அபாயகரமானது. ஆனால் இது எப்பொழுதாவது ஒரு ஸமயந் தான் உண்டாகிறது. இதைத்தான் ஜனங்கள் இடிவிழுந்ததென்று சொல்லுகிறார்கள். ஸாதாரணமாய் ஜனங்கள் சொல்லுவது போல் அதில் இரும்பு முதலான யாதொரு வஸ்துவும் பூமியில் விழுகிறதில்லை.

மேற்கூறிய மின்னல்களும் இடியும் உண்டாகும்போது நாம் கவனிக்கவேண்டிய அம்சங்கள் அநேகமுண்டு. சிலர் மிக்க தைரியசாலிகள் என்று ஜம்பம் பேசிக்கொண்டு அப்பேர்ப்பட்ட ஸமயங்களில் வெளியே திரிகிறார்கள். அவர்கள் காஞ்சி ஏகாம்பர ஈசுவரன் கோபுரத்தின் சிகரத்திலிருந்து தைரியத்துடன் கீழே குதிக்கிறேன், பாருங்கள், என்று சொல்லுகிறவர்கள் எவ்வளவு புத்திசாலிகளோ அவ்வளவு புத்திசாலிகள் தான். பூர்வகாலம் முதல் நம்மவர்கள் இடியுண்டாகும் பொழுது "அர்ச்சுனா அர்ச்சுனா" என்று சொன்னால் யாதொரு தீங்கும் உண்டாகாதென்று நினைத்து தியானம் செய்து வருகிறார்கள். நம்மவர் தான் இம்மாதிரி செய்கிறார்களோவென்றால், மேல் நாட்டாரும் அப்பேர்ப்பட்ட ஸமயங்களில் இடியால் உண்டாகும் அபாயத்தை நிவாரணம் செய்யவேண்டு மென்று மாதா கோவிலில் மணி யடித்தும் பல பூசைகள் செய்தும் ஸ்வாமியைத் தியானித்தும் வருகிறார்கள்.

அது மூடபக்தியென்பதற்கு யாதொரு ஆட்சேபமுமில்லை. இதைக்காட்டிலும் முக்கியமாய் நாம் செய்யவேண்டிய தென்னென்ன வென்று ஆராய்வது அவசியம்.

முதலில் நாம் வீட்டிற்குள் இருந்தால் எந்தவஸ்துக்களின் மூலமாய் மின்சாரம் செல்லுமோ அவைகளினின்றும் நாம் விலகி இருக்கவேண்டும். உஷ்ணவாயு, புகை, ஓட்டை, உலோகங்கள், ஆகிய இவைகளின் மூலமாய் மின்சாரம் வெகு சுலபமாய்ச்செல்லும். ஆகையினால் 'நெருப்பு எரியுமிடத்தில் நாம் நிற்கலாகாது. ஜன்னல் களிலிருந்தும் நாம் விலகி இருக்கவேண்டும். ஏனென்றால், ஜன்னல்களில் இரும்புக்கம்பிகளிருக்கின்றன. நிர்ப்பயமாய் நாம் இருக்கக்கூடிய இடம் அறையின் நடுப்பாகந்தான். சுவற்றோரத்தில் நிற்கக்கூடாது. கனமான கோணி, கம்பளம் முதலியவைகளின் மேல் பயமில்லால் நிற்கலாம் ஆனால் அவைகள் ஈரமாய் இருக்கக்கூடாது'. மெத்தை வீட்டின் உச்சியிலும் கோபுரங்களின் நுனிகளிலும் இருப்பது மிகவும் மூடத்தனம். ஏனென்றால், மின்சாரத்தை வகிக்கும் மேகங்கள் அப்பொழுது நமக்கு ஸமீபத்தில் இருக்கின்றன.

நாம் வீட்டைவிட்டு வெளியே இருக்கும் பொழுதும் கவனிக்கவேண்டிய அம்சங்கள் உண்டு. நாம் வண்டியில் போகும்பொழுது பின்னால் சாயாமல் நேராய் உட்காருவது நல்லது. ஏனென்றால் அப்பொழுது மின்சாரமானது வண்டியின் பின்புறத்திலும் பக்கத்திலும் சென்றுவிடும். வண்டியில்லாமல் நடந்து செல்லும்போது, மரத்தினடியில் போய் நிற்பது மிகவும் அபாயகரமானது. மின்சாரம் நம்தேகத்தின் மூலமாய் எளிதிற் செல்வதுபோல் விருக்ஷத்தின் மூலமாய்ச் செல்லாது. ஆனதால் நாம் மரத்தின்கீழ் நிற்கும் போது நம் தேகத்தின் மூலம் பாயுமே தவிர, விருக்ஷத்தை ஒன்றும் செய்யாது. அநேகம் மாதா கோவில்களின் உச்சியின் மேலும் பெரிய கட்டிடத்தின் சிகரங்களின் மேலும் கூரான காந்தம் வைத்திருப்பதை நாம் இன்றும் காணலாம். ஆனால் அது சிகரத்தின் உச்சியில்மாத்திரம் வைக்கப்பட்டில்லை. அதிலிருந்து உலோகத்தினாலாகிய கம்பி, கட்டிடத்தின் மூலமாய்ச் சென்று பூமிக்குள் புதைக்கப்பட்டிருக்கிறது. உண்டான மின்சாரம் காந்தத்தினால் இழுக்கப்பட்டு கட்டிடத்திற்கு தீங்கு இல்லாமலே கம்பியின் மூலமாய்ப் பூமிக்குள் சென்றுவிடுகிறது.

மேலும் அப்பேர்ப்பட்ட காலங்களில் நாம் வெளியே இருந்தோமானால் ஜனங்களின் கூட்டத்திலும் மிருகங்களின் கூட்டத்திலும் இருப்பது தப்பு. காரணம் ஏனென்றால், ஜீவஜந்துக்கள் சுவாசிக்கும்பொழுது உஷ்ணமான ஆவி மேலே கிளம்புகிறது. அதன் மூலமாய் மின்சாரம் சென்று அவைகளைத் தாக்கலாம். குளம், குட்டை, முதலானவைகளின் ஸமீபத்தில் இருப்பதும் தப்புத்தான். மின்சாரம் ஜலத்தைக்காட்டிலும் உலர்ந்த நிலையில் நாம் இருப்பதால் அது நம் மூலமாய்ச் செல்லும்.

கடைசியாய் நாம் கவனிக்க வேண்டிய தென்னவென்றால், நாம் வெளியே போகும் பொழுது இரும்புக்கம்பி போட்ட குடையைப் பிடித்துக்கொண்டு செல்லலாகாது. ஏனென்றால், அந்தக்கம்பி மின்சாரத்தை இழுக்கும். இடியும் மின்னலும் விசேஷமாயிருந்தால் உலோக சம்பந்தமான வஸ்துக்கள் நம்மிடத்தில் இருக்கக்கூடாது. அப்போது கெடியாரம் ரூபாய், முதலானவைகளை எடுத்துத் தூரத்தில் வைத்துவிட வேண்டியது.—சுதேசமித்திரனில் ஒரு நிருபர்.

## COCOANUT PLANTING.

## தென்னந்தோப்பு வைத்தல்.

சில வருஷங்களுக்கு முன்னல் தேங்காய் ஒன்று 4-பை முதல் 6-பை வரையில் தேங்காயின் பருமனுக்குத் தக்கப்படி விற்றுக் கொண்டிருந்தது. இப்பொழுதோ சென்னையில் தேங்காய் ஒன்று ஒரு அணு முதல் ஒன்றரை அணு வரையில் விற்று வருகிறது. அதாவது ஏறக்குறைய மூன்றுபங்கு விலையாகி யிருக்கிறது. சரியானபடி மழை பெய்யாததால் உணவுப் பொருட்களுக்கெல்லாம் விலையேறி யிருப்பதைப்போல தேங்காய்க்கும் விலை யதிகரித்திருக்கிறதென்பது பொது ஜன அபிப்பிராயம். இப்படி அபிப்பிராயப்படுவது சரியன்று. ஏனென்ருல் விசேஷமாய் தென்னந்தோப்புகள் வைத்திருப்பது நீர்வளம் நிலவளம் நிறைந்த இடங்களிலானதாலும், மழையின் உதவியை எதிர்பாராமல் எப்போதும் தண்ணீர் பாய்ச்சக்கூடிய இடங்களிலானதாலும், மாணுவாரியை நம்பி ஒருவரும் தென்னந்தோப்பு வைக்கமாட்டார்கள். எவ்வளவு தண்ணீர் பாய்ச்சினுலும் மழைக்குச் சமானமாகுமென்று நாம் சொல்லவில்லை. என்ருலும் தென்னம்பிள்ளைகளுக்குப் போதுமானபடி தண்ணீர் இறைத்து வந்தால் மழையில்லாமற் போனபோதிலும் அதன் மகசூலில் விசேஷமாய் வித்யாசப்படாது. முன் விளைவடைந்ததைபபோல் இப்போதும் விளைந்து வந்தால் விலை யதிக்கபபடவேண்டிய காரணமென்ன வென்னும் கேள்வி பிறக்கலாம். பொதுவாக இதற்குப் பல காரணங் கூறுகிருர்கள். அதாவது முன்னுலிருந்த கூலியை விட இப்போது அதிகக்கூலி கொடுக்கவேண்டி யிருக்கிறதென்றும், எருவின் கிரயம் அதிகரித்திருக்கிறதென்றும், ஆர்பத்நட் கம்பெனி அழிந்துபோன பிற்பாடு நிலக்கிரயம் அதிகரித்திருக்கிறதென்றும், நாகரீகம் அதிகமாக அதிகமாகக்காலையில் ஜனங்கள் பழையசாதம் சாப்பிடுவதை விட்டு இடியாப்பம், ஆப்பம், பிட்டு, முதலிய தேங்காய் சேரும் பலகாரங்களைச் சாப்பிடுவதால் தேங்காய்கள் அதிகமாய் செலவாகின்றனவென்றும் அதனுல் விலை அதிகரித்திருக்கிறதென்றும் நினைக்கிருர்கள்.

விலை அதிகமானதற்கு இவைகள் மட்டும் முக்கியமான காரணங்களல்ல. பின் என்னதான் முக்கிய காரணங்களென்ருல் ஐரோப்பியர்கள் கொப்பரைத்தேங்காயிலிருந்தும், தேங்காயெண்ணையிலிருந்தும் அநேக உபயோகமான பதார்த்தங்கள் செய்வதற்காக இந்தியாவிலிருந்து தேங்காய்களையும் தேங்காயெண்ணெயையும் ஏற்றுமதியாக்கிக்கொண்டு போவதுதான். இப்போது மேல் நாட்டாருக்கு எவ்வளவு எண்ணெய் வேண்டியதா யிருக்கிறதோ அவ்வளவு எண்ணெய் நமது தேசத்தில் அகப்படவில்லை. ஆகையால் விலைகளை நாளுக்கு நாள் உயர்த்திக்கொண்டே போகிருர்கள். தேங்காய்களாய் விற்பதைவிட தேங்காய் யெண்ணெய் செய்து விற்பதில் இவர்களுக்கு அதிக லாபம் கிடைப்பதால் விசேஷமாய்த் தேங்காய்களை அனுப்புவதில்லை. நம்மிற் சிலர் தேங்காயெண்ணெயை அப்பளம் வறுப்பதற்கும், வடை முதலிய பலகாரங்கள் செய்வதற்கும், கறிகள் தாளிப்பதற்கும், மருந்துகள் செய்வதற்கும்மட்டும் உபயோகிக்கிருேம். ஐரோப்பியர்களோ தேங்காயெண்ணெயிலிருந்து நாணுவிதமான சோப்புகளும், தேங்காய் சிரட்டைகளிலிருந்து விதம் விதமான பொத்தான்களும் தேங்காய் நாரிலிருந்து புருஷ்களும் தேங்காயிலிருந்து நெய்யும் செய்து விசேஷ லாபம் பெறுகிருர்கள். தேங்

காயிலிருந்து செய்யப்படும் நெய்க்கும் வெண்ணெய் உருக்கி யெடுத்த அப்பட்டமான நெய்க்கும் கொஞ்சமாவது வித்யாசமில்லையாம். குழந்தை முதல் நல்ல நெய் சாப்பிட்டுப் பழக்கப்பட்டவர்களால் கூட தேங்காயிலிருந்து செய்யப்படும் நெய்க்கும் அப்பட்டமான நெய்க்கும் வித்யாசம் கண்டு பிடிக்க முடியாதாம். இப்போது இவ்வியாபாரம் செய்வதற்காக கொழும்பிலும் சீமையிலும் பெருத்த விடுமுதலோடு ஒரு வியாபாரஸ்தலம் ஏற்பட்டிருக்கிறது. இதில் நாளொன்றுக்குத் தற்காலம் லட்சம் தேங்காய்கள் வாங்கிவருகிறார்கள்.

சீமையிலோ தேங்காயெண்ணெய் வீசை ஒன்றுக்கு ஒரு ரூபாய் வரையில் கொடுத்து வாங்குகிறார்கள். இவ்வியாபாரம் சீமையோடு மட்டும் நிற்கவில்லை. இப்போது அமெரிக்கா தேசத்து வியாபாரிகளும் இதில் ஊக்கங்காட்டி வருகிறார்கள். எல்லா ஜாதியாரிலும் ஜெர்மனி தேசத்தார்தான் அதிக வியாபாரம் செய்கிறார்கள். அவர்கள் நாளொன்றுக்குப் பதினாயிரம் மணங்கு தேங்காய் நெய் செய்து விற்கிறார்கள். பிரான்ஸ்தேசத்தாரோ அதிகமாய்க் கொப்பரைத் தேங்காய் வாங்கிவருகிறார்கள். புதுச்சேரியில் தேங்காய் நெய் செய்வதற்காகச் சுற்றுப்பக்கங்களிலுள்ள தேங்காய்களையெல்லாம் வாங்குவதோடு வெளியிலிருந்தும் தேங்காய்கள் வரவழைக்கிறார்கள். இன்னும் இருக்க இருக்க தேங்காய்களுக்கு கிராக்கி அதிகமாய் ஏற்பட்டு விடுமே தவிர விலை இறங்காது. ஆகையால் ஒவ்வொரு கிருஷிகரும் தங்களால் எவ்வளவு நிலத்தில் தென்னந்தோப்புகள் வைத்து சரியாய்ப் பாதுகாத்துவர முடியுமோ அவ்வளவு செடிகள்வைத்து உண்டாக்கினால் நல்லலாபம் பெறுவார்கள். தென்னை பயிர் செய்வதைக் குறித்து இனி சுருக்கமாய்ச் சொல்வோம்.

தென்னமரத்தை நீர்வளம் மிகுந்த எல்லா இடங்களிலும் பயிர் செய்யலாம் இருந்தாலும் மணல் பாங்காயுள்ள சமுத்திரக் கரை யோரங்களில்தான் இது விசேஷப் பலனைத்தருகிறது. சவுக்கு மரத்தைத்தவிர விசேஷமாய் வேறு பயிர் செய்யக்கூடாத அநேகமாயிரம் ஏக்ரா மணல் பாங்கான நிலம் சமுத்திரக்கரையோரமாய் நமது இராஜதானியிலிருக்கின்றன. அந்நிலங்கள் வெறுவாய் தரிசாய்த் தான் கிடக்கின்றன. இந்நிலங்களைத் தர்க்காஸ்து கொடுத்தாவது அல்லது சொற்பமாய் விலைகொடுத்தாவது பெற்று அந்நிலங்களில் தென்னம்பிள்ளைகளை வைத்து உண்டாக்கினால் விசேஷ லாபந்தரும். சமுத்திரகரையோரமாயில்லாதவர்கள் மணற்பாங்கான ஆற்றோரத்து நிலங்களிலும் வைத்து உண்டாக்கலாம். இப்படியும் செய்யச் சாத்யப்படாதவர்கள் தங்களிடமிருக்கும் மணற்பாங்கான நன்செய் அல்லது புன்செய் நிலங்களில் வைத்தும் உண்டாக்கலாம். இதற்கு முக்கியமாய் அத்யாவசியமானது என்னவென்றால் இதன் வேர்கள் சுலபமாய் பூமிக்குள் புகும்படியான மண்ணும் ஜலாதாரமுந்தான். எங்கெங்கே இவ்விரண்டும் அபிரிமிதமாயிருக்கின்றனவோ அங்கெல்லாம் தென்னை பயிராகும். வெகு ஆழம்வரையில் வண்டல்சேர்ந்த கொழுத்த மண்ணாயிருக்கும் நன்செய்களில் இது சரியாய்க்காய்ப்பதில்லை. ஏனென்றால் செடிகள் வளத்தினால் கொழுத்துப்போகின்றன. சமுத்திரக் கரையோரமாயில்லாத இடங்களில் ஒருசெடிக்கு ஒருபடிஉப்பு வீதம் வைப்பது அதிசிலாக்யமாகும். தேங்காய்களில் அநேகவிதங்கள் இருந்தபோதிலும் (1) பச்சைக்காய்ச்சி, (2) கவுளிபாத்ரம், (3) நக்குவாரி. (4: செவ்விள

நீர், (5) யாழ்ப்பாணம், (6) கோவா என்னும் ஜாதிகளே முக்கியம்.

1. பச்சைக்காய்ச்சி.—காம்பு, காய்கள் முதலியன பச்சை நிறமாயிருக்கும். காய்கள் உருண்டையாயும் குலைகனத்துமிருக்கும். இந்தஜாதி ஆறாவது வருஷம் முதல் காய்க்கும்.

2. கவளிபாத்ரம்.—காய்கள் மஞ்சள் நிறமாயாவது ஊதா நிறமாயாவது இருக்கும். காய்கள் அவ்வளவு பருமனுயிராமற் போனாலும் நடுத்தரமாயிருக்கும். ஆனால் கொட்டாங்கச்சியும் அதற்குள்ளிருக்கும்பருப்பும் அதிக கனமாயிருக்கும். இதுவும் ஏறக்குறைய பச்சைக்காய்ச்சியைப்போலவே காய்க்கும்.

3. நக்குவாரி.—இது மூன்றுமுதல் ஐந்து வருஷத்திற்குள்ளாக காய்க்க ஆரம்பித்து விடுகிறது. ஆனால் செடி நீடித்து நிற்பதில்லை.

4. சேவ்விளநீர்.—காய், பூ, காம்பு, இவைகள் சிகப்பாயிருக்கும், காய் சிறியதாயும் உருண்டையாயுமிருக்கும். இதற்குள்ளிருக்கும் தண்ணீர் (இளநீர்) வைசூரிகண்டிருக்கிற காலங்களில்கூட ஔஷதமாகக் கொடுக்கலாம். இது ஏழாவது வருஷத்தில் காய்க்கிறது.

5. யாழ்ப்பாணம்.—இதுவும் பச்சைநிறம் சம்பந்தப்பட்ட காய்தான். ஆனால் இதன் காய்கள் பெரியதாயிருக்கும். உள்ளிருக்கும் பருப்பு அவ்வளவு கனமாயிருப்பதில்லை.

6. கோவா.—அலங்காரத்திற்காகவும், காக்ஷி சாலைகளுக்குக் கொண்டுபோகக்கூடிய அவ்வளவு பருமனும் உள்ளது. இது குலைக்கு சுமார் இரண்டு காய்களுக்கு அதிகமாய்க்காய்க்காதாகையால் வியாபாரத்திற்கு லாயக்கில்லாதது.

வித்து தேரிந்தெடுத்தல்.— இளமரமும்கிழமரமுமில்லாத நடுத்தரமான மரத்தில் நன்றாய் முற்றின நெற்றுகளாய்ப்பார்த்து காய்களை அறுத்து அங்கிருந்து கீழேபோட்டால் உடைந்து போகுமாதலால் அப்படிப்போடாமல் குலைகளைக் கயிறுகொண்டு கட்டி மெதுவாக இறக்கிக்கொண்டுவந்து வைக்கவேண்டும். காய்கள் இறக்கிய ஒருமாதத்திற்குப்பின் நடுவது வழக்கம். மூன்று அடி ஆழத்திற்கு நன்றாய்த்தோண்டி எருக்கொட்டி காய்களைப் பூச்சி கரையான் முதலானவைகள் அரிக்காதபடி போதுமான அளவு சாம்பலும் உப்பும் போட்டு ஒரு அடி தூரத்திற்கு ஒருதேங்காய் வீதம் தேங்காய் சற்று மேலே தெரியும்படி நடுகிறார்கள். அப்பால் அப்பாத்திகளில் ஈரம் காய்ந்து போகாதபடிக்குத் தண்ணீர் பாய்ச்சி வருகிறார்கள். இப்படிச் செய்தால் சுமார் மூன்று மாதத்தில் குருத்து வரும். நெற்றுகளை நடுவதற்குமுன் ஒன்று அல்லது ஒன்றரை மாதத்திற்குத் தண்ணீரிலே நெற்றுகளை போட்டு வைத்திருந்து அப்பால் நட்டால் ஒன்றரை அல்லது இரண்டு மாதத்திற்குள் குருத்துவருகிறதாம். இப்படிச்செய்வதில் தண்ணீர் இறைப்பு குறைவதுடன் ஜல்தியில் முளைவருவதால் கரையான் முதலிய பூச்சிகளால் நஷ்டமடைவது குறையும். இம்முறையனுசரிப்பதே நலம். நெற்று நடுவதில் முக்கியமாய் கவனிக்க வேண்டிய விஷயம் என்னவென்றால் நெற்றுக்குள்ளிருக்கும் இளநீர் பூராவாய் சுண்டிப்போகக் கூடாதென்பது தான். குருத்துவந்த ஆறுமாதத்தில் செடிகள் நடலாம்.

சேடிகள் வைத்தல்.—தென்னம் பிள்ளைகள் வைக்க உத்தேசத்திருக்கும் நிலத்தை நன்றாய் அலர உழுது நீர் நிலவளங்களுக்குத்தக்கதாகப்பதினைந்து அடி முதல் இருபது அடி சதுரத்திற்கு ஒரு குழிவீதம் தோண்டவேண்டும். அப்படித்தோண்டும் ஒவ்வோர்குழியும் ஒவ்வொரு சதுரகெஜத்திற்குக் குறையாமலிருக்கவேண்டும். அதாவது மூன்றடி நீளம் மூன்றடி அகலம் மூன்றடி ஆழம் இப்படிக் குழிதோண்டி நன்றாய்க் காயப்போடவேண்டும். குழி நன்றாய்க் காய்ந்தபின் சப்பாத்துக்கள்ளி, அதன் வேர், வேர்பக்கத்திலுள்ள மண் முதலானவை கொண்டுவந்து போடுவதுடன் கொஞ்சம் மக்கிய சாணியும்போட்டுக் குழியின் பாதிபாகத்தை நிரப்புவதுடன் ஒவ்வோர் குழிக்கும் ஒருபடி உப்புவீதம் போடவேண்டும். இப்படிப்போட்டு குழிகள் நன்றாய் ஆறியபின் தென்னம்பிள்ளையைக் கறையான் அரிக்காமல் இருப்பதற்காக அகப்படுமானால் போதுமானபடி மரச்சாம்பலும்,

இல்லாவிட்டால் சாதாரண சாம்பலாவது போட்டுத் தென்னம்பிள்ளைகளை நட்டு வெயில் படாதபடி அதற்கு மூடாப்புப் போடவேண்டும். தென்னம்பிள்ளைகளை மழைகாலத்தில் நடுவதுதான் சிலாக்கியம். இருபது அடிக்கு ஒரு பிள்ளையாக வைப்பதுதான் சிலாக்யம். குறைத்துவைத்தால் இடம் போதாததால் மரங்கள் கோணிக்கொண்டே போவதோடு சரியாயும் காய்க்காதென்று முன்னொருதரம் கிருஷிகனில் தெரிவித்திருக்கிறோமல்லவா? 15 அடிக்கு ஒன்றாக நட்டால் சுமார் 210, பிள்ளைகளும் 20, அடிக்கு ஒன்றாக நட்டால் சுமார் 120, பிள்ளைகளும் ஏக்கருக்குச்செல்லும். செடிகள் வாங்குவதை விட நாமே நாற்றுவிட்டு வைப்பதே நல்லது.

பின்பருவம்.—தென்னம்பிள்ளைகள் வைத்து வேர் நன்றாய் ஊன்றும் வரையில் இரண்டு நாளைக்கு ஒரு தண்ணீரும் வேர் ஊன்றியபின் ஈரம் காப்பதற்குப் போதுமானபடி அந்தந்த இடங்களுக்குத் தக்கபடி வாரத்திற்கு இரண்டு தண்ணீரோ அல்லது ஒருதண்ணீரோ இறைத்து வரவேண்டும். இப்படி ஐந்து வருஷங்கள் வரையில் இவைகளை அதிஜாக்ரதையாய்க் காப்பாற்றவேண்டும். அதற்குபின் தண்ணீர் பாய்ச்சவேண்டியதும் வேண்டாததும் அந்தந்த இடத்தைப்பொறுத்தது. கேவலம்வெறும் மணலாயில்லாத மற்றநிலங்களில் பிள்ளைகள் நட்ட இரண்டு அல்லது மூன்றுவருஷம் வரையில் காய்கறி, இஞ்சி, மஞ்சள், வெங்காயம் அல்லது சொற்பதானியங்களை லாகுபடி செய்யலாம். இப்படிச்செய்வதால் பிள்ளைகளுக்குத் தண்ணீர் இறைக்கும் செலவு தள்ளிப் போவதோடு நிலமும் அடிக்கடிக் கிளறப்பட்டும் எருப்போடப்பட்டும் வருவதால் நிலம் மிகுந்த வளமாயிருக்கும். இப்படிப் பயிர் செய்யப்படாத இடங்களில் வருஷத்திற்கு இரண்டொரு முறையாவது நன்றாய்க்கொத்தி செடிகளுக்கு எருவிடவேண்டும். ஐந்து வருஷங்களுக்குப்பின்னால் ஒவ்வொரு வருஷத்திலும் மழைகாலத்தில் செடிகளைச்சுற்றி ஒவ்வொரு பக்கத்திலும் 4 அடி தூரத்திற்கு நன்றாய் ஆழக்கொத்தி வேர்களை அப்புறப்படுத்தி விட்டு தொழு எரு, சாம்பல், இலைச்சருகுகள் சப்பாத்துக்கள்ளி, தோல்எரு, எலும்புத் தூள், உப்பு இவைகளில் எவை சுலபமாய் அகப்படுமோ அவைகளைப்போட்டு மழை ஜலம் வெளியே போகாதபடி பெரிய பாத்திகளாய்க் கட்டவேண்டும்.

சாதாரண ஜாதிதென்னைமரங்கள் நன்றாய் போஷிக்கப்பட்டு வந்தால் ஆறாவது வருஷம் முதல், காய்க்க ஆரம்பிக்கும். சரியானபடி பின்பருவம் செய்யாவிட்டால் பத்து பதினைந்து வருஷங்கள்வரையில் கூட காய்க்காது. பின்பருவங்களெல்லாம் சரியானபடி செய்து மரங்கள் கட்டையும் இலையுமாய் நின்றால், செடிகளுக்குக் கொழுப்பு அதிகமாயேறியிருக்கிறதென்று தெரிந்துகொண்டு மரங்களைச் சுற்றி ஆழமாய் குழிகள் தோண்டி அவைகளில் சரல் கொண்டுவந்து கொட்டி மண் போட்டு மூடிவிடவேண்டும். இப்படிச் செய்தால் கொழுப்பேறியே செடிகள் காய்க்கும்.

வயது.—தென்னைமரமானது 70 வருஷம் முதல் 100 வருஷம் வரையில் ஜீவித்திருக்கும். இருந்தாலும் 70 வருஷத்திற்குமேல் அது காய்ப்பது அபூர்வம். தென்னைமரத்தைச் சுற்றிலும் மட்டைகள் விழுந்த அடையாளங்கள் நன்றாய்த் தெரியும். ஆறுமாதத்திற்கொருமட்டை விழுவதால் அவ்வடுக்களை எண்ணிப் பார்த்தால் மரத்தின் வயது தெரிந்து கொள்ளலாம்.

மகசூல்.—ஒருவருஷத்தில் ஒருமரமானது 10 குலை தள்ளும். குலையொன்றிற்குப் பத்துக்காய் முதல் 20 காய்கள்வரை காய்க்கும். 20 அடி தூரத்திற்கு ஒரு மரமாக நட்ட கணக்கையும் குறைந்தது குலைக்குப் பத்துக் காய்கள் அகப்பட்டதாயும் வைத்துக்கொண்டாலும், ஏக்கர் ஒன்றுக்கு 120 செடிக்கு செடி ஒன்றுக்கு நூறு காய்களாக வருஷத்திற்கு 12,000 காய்கள் அகப்படும். காய் ஒன்று 9 பை விதம் குறைந்த விலையாகப் போட்டுக் கொண்டாலும் ஏக்கர் ஒன்றுக்கு ஐந்நூறு ரூபாய்க்கு அதிகம் அகப்படும். செலவு ரூபாய் இருநூறு போனாலும் ஏக்கர் ஒன்றுக்கு முன்னூறு ரூபாய் லாபம் அகப்படும். நாம் மேலே சொல்லியபடி இதைவாசித்தவுடன் மறந்து போகாமல் சற்று இவ்விஷயத்தில் கவனம செலுத்தி விவஸாயிகள் லாபம் அடைவார்களென நம்புகிறோம்.

கிருஷிகன்.

## REVIEW OF THE PRESS.

## பத்திரிகை ஆராய்ச்சி.

### THE SERVANTS OF INDIA.

### இந்தியாவின் ஊழியக்காரர்கள்.

"இந்தியன் ரிவ்யூ" என்னும் இங்கிலீஷ் மாதாந்தரப் பத்திரிகையின் ஜூலை மாஸத்து ஸஞ்சிகையில் கனம் கோக்லே அவர்களால் ஏற்படுத்தப்பட்ட "இந்தியா ஊழியக்காரர்கள்" சங்கத்தைப்பற்றி ஒரு வியாஸம் எழுதப்பட்டிருக்கிறது. இந்தச் சங்கமானது 1905-ம் வருஷத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. அப்பொழுது மூன்று பேர்கள் இருந்தார்கள். தற்காலத்தில் 26 பேர்கள் சேர்ந்திருக்கிறார்கள். இந்தச் சங்கத்தின் நோக்கங்களாவன:—ஸ்வதேசமாகிய இந்தியாவை ஜனங்களெல்லாரும் நேசித்து ஒருவருக்கொருவர் ஒத்துழைக்க வேணுமென்பதை போதிப்பதும் அப்படியே நடந்து காட்டுவதும்.

2 ராஜாங்கத்துக்கும் ப்ரஜைகளுக்கும் ஸம்பந்தமான விஷயங்களை ஆராய்ச்சி செய்து பொது வாழ்க்கையை விருத்திசெய்தல்.

3 ஒரு ஜாதியார் மற்றொரு ஜாதியாரோடு சர்ச்சை செய்யாமல் அந்யோந்யமாய்க்கூடி ஒத்துழைக்கச் செய்தல்.

4 பெண்கல்வி, கீழ் ஜாதியாரின்படிப்பு, கைத்தொழில், சாஸ்திரம், முதலியவைகளை யொட்டியப்படிப்பு, இவைகளை விருத்தி செய்தல்.

5 இந்தியாவின் கைத்தொழில்களை விருத்திக்குக்கொண்டு வருதல்.

6 தீண்டாதவர்களின் ஸ்திதியை உயர்த்தல்.

பி. ஏ. பாஸ் செய்தவர்களும் இன்னும் தேச நன்மைக்காக உழைத்தவர்களும் இந்தச் சங்கத்தின் மெம்பர்களாகக்கூடும். ஆனால் இவர்களை மெம்பர்களாகச் சேர்ப்பதற்கு முன்னால் அவர்கள் கொஞ்ச காலத்துக்கு சிஷ்யர்களாயிருந்து விஷயங்களைக் கற்கவேணும். மெம்பராக ஆகும்பொழுது ஒவ்வொருவரும் ஸ்வய நலத்தை நாடாமல் தேசத்துக்கு உழைப்பதாகவும், பணம்ஸம்பாதிக்கிறதில்லை என்றும், பரிசுத்தமாகவே நடந்துகொள்வதாகவும், சங்கத்துக்குக் கீழ்படிந்தே நடப்பதாகவும், இப்படிக்கெல்லாம் ஸத்யம் செய்து கொடுக்கவேண்டும். சங்கத்தின் மெம்பர்கள் டம்பமாய்ச் செலவு செய்யக்கூடாது. அவர்களுடைய சொந்தச் செலவுக்கும், குடித்தனச்செலவுக்கும், குழந்தைகளின் படிப்பு, பெண்களின் கலியாணம் முதலிய செலவுகளுக்கும், மெம்பர் இறந்துபோனால் அவர்களுடைய வார்ஸுகள் கஷ்டப்படாமல் ஜீவனஞ் செய்வதற்கும், தகுந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

### THE COTTON MILL INDUSTRY IN INDIA.

### இந்தியாவில் பருத்தி ஆலைத்தொழில்.

'டான்' என்னும் இங்கிலீஷ் மாஸாந்தரப் பத்திரிகையின் ஸமீபத்து ஸஞ்சிகை ஒன்றில் மேற்கண்ட விஷயத்தைப்பற்றி ஒரு வியாஸம் காணப்படுகிறது. இந்தியாவில் இதுவரையில் தற்கால வியாபார முறைப்படி அமைக்கப்பட்ட தொழில்களில் இதுதான் முக்கியமானதும் இந்தியர்களால் ஏற்படுத்தப்பட்டு நிர்வகிக்கப்பட்டு வருவதுமானது. ஸுமார் 60 வருஷங்களுக்குமுன் முதல் முதலான நூல் நூற்று துணி நெய்யும் மில் அதாவது யந்திர சாலை ஏற்பட்டது. 1910-ம் வருஷம் ஜூன்மாஸம் முப்பதாந்தேதி முடிய 243 மில்

கள் இருந்தன. அவைகளில் 62 லக்ஷம் கதிர்களும் 82,700 தறிகளும் 234,000 கூலிகளும் வேலே செய்தனர். இதற்கு 20 லக்ஷம் மூட்டை பருத்தி செலவாகிறது. மனிதர்கள் ஸொந்தமாகவும் கம்பெனிகளாகச் சேர்ந்தும் ஸுமார் 18 கோடி ரூபாய் இந்தத்தொழிலில் முதலிட்டிருக்கிறார்கள். இந்தியாவில் செலவாகும் துணிகளில் பாதி அந்நிய தேசங்களிலிருந்து வருகிறது. கால்பங்கு இந்தியாவில் மில்களில் உற்பத்தியாகிறது. பாக்கி கால் பங்கு கைத்தறிகளில் நெய்யப்படுகிறது. ஆகையால் தற்காலத்தில் இந்தியாவிலுள்ள மில்கள் இந்தியர்களுக்கு வேண்டிய மில் துணிகளில் மூன்றில் ஒருபாகத்தைத் தான் ஸப்ளை செய்யக்கூடும்.

---

## THE INDUSTRIAL PROGRESS OF JAPAN.

## ஜப்பானின் கைத்தொழில் அபிவிருத்தி.

---

இதைப்பற்றி "பர்க்யூஸன் காலேஜ் மாகவின்" என்னும் இங்கிலீஷ் பத்திரிகையில் வி. ஜி. கோக்லே என்பவர் ஒரு வியாஸம் எழுதியிருக்கிறார். ஜப்பான் தேசமானது தற்காலத்தில் கைத்தொழில்களில் விருத்தி அடைந்திருப்பதற்குக் காரணம் என்னவென்றால், அந்த தேசத்து கவர்ன்மெண்டார் கைத்தொழில் விஷயத்தில் தாம் ஜனங்களுக்கு வழிகாட்டவேணுமென்று ஸங்கல்பம் செய்துகொண்டு செய்த காரியங்களேயாகும். அவர்கள் அதற்காக சிறுவர்களை இதர தேசங்களுக்கு அனுப்பி தொழில்களைக் கற்றுவரச்செய்தார்கள். ஜப்பானிலும் தொழில்களையும், தொழில் பள்ளிக்கூடங்களையும் காலேஜ்களையும் ஸ்தாபித்தார்கள். தாங்கள் ஏற்படுத்திய தொழிற்சாலைகளை ஒன்றன்பின் ஒன்றாக இதர தேசங்களுக்குப் போய் தொழிலைக்கற்றுவந்தவர்களும் தேசீயகாலேஜ்களில் படித்துத் தேறியவர்களும் கிடைத்தவுடனே அவர்களைக் கொண்டு வேலை நடத்தும்படி ஸ்வதேசக் கம்பெனிகளுக்கு விற்றார்கள். உதாரணமாக நாகஸகி என்னும் துறைமுகப் பட்டணத்தில் கப்பற் செய்யும்தொழிலானது மிட்ஸுபிஸ்டு கம்பெனிக்குவிற்கப்பட்டது. இந்தக்கம்பெனியார் சில காலமானதும் அந்நிய தேசத்து நிபுணர்களைபோகச்சொல்லி விட்டு ஸ்வதேச இஞ்சினீர்களைக்கொண்டே வேலை நடத்திவருகிறார்கள். இப்பொழுது அந்த சாலையில் 18,000 டன்னுக்குமேல் ஏற்றக்கூடிய யாத்திரைக்கப்பல்களும், விசைக்கப்பல்களும், பீரங்கிக்கப்பல்களும் செய்யப்படுகின்றன.

மேற்சொன்னபடி ஜனங்களுக்கு கவர்ன்மெண்டார் வழிகாட்டவே, ஜனங்கள் கைத்தொழில்களில் ரொம்ப இறங்கிவிட்டார்கள். தற்போது ஜப்பானில் 32,000 பிள்ளைகள் படிக்கும் 630 சிறுகைத்தொழிற் பள்ளிக்கூடங்களும், 23,000 பிள்ளைகள் படிக்கும் 140 உயர்தரக்கைத்தொழிற் பள்ளிக்கூடங்களும், 600 பேர்கள் இஞ்சினீர் விஷயமாய்ப் படிக்கும் இரண்டு ஸர்வகலாசாலைகளும் இருக்கின்றன. இவைகளைக்கொண்டு ஜப்பான் தேசத்தின் கைத்தொழில்கள் எவ்வளவு ஏறியிருக்கின்றனவென்று நாம் ஊகித்துக்கொள்ளலாம்.

---

சென்னப்பட்டணம் திருவல்லிக்கேணி ஹைரோட் 63 நே வீட்டில் இருந்துவருகிற சிவாநந்தம் பிள்ளை நமக்கு அனுப்பிய பல்பொடி, சந்தனாதித்தைலம், இவைகளை உபயோகித்துப் பார்த்ததில் அவைகள் ஆரோக்யமாயும் வாஸனையுள்ளனவாயும் இருக்கின்றன.

## REVIEWS OF BOOKS
## புஸ்தக ஆராய்ச்சி.

BLACK BOARD DRAWING.


கரும்பலகைச் சித்திரம்.—இது சைதாப் பேட்டை கவர்ன்மெண்ட் ட்ரெயினிங் ஸ்கூலில் ட்ராயிங் மாஸ்டராயிருக்கும் எ. சுப்பிரமணிய அய்யர் அவர்களால் எழுதப் பட்டது.

"குழந்தைகளின் செயல்களை நாம் கவனிப் போமானல் அவர்கள் கையில் எது கிடைத்த போதிலும் அதைப் பிடித்துக்கொண்டு தரை யில் தேய்ப்பதும், சுண்ணும்புக் கட்டியினு லும், கரியினுலும் மாக்கல்லினுலும், தரையி லும் சுவரிலும், கோடு கிழித்துப் பல உருவங் களைக் காண்பிக்க முயல்வதும் நன்கு புலப் படும். இதிலிருந்து நாம் அறிந்துகொள்ள வேண்டியது என்ன? பாலர்களின் கைகள் துறு துறு என்று அசையவும், ஏதோ ஒரு தொழிலைச் செய்யவும் விரும்பும் சுபாவ முடையன என்பதாம். அவரது விரல்களும் யாதாயினும் ஒரு பொருளைப் பிடித்துக்கொள் ளும் தன்மையுடையன. அவரது புத்தியும் பொருள்களின் வடிவங்களை கவனித்து அவ ற்றை வரையும் சுபாவமுடையது. குழந்தைப் பருவத்திற்குரிய இவ்வித சுபாவங்களையும் செயல்களையும் சீர்திருத்தம் செய்யச்சரியான மார்க்கம் அவர்களைச் சித்திரம் வரையச் செய்வதேயாம்.

சித்திரம் வரைதல், குழந்தைகளுக்குக் கண்பழக்கம், கைப்பழக்கம் கற்பனசக்தி, ஞாபகசக்தி, இவற்றில் விருத்தியை உண் டாக்கி, கரும்பலகைக்கு எதிரில் நின்று கைகளை நீட்டி வீசி வரைவதால் கைகால் களுக்கு பலத்தையும் கொடுத்து, பிள்ளைகளி டத்தில் ஒழுங்குபாடு, சுத்தம், முதலிய நல்ல குணங்களை விளைவிக்கிறது."

மேலும், மனிதர்கள் செய்யப்புகும் பல விதத் தொழில்களுக்கும் சித்திரஞானம் அவ சியமாயிருத்தலை அநுபவத்தில் காணலாம். முக்கியமாக, உபாத்தியாயர்களுக்குச் சித்தி ரம் வரைதல் இன்றியமையாத தாயிருக் கிறது.

பள்ளிக்கூடத்தில் பிள்ளைகளுக்குச் சொல் லிக் கொடுக்கும்பொழுது சில வேளைகளில் உபாத்தியாயர்கள் சொல்லுவது விளங்கு வதி ல்லை. அப்படிப்பட்ட ஸமயங்களில் அனேக மாய் சொல்லும் விஷயங்களை 'ப்ளாக்போர்ட் அதாவது ஸ்கூல்களில் உபயோகிக்கப்படும் கருப்புப் பலகைகளில் எழுதிக்காண்பித்தால் பிள்ளைகள் எளிதில் அறிந்து கொள்வார்கள். தற்காலத்துப் படிப்பிக்கும் முறைகளில் விஷயங்களை எவ்வளவுக் கெவ்வளவு எழுதிக் காண்பிக்கலாமோ அவ்வளவுக்கவ்வளவு எழு திக்காண்பித்து போதிப்பதே சிறந்தமுறை என்பது கொள்கை. சித்திர ரூபமாக எழுதி போதிப்பது ரொம்ப சிரேஷ்டமான முறை என்று இருந்தபோதிலும் சித்திரம் வரையும் விஷயத்தைப் பற்றிய விவரங்களை போதிக் கும் புஸ்தகங்கள் இது வரையில் தமிழில் வெளிவந்ததாகத் தெரியவில்லை. ஆகவே முதல் முதலாக வழி காட்டிய மிஸ்டர் எ. சுப்பிரமணிய அய்யருக்கு பொதுவாய் எல் லாரும் நன்றி பாராட்டக் கடவோம். இப்படி ப்பட்ட புஸ்தகங்களை எழுதுவது சுலபமல்ல. அவைகளுக்கு வேண்டிய சித்திரங்களைத் தயாரிப்பது மிகவும் சிரமம். இருந்தபோதி லும் மிஸ்டர் சுப்பிரமணிய அய்யர் முழுபக்க மும் கொள்ளும் படங்கள் 26-க்குக்குறையா மல் கொடுத்திருக்கிருர். அவைகளில் ஒன்றை அடுத்தபக்கத்தில் பார்க்கலாம். இது சிறந்த புஸ்தகமாதலால் எல்லாப்பள்ளிக் கூடங்களி லும் வீடுகளிலும் இதைவாங்கி நூலாசிரி யரை ஆதரிப்பார்களென்று நம்புகிருேம். விலை அணு 12. நூலாசிரியருக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.




ANIMALS.— பிராணிகள்.

# BOYS' SECTION.
## சிறுவர் பகுதி.

THE TALLEST TREE.

**அதிக உயரமுள்ள விருக்ஷம்.**—உலகிலுள்ள விருக்ஷங்களில் அதிக உயரமான விருக்ஷம் காலிபோர்ணியாவிலிருக்கிறது. அது 340 அடி உயரமுள்ளது.

A MONKEY AND A SHEEP.

**ஒரு குரங்கும் ஆடும்.**—ஒரு குரங்கும் ஆடும் வளர்த்து வந்த ஒரு குடித்தனக்காரன் அவைகளைத் தன்னுடன் இட்டுக்கொண்டு, தயிர் சாத மூட்டையும் கையுமாய் கிராமாந்திரத்திற்குப் போகையில், நடுவழியில் ஒரு குளக்கரையின் மேல் மரத்தில் அந்த ஜெந்துக்களைக் கட்டிப்போட்டு ஸமீபத்தில் சாத மூட்டையை வைத்து கால் கை கழுவிக் கொள்ளும் பொருட்டு தான் குளத்திற்குப் போனான். அவன் வருவதற்குள் அக்குரங்கு தயிர் சாதம் அத்தனையும் தின்று, கொஞ்சம் தயிரை ஆட்டின் முகத்தில் தடவிவிட்டு, தான் எப்போதும் போல் தன்னிடத்தில் உட்கார்ந்திருந்தது. குடித்தனக்காரன் வந்து மூட்டையைப் பார்த்துவிட்டு ஆட்டைப்பிடித்துச் சாக அடித்தான். இந்த உலகத்தில் நியாய அநியாயங்களின் நிர்ணயம் அடிக்கடி இப்படியே நேரிடுகிறது.

A CURIOUS FISH.

**ஒரு விநோதமீன்.**—பல்லாரி ப்ரூஸ் பேட்டைக்கு நேராய் வடக்கே போனால் அங்கே வயல்களுக்கு மத்தியில் ஒரு பெரிய கிணறு இருக்கிறது. அதில் ஸமீபத்தில் ஒரு வலைஞன் மீன் பிடித்துக்கொண்டிருக்கையில், ஒருவிசை தன் தூண்டியால் இழுக்க முடியாதபடி அவ்வளவு கனமாய் இருந்தது கண்டு, இது பெரும் மீனாயிருக்கவேண்டுமென்று கருதி தூண்டிலையிழுத்தான். தூண்டில் ஒடிந்து விட்டது. மிகுந்த விசனத்தோடு வீடு திரும்பி, வலைஞன் மறுநாள் தூண்டிலுக்கு ஜவேஜில்லாமல் தன் சிநேகிதன் ஒருவனுடைய வலையை வாங்கிக்கொண்டு அதே கிணற்றுக்குச் சென்று வலைபோடவும், முதலிரண்டு தடவையில் எதுவுங்கிடைக்கவில்லை; மூன்றாந்தடவையில், கொஞ்சம் கனங்கண்டவுடன் மிகுந்த சிரமத்தோடு கரையிலிழுத்தானும். பிறகு அவனுக்குண்டான ஆச்சர்யமென்ன? பஞ்சவர்ணங்களோடு கூடின பெரும் மீனென்று, அதன்வாயில் முன் தூண்டில் குத்துண்டிருக்கக் காணப்பட்டது. நாலரையடி நீளமும் இரண்டரையடி அகலமுங் கொண்டிருந்த அந்த மீனை நான்கு பேராய்த் தூக்கி வந்து ரூபா 20-க்கு விற்று விட்டார்களாம்.

PESTERING CANDIDATES.

**உபத்திரவிக்கும் அபேக்ஷகர்கள்.**—சென்ற வருடக் கடைசியில் ஆங்கிலேய தீவுகளில் பார்லிமெண்டு மெம்பர்களைத் தெரிந்தெடுப்பதற்காக நடந்த எலெக்ஷன்போது ஒரு அபேக்ஷகன் (அதாவது தனக்கு மெம்பர் ஆகவேண்டுமென்று ப்ரயாஸைப்பட்டவன்) நாட்டுப்புறங்களையெல்லாம் வீடுவீடாய் நுழைந்து தரிசித்துத் தனக்கு வோட்டுக்கொடுக்கும்படியாய்க் கேட்டுக்கொண்டான். கடைசியாய் ஆடு மாடு, கோழி, வாத்து, வைத்து வளர்க்கும் ஒரு தோட்டத்தின் வாசல்படிக்கு வந்தபோது அங்கே வயதான ஒரு ஸ்திரீ உட்காந்திருக்கக் கண்டான். உடனே அந்த ராஜ தந்திரி வெகு வணக்கமாய்த் தன் தொப்பியைக் கழற்றி மிகுந்த மரியாதையுடன் "பிரியமுள்ள அம்மா! உன் கணவன் வீட்டில் தான் இருக்கிறாரல்லவா?" என்றுகேட்டான். ஆம் என்று கிழவி பதிலுரைத்தாள். "அப்படியானால் நான் அவரைப் பார்க்கக்கூடுமா?" என்று அபேக்ஷகன் கேட்டான். 'அவர் நாயைக் குழியில் போட்டுப் புதைக்க போயிருக்கிறார்' என்று கிழவி சொன்னாள். அப்போது அந்த மனிதன் உங்களுடைய நாய் செத்துப் போனதைப்பற்றி நான் மிகவும் விசனப்படுகிறேன்' என்று பரிதாபத்துடன் சொல்லி அம்மா அந்த நாய் என்னத்தினால் செத்ததென்று, எனக்குச் சொல்லுவீர்களா?' என்று ராஜ தந்திரி கேட்டான். அதற்குக் கிழவி 'பார்லிமெண்டு மெம்பர்களாகத் தங்களை நியமிக்கும்படியாக எங்கள் வோட்டுகளுக்காக இங்குவந்த கணக்கற்ற வீணர்களைக்கண்டு குலைத்துக் குலைத்துத் தொண்டை வரண்டு வியாதியாகிச் செத்தது' என்றாள். அபேக்ஷகன் மறுவார்த்தை பேசாமல் அப்புறம் போனான்.

THE BURMANS.

**பர்மியர்கள்.**—பர்மன் மாருடைய தருமங்களில் வெகு முக்கியமானது அஹிம்ஸையாம். எந்தக்காரணம் கொண்டும் ஜீவ ஹிம்ஸை கூடாது. இந்தத்தருமத்தை நாம் எல்லோரும் ஒப்புக்கொள்ளுவதில் தடையில்லை. ஆனல் அனுஷ்டானத்தில் பல ஜனங்களுக்குள் பலவிபரீதங்கள் தோன்றுகின்றன. நமது நாட்டில் ஜெயினர்கள் கிருஷித் தொழில் விசேஷமாய்த் தொடங்குவதில்லை. ஏன்? உழும்போதும், அறுக்கும்போதும் லக்ஷக்கணக்கான புழுப்பூச்சிகளை நாம் தெரிந்தும் தெரியாமலும் கொன்று விடுகிரேம். ஆனல் ஜீவனம் செய்யவேண்டுமே, எப்படி? புழுப் பூச்சிகளை, இந்து மகம்மதிய ஜனங்கள் கொன்று கிருஷி செய்து விளைச்சலை உண்டாக்கினல் அதையும், வேறு சரக்குகளையும் வாங்கி, விற்று லாபமடையலாம். "கொன்றவன் பாபம் தின்றவனேடு," என்று ஒரு பழமொழி யுண்டு. ஆனல் அது தப்பு. கொன்றவன் பாபம் கொன்றவனேடே போவதாகையால், சரக்கை வாங்கி விற்பதில் பாபமில்லை, ஹிம்ஸையுமில்லை, என்பது ஜெயினர் கொள்கை போலும்! அப்படியே பர்மன் மாரும். தாங்களாகவே மீன் முதலியவற்றைப் பிடிப்பதோ, ஆடு முதலியவற்றைக் கொல்லுவதோ கிடையாது. ஆனல் பிறர் பிடித்து உலரவைத்த மீனையும், பிறர் கொன்ற மிருகங்களின் இறைச்சியையும் இவர்கள் வாங்கித்தின்பதற்கு ஆக்ஷேபமில்லை! பகவானே! மனிதருடைய யுக்தி எந்த விதமெல்லாம் பாய்கிறது!—வித்யா விஹாரிணி.

HEALTH IS WEALTH.

**நோயற்ற வாழ்வே குறைவற்றசெல்வம்.**—உலகம் நாளுக்கு நாள் விருத்தியடைகின்றது. நூதனமாய் பற்பல விஷயங்கள் கண்டுபிடிக்கப்படுகின்றன; சஞ்சலமென்பது இல்லாமல் சந்துஷ்டியே எங்கும் காணப்படவேண்டுமென்று அறிவோர் அல்லும் பகலும் அதே சிந்தையோடு உழைக்கிறூர்கள். இப்படி ஆன்ரேர் இறங்கியுழைக்கும் பல வேறு துறைகளில், நோய்வராமல் தடுப்பதற்கான உபாயங்களும், வந்தபின் காப்பதற்கான பரிகாரங்களுமே சிரேஷ்டமானவை. ஸகலபோக பாக்கியங்களையும் அனுபவிப்பதற்கு தேகாரோக்கியமே அத்யாவசியம். நோயாளி யொருவன் ஏராளமான ஸம்பத்துடையவனுனலும் ஸரி, ரூபவதியான இளம் மனைவியுடையவனுனலும் ஸரி, ஸகல சாஸ்திர பண்டிதனுனலும் ஸரி, அவனுக்கு ஆனந்தமில்லை. ஆகவே நோயற்ற வாழ்வை விலையற்ற வர ப்ரஸாதமென்று சொல்லலாம். வியாதிவராமல் தடுப்பதற்கான சில உபாயங்களாவன:—

1. சூரிய வெளிச்சம் படக்கூடியதும் நல்ல காற்று உலாவுவதும் தரை மட்டத்திற்குமேல் குறைந்தது 3 தாகதியுள்ளதுமான வீடுகளில் வாசம் செய்யவேண்டும்.—

2. வஸ்திரங்களை நன்ருய்த் தோய்த்து வெயிலில் உலர்த்தி உடுப்பதுடன் பாய் படுக்கைகளை அடிக்கடி வெயிலில் போட்டு வரவேண்டும்.

3. பிரதிதினமும் தேகப்பயிற்சி செய்யவேண்டும் ஸாதாரணமாய் இரண்டொரு மைல் நடப்பதே போதும்.

4. அழுகின பதார்த்தங்களையும் எளிதில் ஜீரணமாகாதவைகளையும் தின்னமல், மிதமாகவே ஒவ்வொன்றையும் நன்ருய் மென்று மன உற்சாகத்துடன் புசிக்கவேண்டும். காலரா காலத்தில் பழைய சாதத்தை தவிர்ப்பதுடன் நீரை நன்ருய்க் காய்ச்சிய பின்பு குடிக்கவேண்டும்.

5. தினம் ஒரு தடவை யாகிலும் மல பாதைக்குப் போகவேண்டும். வாரத்திற்கொருமுறை இரண்டு முட்டை ஆமணக்கெண்ணெய் சாப்பிடுதல் நலம்.

6. சீக்கிரத்தில் படுக்கைக்குச் சென்று அதிகாலையில் எழுந்திருக்கவேண்டும். நன்ருய்க் காற்றுலாவக் கூடிய சப்தமற்ற அறையில் உறங்கவேண்டும். ஸாதாரணமாய், ஆண்மக்கள் $6\frac{1}{2}$ மணிக்குக் குறைந்தும், $7\frac{1}{2}$ க்கு மேலிட்டும், நித்திரை செய்யக் கூடாது. ஸ்திரீகளுக்கு 8, 8-30 மணி நித்திரை வேண்டியது.

(7) மனதில் வீண் எண்ணங்களையும், கவலைகளையும் கொள்ளாமல், எப்போதும் உற்சாகமாயும் நற்சிந்தனைகளுடனும், கூடியிருக்கவேண்டும்.

(8) விஷயாதிகளை அபேட்சிக்காது, கிரமமாய் ஏகபத்னி விரதத்தை அனுஷ்டிக்கவேண்டும். இவ்விதிகளின்படி நடந்தால் நம்மைநோய் அணுகுவதற்கிடமில்லை. நோயுண்டாமிடத்து, வைத்ய சாஸ்திரத்தில் தேர்ந்து உடற்கூறையறிந்து சிகிச்சை செய்யும் விருத்த வைத்யர்களை நாடவேண்டும்.—இந்து நேசனில் ஒரு நிருபர்.

## LADIES' SECTION.
## ஸ்திரீகள் பகுதி.

LADY EDITOR.

பெண் எடிட்டர்கள்.—இங்கிலாந்தில் பெண் எடிட்டர்கள் (பத்திராசியர்) இருப்பது அருமை. இல்லை என்றே சொல்லலாம். அமெரிக்காவிலோ 12-வயதுள்ள பெண் எடிட்டர்களைக் காண்பது ஸகஜமாய் இருக்கிறது. மிஸ் ரோஸ் பட் என்னும் 12-வயதுள்ள அழகிய சிறுமி அமெரிக்காவிலிருந்து இங்கிலாந்துக்கு வந்திருக்கிருள். இவள் "வில்லோதி விஸப்" என்னும் நான்கு பக்கங்களுள்ள ஒரு பத்திரிகையை நடத்துகிருள். 'டெயிலி ந்யூஸ்' பத்திரிகையின் நிருபரொருவரைக்கண்டு அப்பெண் தன்னுடைய தந்தை அமெரிக்காவிலிருந்து வியாபாரார்த்தமாய் இங்கிலாந்துக்கு வந்திருப்பதால் தான் தன்னுடைய பத்திரிகையை இங்கிலாந்தில் ப்ரசுரிக்க நேர்ந்ததென்றும், தனக்கு எடிட் செய்வது மனோரம்யத்தைக்கொடுக்கிறதென்றும், கூறினுள். "எனது முதல் நெம்பர் பத்திரிகை சிகாகோ நகரத்தில் ப்ரசுரமானது. அதில் முதல் ஒரு பக்கத்தில் இரண்டே காலம் வகுக்கப்பட்டிருந்தது. பிறகு பத்திரிகையைப் பெரிதாக்கினேன்" என்ருள். இப்பத்திரிகையால் வரும்படி யுண்டா என்று கேட்க, அப்பெண் "தடை என்ன? அட்வர்டைஸ்மெண்டுகள் ஒரு பக்கம் நிறைந்துள்ளன. ஒரு தடவைக்கு 70-ஸெண்டுகள் சார்ஜு செய்கிறேன். ஆயினும் ஒரு வருஷம் போடுவதானல் சார்ஜைக்குறைப்பேன் என் பத்திரிகைக்கு நானே மானேஜர், மூன்று பாங்கிகளில் பணம் போட்டிருக்கிறேன். ப்ரின்டருக்கு நான்தான் கையெழுத்துப் போட்டு செக் அனுப்புகிறேன். எடிட்டோரியல்களெல்லாம் நானே எழுதுவேன்" என்று பதில் சொன்னுள். "விஷயம் அகப்படுவது கஷ்டமோ? இல்லை யில்லை. வேண்டிய விஷயங்கள் என் மனதில் தோன்றும். சென்ற முறை 'அட்லாண்டிக் ஸமுத்திரத்தைக் கடந்து வருவது' என்று தலைப்பெயரிட்டு எடிட்டோரியல் எழுதினேன்' என்ருள். அமெரிக்காவுக்குப் பத்திரிகை அனுப்புகிருள். ஒரு இங்கிலீஷ் சிறுமியை உதவிக்கு வைத்துக்கொண்டிருக்கிருள்.

நிற்க, நம்முடைய சென்னப்பட்டணத்தில் 'பெண் கல்வி' என்ற பெயருடன் ஒரு சிறு மாதாந்தரப் பத்திரிகை வெளிவந்திருக்கிறது. அதன் பத்திராதிபர் மிஸ். ஆர். தாயாரம்மாள் அதற்கு வியாஸம் எழுதுகிறவர்களெல்லாம் பெண் மணிகளே. முதல் இரண்டு ஸஞ்சிகைகள் வெளிவந்திருக்கின்றன. பத்திரிகையின் சந்தா ரூ. 2-8-0

ABORTION.

அகால ப்ரஸவம்.—கஷ்டமானவேலை, ஓட்டம், அதிர்ச்சியுண்டாகும்படியான முயற்சிகள், அலறி சப்தமிடுதல், கைகளை தலைக்குமேல் உயர்த்துதல், பாரமான சுமைகளைச் சுமத்தல், மாடிப்படிகளில் அடிக்கடி ஏறி இறங்குதல், ராக்காலங்களில் அதிக நேரம் விழித்திருத்தல், பகலில் நித்திரை செய்தல், சுத்தமான காற்ரேட்டமில்லாத இடங்களில் வஸித்தல், வண்டி முதலிய வாகனங்களில் ஏறி வழிப்பிரயாணஞ் செய்தல், தையல் தைக்கும் யந்திரத்தில் கைகால் ஆட்டங்கொடுக்கும்படி வேலை செய்தல், துர்புலம், கர்ப்பப்பை வியாதி, மேகரோகம், பயம், திடுக்கம், மனக்கவலை, கோபம் அதிகஸந்தோஷம், அதிகப்புணர்ச்சி, விசனம், வாளம், கரியபோளம் முதலிய உஷ்ணமான விரோசன மருந்துகளை உட்கொள்ளுதல், ஜ்வரம், பேதி, சீதபேதி முதலிய காரணங்களால் கருவழிவு உண்டாகும். இவ்வகைக் காரணங்களால் ஏற்படும் கர்ப்பவிச்சித்தியை, பேய் பிசாசுகள் அறைந்துவிட்டதாக நம் நாட்டிற் சொல்வதுண்டு.

ரத்த ப்ரவாகத்தோடு கூடிய கருவழிவிற்கு காடியை சுத்த ஜலத்தில் கூட்டி கந்தைத் துணியை நனைத்து ஓயாமல் மர்ம ஸ்தானத்தின் மேல் விடுவதினுல் ரத்தம் நிற்கும். குணம் காணுவிட்டால் 2 அவுன்ஸ் காடியுடன் 1 பைண்ட் சுத்த ஜலம் கூட்டிக் கொஞ்சம் சர்க்கரை சேர்த்து, வேளை ஒன்றுக்கு $1\frac{1}{2}$-முதல் 2 அவுன்ஸ் வீதம் தினம் ஒன்றுக்கு 3—4 தரமாகிலும் அல்லது பலதடவையாகிலும் கொடுக்கலாம்.

CHEERS FOR MURDERESS.

பர்த்தாவைக் கொன்ற பாரியைக் கொண்டாடினது.—சென்ற ஆகஸ்டு-மீ 4உ ஸான்ப்ரான்ஸிஸ்கோ என்றவிடத்தில் 19 வயதான அதிக

அழகுள்ள அன்னு லாங்கே என்ற ஸ்திரீ தன் புருஷனைத் துப்பாக்கியாற் சுட்டுக் கொன்றுவிட்டு தானாகவே போலீஸாரிடம் போய் தன் புருஷனைக் கொன்றதாக ஒப்புக்கொண்டாள். ஒருமணி நோத்துக்குள் அவள் கொலைக் குற்றத்திற்காக விசாரிக்கப்பட்டாள். ஸகல ரூபலாவண்யமும் பொருந்தியிருந்த இந்த ஸ்திரீ தன் புருஷன் செய்த குரூரச் செயல்களையும், அதற்காகத் தான் செய்த பாதகத்தையும் சொல்லி ப்ரலாப ஒப்பாரி வைத்தாள். அப்பரிதாபக் காட்சியைக் கண்ணுற்ற ஜூரிகளும், லாயர்களும், போலீஸ் காரர்களும், பத்திரிகாசிரியர்களும், தாரை தாரையாய்க் கண்ணீர் சொரிந்தார்கள். அவள் சொல்லியதாவது, "என் புருஷன் நல்லவனாகமட்டும் இருந்திருப் பனேயாகில் என் கைவிரல்கள் தேய்ந்து எலும்பாகும்வரையில் அவனுக்காகப் பாடுபட்டு உழைத்திருப்பேன்," என்றாள். அவளை விசாரித்த ஜூரார்கள், தன் புருஷனின் குரூரச் செயல்களின் நிமித்தம் பைத்தியங்கொண்டு கொலை செய்தாளாதலால் அவள் குற்றவாளியல்லவென்று தீர்த்தார்கள். உடனே அவள் 20 பவுன் ஜாமீனில் விடுதலை செய்யப்பட்டாள். அவளைச்சுற்றிலுமிருந்த லாயர்களும், பத்திரிகாசிரியர்களும், தத்தம் சட்டைப்பையில் கைவிட்டு கைநிறைந்த பணங்களை அள்ளி ஜட்ஜ் முன்பாக குவித்தார்கள். நீதியதிபரோ அவளுடைய ஜாமீனுக்கான 20 பவுனை மட்டும் எடுத்துக்கொண்டு மற்றப் பணம் தமக்கு வேண்டாமென்று தள்ளிவிட்டார். ஒரு விநோதக் காட்சியைப்பார்க்க பள்ளிக்கூடத்துச் சிறுவர் கூடியிருக்கும் வண்ணமாக அவளைக்குற்றம் விசாரித்த ஜூரார்கள் தத்தம் அனுதாபத்தைக் கூறும்படிக்கு அவளைச் சுற்றிக்கூடினார்கள். அங்கே வந்துகூடியிருந்த எல்லாரும் சந்தோஷமிகுதியால் கை கொட்டிச் சிரித்தார்கள். சிலர் புஷ்பமாரி பொழிந்தார்கள். போலீஸ் கமிஷனர் அவளை ஒரு மோட்டார் வண்டியில் ஏற்றி அவளைப்பெற்ற மாதா வண்டை கொண்டுபோய்ச் சேர்த்தார். அங்குள்ள ஸ்திரீகள் அனைவரும் அவளை மார்புறத் தழுவி முத்தமிட்டு ஆனந்த பாஷ்பம் சொரிந்தார்கள்.

An old Woman.

**ஒரு கிழவி.**—காக்கஸ் மலைப்பாகத்தில் ஒரு வயது சென்ற மாது இருக்கிறாள். அவள் சில நாட்களுக்கு முன் தன் 165-ம் ஜனனநாள் கொண்டாடினாள். சரீரத்தில் அதிக பல ஹீனமாயிருந்த போதிலும் மனபலத்தில் திடமாயிருக்கிறாளாம்.

The Maharani of Bhopal.

**போபால் மஹாராணி.**—போபால் மஹாராணி அவர்களுக்கு நமது மாக்ஷிமை தங்கிய ஜார்ஜ் சக்ரவர்த்தி அவர்களது மகுடாபிஷேக தினத்தன்று ஜி. வி. ஐ. இ. பட்டம் கொடுக்கப்பட்டது. இந்தியாவிலுள்ள ஸ்திரீக்கு இப்பட்டம் கொடுபட்டது இதுவே முதல் தடவை யாகும்.

A Hindu wife's quiet devotion.

**ஒரு ஹிந்து மனைவியின் பக்தி.**—உனோவா யென்னுமூரில், வைத்திய நாத் பிரஸாத் என்பவர் தன் அலுவலிலிருந்து ராத்திரிவெகுநேரம் கழித்து வீட்டுக்கு வந்து சாப்பிட்டுவிட்டு களைப்பினால் சீக்கிரம் தூங்கிவிட்டார். 16 வயதுள்ள அவர் மனைவி கைவிளக்கை எடுத்துக்கொண்டு வாசக் கதவை சாத்தும் ஸமயத்தில் விளக்கு நின்று அம்மாதை ஒரு பாம்புகடித்தது. தன் பர்த்தாவை அயர்ந்த நித்திரையிலிருந்து எழுப்ப மனமில்லாமல் அவதிப்பட்டுக் கொண்டிருந்தாள். விஷம் அதிகமாயேறி தான் பிழைக்க இனி ஹேது வில்லையென்று எண்ணி, கடைசியாக இரண்டொரு வார்த்தைகளை தன் பர்த்தாவினிடத்தில் சொல்லக் கருதி, எழுப்பினாள். ஆனால் பாம்பு கடித்ததென்று சொன்னால் தன் பர்த்தா மனதுக்கு கிலேசமுண்டாகுமென்று நினைத்து மறுபடியும் திடசித்தமாய் சொல்லாமலிருந்தாள். அவர் ரொம்பவும் வற்புறுத்தி ஆணையிட்டுக் கேட்டதின் பேரில் விஷயத்தை சொல்லி, சோகம்போட்டு கீழே விழுந்தாள். கடைசியாக தெய்வாதீனமாய் அனுகூலமாய் விட்டது.

ஹிந்து மனைவிகளின் பக்தி, விசுவாஸம் மனோதைரியம் இவைகளைக் காண்பிக்கிற அநேக உதாரணங்களில் இது ஒன்று.

# DEPARTMENTAL NOTES.

## பகுதிக் குறிப்புகள்.

## AGRICULTURAL NOTES.

## விவஸாயக் குறிப்புகள்.

GREEN CROP SEEDS.

**பசுந்தாள் பயிர் விதைகள்**—சணப்பு விதை இரண்டு மாதத்திலும், வங்காளத்தக்கவிதை இரண்டரை மாதம் முதல் 3 மாதத்திலும், நாட்டுத்தக்கை 3 முதல் 4 மாதத்திலும், பூமியில் மடக்கிப் பசுந்தாள் உரமாக உழ தயாராகும்.

சணப்பு விதை 1 ஏக்கருக்கு 12 பட்டணம் படியும், வங்காளத்தக்கை 1 ஏக்கருக்கு $2\frac{1}{2}$ படி விதையும், நாட்டுத்தக்கை 2 படியும் போதுமானது. சணப்பு பட்டணம்படி 1-க்கு 0-3-0, வங்காளத் தக்க விதை படி 1-க்கு 0-6-0, நாட்டுத்தக்கை 0-7-0 ஆகும். வேண்டியதை பாலூர்ப் பண்ணையிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

CAMBODIA COTTON IN COIMBATORE.

**கோயமுத்தூரில் கம்போடியா பருத்தி.**—இந்த ஜில்லாவில் பருத்தி ஸாகுபடி செய்வோர் கம்போடியாப் பருத்தியை ஸாகுபடி செய்து வருகிறார்கள். திருப்பூரிலுள்ள மெஸஸர்ஸ் பின்னி அண்டு கம்பெனியாரின் ஏஜெண்டுகள் கொட்டை எடுத்த பருத்தியில் 100 பேல் வாங்கி விட்டார்களாம். இந்த வருஷம் பின்னும் பல ஏகராக்களில் இந்தப்பருத்தி ஸாகுபடி செய்யப்படும். இந்த ஜில்லாவிலுள்ள விட்டல்தாஸ் சைத் என்ற பிரபல வியாபாரி பருத்திப் பயிரின் அபிவிருத்தியை உத்தேசித்துப் பருத்திக் கொட்டைகளை ஏராளமாக வாங்கி பயிர்செய்யும் ரயத்துகளுக்குக் கொள் முதல் பிரகாரம் விற்கிறாராம்.

THE CATTLE OF SOUTHERN INDIA.

**தென் இந்தியா கால்நடைகள்.**—தென் இந்தியாவில் ஸாதாரணமாய் தெரியப்பட்ட மாட்டு வர்க்கங்களில் ப்ரத்யேகமாய்க் காணப்படும் வகுப்பு **மைஸூர், நெல்லூர்** மாடுகளே. இவைகளைத்தவிர இந்த ஜில்லாவில், பர்கூர், ஆலம்பாடி, காங்கேயம் என மூன்று வருக்கங்களுண்டு.

**மைஸூர்** மாடுகள் வண்டிமுதலியவைகள் இழுப்பதற்கு சிலாக்கியமானவை. நிரம்பவும் சுறுசுறுப்பாயும் வேகமாயும் செல்லக்கூடியவை. நெல்லூர் மாடுகளைப்பார்க்கிலும் சிறியவை. நீண்ட கூர்மையான கொம்பும், குறியகால்களும், உருட்டியெடுத்த தேகக்கட்டுமுடையவை. இவை பாரவண்டியிழுக்கவும், கடின நிலங்களில் வேலைசெய்யவும் லாயக்கானவை. **நெல்லூர்** மாடுகளோ நீண்ட காலும் சளித்த தேகமும் நீண்ட கோசமும் உள்ளவை. உயரமாயும் மிகப்பெரியதாயும் சாந்தகுணமுள்ளதாயுமிருக்கும். கரிசல் நிலங்களை உழ லாயக்கானவை. இந்த ஜாதிப் பசுக்கள் இந்த மாகாணத்தில் சிறந்த கறவையுள்ளவை. **பர்கூர்** பார்க்க நிரம்ப வேகாட்டமும் சுறுசுறுப்புமுள்ளவை. தலை சிறுத்தும், கண்கள் துலக்கமாயும், மத்தியமான வளர்த்தியும், திரட்டி எடுத்த தேகமும், நல்ல பார்வையுமுள்ளவை. இவை பவானித் தாலூகா பர்கூர் மலைகளிலும் ஸத்யமங்கலந் தாலூகா குதிபாலத்தூர் மலைகளிலும் வளர்க்கப்படுகின்றன. **ஆலம்பாடி** நீண்ட தேகமும் கூர்மையான கொம்பும் உடையவை. சாந்தமானதாயும் இழுவைக்கு லாயக்கானதாயுமிருக்கும். இவை இந்த ஜில்லா காவேரி ஆற்றோரம் காவேரிபுரம் மலைச்சார்வில் வளர்க்கப்படுகின்றன. **காங்கேய** மாடு என்று வழங்கப்படுகின்ற கீழ்நாட்டுப் பிறவி நல்ல கறவையும் இழுவையும் உள்ளவை. சிறிய தேகமும் அழகான பார்வையும் சாந்தமான குணமும் சுறுசுறுப்பும் பலமான தேகக்கூருமுள்ளவை. இந்த வருக்கங்களில் இது நிரம்பவும் சிலாக்கியமானது. இந்த வர்க்கம் **காங்கேயம்** பிராந்தியத்திற்கு எங்கும் உரித்தானவை அல்ல. பழயகோட்டை பட்டகாரரைப்போன்றவர்களுள் விருத்தியாக்கப்படுகின்ற பிறவிகளே.—குருஷிகன்

COCOANUT BEETLES.

**தென்னைமரத்து வண்டுகள்.**—இரண்டு தினுசு வண்டுகள் தென்னைமரங்களையும் மற்ற பனை தினுசுகளையும் பீடித்து அச்செடிகளுக்கு மிக நஷ்டத்தையுண்டாக்குகின்றன. அவைகளில் ஒன்று தமிழில் தென்னம் வண்டென்றும் மலையாளத்தில் செள்ளு என்றும் சொல்லப்படும். அது தலையில் ஒரு கொம்பையுடைய கருப்பு வர்ணமுள்ள ஒரு பெரிய வண்டு. இது குறுத்து ஓலைகளையும் மரத்தின்

மண்டையிலுள்ள மட்டைகளையும் துளைத்து நாசமாக்கும். இளம் தென்னைமரங்களை இவ்வண்டுகள் துளைத்து ஜாஸ்தி நாசமாக்குவதைப்போல் முற்றின மரங்களைக் கெடுப்பதில்லை. இவைகள் செத்துப்போன அடிமரங்களிலாவது அல்லது எருக்குழிகளிலாவது முட்டைகளிட்டு அவைகளிலிருந்து புழுக்களைப்போல வெளிவந்து, அழுகும் வஸ்துக்களைத் தின்று பெரிதாகின்றன. இப்புழுக்கள் நாளாவட்டத்தில் மேல்சொன்ன வண்டாய் உருமாறுகின்றன.

இன்னொன்று தமிழில் செவ்வண்டென்று சொல்லப்பட்டது. இது முன் சொன்ன கருப்பு வண்டைவிட சின்னது. இதை அதினுடைய நீண்ட வளைவுள்ள மூக்கால் கண்டறிந்துகொள்ளலாம். இது பனைகளின் உச்சிகளில் ஸாதாரணமாய் தென்னம் வண்டுகளாவது அல்லது பனைமரம் ஏறுகிறவர்களாவது செய்த காயங்கள்பட்ட இடங்களில் முட்டை வைக்கும். இதிலிருந்து வெளிப்படும் புழுக்கள் உச்சிமரத்தைத் துளைத்து செடிகளைக் கொன்றுவிடும். இப்புழுக்கள் நார் இழைகளைக் கொண்டு ஒரு கூடுகட்டி அதில் ஸ்தம்பித்திருந்து சுமார் இரண்டு வாரங்களில் உருமாறி வண்டுகளாகின்றன.

தென்னம் வண்டு செடிகளுக்கு தான் ஜாஸ்தி கெடுதி செய்யாவிட்டாலும், செவ்வண்டினுல் உண்டாகும் நஷ்டத்துக்கு காரணபூதமாயிருக்கிறது. இந்தத் தென்னம் வண்டை அநேக இடங்களில் தற்காலம் மரங்களிலிருந்து எடுப்பதைப்போல வெகு சுலபமாய் ஒரு வண்டெடுக்கும் இருப்பு முள் ஊசி கொண்டு எடுத்துவிடலாம்.

இவ்வண்டுகளை அப்புறப்படுத்தியபின் அவைகள் துளைத்திருக்கும் துளைகளை தாரினுல் தடவி மண்கொண்டு மூடிவிடுவதுடன், பனையேறிகள் மரங்களில் செய்திருக்கும் காயங்களிலும் மேல்சொன்ன தாரைத் தடவவேண்டும். இப்படிச் செய்யாவிட்டால் செவ்வண்டுகள் மரங்களிலிருக்கும் காயங்களில் முட்டைகளை வைத்து நாசமாக்கிவிடும். இவ்வண்டுகள் முட்டை வைத்தபின் மரங்களை இவைகளின் தொந்தரையிலிருந்து ஸுலபமாய் நிவர்த்திக்க முடியாது.

பொடிமணலும் உப்பும் ஸமபாகம் கலந்து ஒரு வருஷத்திற்கு இரண்டு தடவை மரங்களின் உச்சியில் மட்டைகளுக்கிடையே கொஞ்சம் போடலாம். இதனுல் தென்னம் வண்டைத் துரத்திவிட ஹேதுவுண்டு.

செவ்வண்டினுல் பீடிக்கப்பட்ட மரங்கள் திரும்பவும் பிழைக்கமாட்டா. ஆகையால் அவைகளை தாமதமின்றி வெட்டிவிடவேண்டும். இந்தப் புழுக்களோடு இந்த மரத்தின் உச்சியை நிர்மூலமாக்கிவிடவேண்டும். இல்லாவிட்டால் இதிலிருக்கும் புழுக்கள் பின்னுல் வண்டுகளாகமாறி புதுமரங்களை நாசமாக்கும்.

ஒருதோப்பில் செத்துப்போன மரங்களை அப்போதைக்கப்போது வெட்டிக் கீறி யுடைத்துக் காயப்போடவேண்டும். அப்படிக்கில்லாமல் அவைகளை அழுகவிடவேகூடாது. ஏனென்ருல் அழுகும் புதார்த்தங்களிலும் இடங்களிலும் தென்னம் வண்டு பல்கி பெருகும். தோட்டத்துக்குள் எந்த விதமான வஸ்துவும் அழுகிக் குவிய இடங்கொடுக்கக்கூடாது.

சில இடங்களில் தென்னமரத்து செவ்வண்டின் புழுக்கள் அடிமரத்திலிருந்து உள்ளேசென்று மரத்தைக்கெடுக்கிறதென்ற அபிப்பிராயமிருக்கிறது. ஆகையால் மேல்தரையிலிருந்து சில அடிகளுக்கு மேல் மரத்தை துளைக்கும் வழக்கமிருக்கிறது. இவ்வித அபிப்பிராயம் தப்பானது. மேல்சொன்ன பிரகாரம் மரங்களைத் துளைப்பது அதிக நஷ்டத்தை யுண்டுபண்ண ஹேதுவாகும். ஆகையால் அப்படிச் செய்யவேகூடாது.

மேல்சொன்ன இரண்டு வண்டுகளின் நாசம் ஒன்றை ஒன்று பொருத்ததாயிருக்கிறது. தென்னம் வண்டு நன்ருயிருக்கும் உச்சிமரங்களில் துளைகளை யுண்டாக்கி செவ்வண்டு அதில் வந்துசேர இடத்தை யுண்டாக்குகிறது. செவ்வண்டினுல் செத்துப்போன மரங்கள் தென்னம் வண்டுகள் பல்கிபெருக நல்ல வாஸஸ்தானமாகின்றன. ஆகையால் மேல்சொன்ன முன்ஜாக்கிரதையோடு கவனம் செலுத்தாவிட்டால், இவ்வண்டுகளால் பீடிக்கப்பட்ட தென்னம் தோப்பில் மரங்கள் நாளாவட்டத்தில் ஒன்றுக்குப்பின் ஒன்ருய் நாசமாவதை தடுக்கமுடியாது.

## INDUSTRIAL NOTES.
## கைத்தொழில் குறிப்புகள்.

INDIAN LABOUR.

**இந்தியக் கூலி ஆட்கள்.**—இந்தியா கவர்ன்மெண்டின் வியாபார மெம்பராகிய மிஸ்டர் டப்ள்யூ எச். கிளார்க் ஸமீபத்தில்நிலக்கரி எடுக்கப்படும் ஜெர்ரியா என்றஇடத்துக்கு போயிருந்தபோது, அங்கே 'இந்தியக்கூலி வேலை' யைப்பற்றிப் பேசினார். இங்கிலாந்திலிருப்பவர்கள், இந்தியாவில் கூலிவேலை எதேஷ்டமாய் நினைத்தபடி கிடைக்குமென்றும், எந்தப் பெரிய தொழிலானாலும் கூலிவேலை சொற்ப கூலிக்குக்கிடைப்பது கஷ்டமல்ல வென்றும் நினைக்கிறார்கள். ஆனால், இந்தியாவுக்கு வரும் ஒவ்வொரு ஆங்கிலேயனும் இது ஸரியல்லவென்று கொஞ்சதினத்தில் அறிந்து கொள்கிறான். லார்ட் ஹார்டிஞ்ச் வந்தபோது, பம்பாய் சேம்பர் ஆப் காமர்ஸ் கூலி ஆட்கள் கிடைப்பது கஷ்டமா யிருக்கிறதென்று அது வாசித்த உபசாரப் பத்திரிகையில் சொல்லிற்று. மிஸ்டர் க்ளார்க்பம்பாய்க்குவந்தபோதும், இதைப்பற்றிப் பிரஸ்தாபம் நடந்தது. பம்பாயிலுள்ள பஞ்சாலைகளிலிருந்தும் வெங்காளத்திலுள்ள சணல் ஆலைகளிலிருந்தும், ஆஸாமிலுள்ள தேயிலைத் தோட்டங்களி லிருந்தும், முதலாளிகளிடத்திலிருந்தும் கூலிக்காரர்வேலைக்கு அகப்படுவதில்லை என்ற கூச்சலே பெரிதாயிருந்தது. இந்தியக் கூலிகள் தாங்கள் வஸிக்குமிடத்திலேயே சுலபமாய் வாழவேண்டுமென்ற விருப்பத்தினாலோ, அல்லது, அதிகக் கூலியை வேண்டி கண்மூடித்தனமாய் உயர்ந்த ஸ்திதியைப் பெறவேண்டுமென்ற விருப்பத்தினாலோ இப்படி அசம்மதமா யிருக்கிறார்கள்.

THE MAHUE TREE.

**இலுப்பை.**—தென்னிந்தியாவில் அபரிமிதமாய் உற்பத்தியாகும் விருட்சங்களில் இலுப்பையு மொன்றாகும். இம்மரம் உயரத்திலும், உருவத்திலும், உபயோகத்திலும், பருமனிலும், நாம் பிரயாசைப்படாமல் தானாய்வளருவதிலும், மாமரத்தை ரொம்ப ஒத்திருக்கின்றது. ஆற்றோரங்களில் இம்மரம் நெடுந்தூரம் கிளை பரப்பிக்காய் குலுங்க நிற்கக்காணலாம். இம்மரத்தால் நாம் அடையும் உபயோகங்களை எண்ணுமிடத்து, நமது புஞ்சை நிலங்களில் நன்றாய்ப் பயிர் செய்வதற்கேற்ற சிரேஷ்டமான விருட்சமென்றே தெரியவரும்.

இம்மரத்திலிருந்து செய்யப்படும் பலகைகள் சட்டங்கள், தூண்கள், உத்திரங்கள் முதலியன மிகவும் உறுதியாயும் நேர்மையாயு மிருக்கின்றன. இவற்றைத் தவிர்த்து இலுப்பைக் கொட்டைகளிலிருந்து இறக்கப்படும் எண்ணெய் மெத்தவும் உபயோகமானதாகும். மரத்திலிருந்து கீழே உதிரும் பழங்களைச் சேர்த்து கொட்டையை வெளிப்படுத்தி வெயிலில் உலர்த்தி, உடைத்து உள்ளிருக்கும் பருப்பை எடுத்துக் காயவைத்து செக்கிலிட்டு ஆட்டி எண்ணெய் எடுக்கிறார்கள். இதன் பின் தங்கியிருக்கும் சக்கை வெயிலில் உலர்த்தி அரப்பு என்று வழங்கபடுகிறது.

இலுப்பெண்ணெய் விளக்கெறிப்பதற்கும் ஸாமான்ய ஜனங்கள் வீட்டில் பணியாரங்கள் செய்வதற்கும் உபயோகப்படுகிறது. இத்துடன் கடையில் விற்கப்படும் நெய்யிலும் கலக்கப்படுகிறதாம். மேலும் இந்த எண்ணெய் நாட்டுப்புறங்களிலுள்ளவர்களால் மாத்திரம் உபயோகிக்கப் படுகிறதேயல்லாமல், நகரவாஸிகள் அபேட்சிக்கிறதில்லை, அவர்களுக்கு அகப்படுகிறது மில்லை. இந்த எண்ணெயைத் தலையில் தேய்த்து ஸ்நானம் செய்யலாம். மூளையைக்குளிரச் செய்வதிலும், தேகத்தில் தடவி ஸ்நானஞ்செய்தால் சீதளத்தை யுண்டாக்குவதிலும் மேலானது. பதார்த்தங்களுடன் உபயோகித்தால் பித்த நீரை வெளிப்படுத்திக்குடலைச் சீர்படுத்தி தேகாரோக்கிய முண்டாக்கும். இந்த எண்ணெய் சோப் செய்வதற்கும் ஏற்றது.

கிராமங்களில் கவனிப்பாரற்றுக் கீழே உதிர்ந்து கிடக்கும் கொட்டைகளைச் சேகரித்து நவீன யந்திரங்களைக்கொண்டு எண்ணெய் இறக்கி நகரங்களில் விற்க ஆரம்பித்தால் பிரதி தினமும் பெருகிவரும் மற்ற எண்ணெய்களின் விலை ஸரஸமாவதுடன் இம்முயற்சியைக் கொள்ளும் சிலருக்கும் பொருள் சம்பாதிக்க ஏற்றதோர் உபாயமாகும்.

இவ்விஷயத்தை நம்மவர்கள் கவனிக்காவிடில் மணிலாக்கொட்டை வியாபாரத்தைப்போல், இதிலும் அன்னியர்கள் பிரவேசிக்க இடமுண்டாகுமென்று ஒரு நிரூபர் ஒரு பத்திரிகையில் எழுதுகிறார்.

## EDUCATIONAL NOTES.
## வித்யாவிஷயக் குறிப்புகள்.

---

TOLSTOY ON EDUCATION.

**டால் ஸ்டாய் படிப்பிப்பதைப்பற்றி.**—டால்ஸ்டாய் என்னும் ஞானி ஜெர்மனி, ப்ரான்ஸ், இங்கிலாந்து முதலான தேசங்களை சுற்றிப்பார்க்கச் சென்றிருந்தபோது அத்தேசங்களில் மாணுக்கர்களுக்குக் கொடுக்கப்பட்டுவரும் கல்வி முறையில் திருப்தி யடையாதவராய் "காப்பிக்கொட்டை, கடலை, மொச்சைபோன்ற பலவகைப்பட்ட தானியங்களை ஒரே யந்திரத்தில்போட்டு அரைப்பது போல பலவகைப்பட்ட மனோபாவமும், நானுவகையான அறிவும் உடைய மாணுக்கர் எல்லாருக்கும் ஒரேவிதமான கல்வியைக் கட்டாயத்தினுல் போதிக்கிருர்களே! இப்படிப்பட்ட கல்வி போதனை மாணுக்கர்களின் நன்மைக்காக ஏற்பட்டதல்ல; உபாத்தியார்களின் வேலை ஸுலபமாகும்படி ஏற்பட்டது!" என்று பரிதபித்திருக்கிருர்.

THE MADURA EDUCATIONAL EXHIBITION.

**மதுரைக் கல்விப் பொருட்காட்சி.**—ஸமீபத்தில் மதுரை காலேஜ் ஹாலில் அவ்வூர் எலிமெண்டரி உபாத்தியாயர்கள் சங்கத்தின் ஆதரவில் ஒரு கல்விப் பொருட்காட்சி 7-வது ஸர்க்கில் ஸ்கூல் இன்ஸ்பெக்டர் மிஸ்டர் டி. ஒ. ஹாட்ஜஸால் திறந்து வைக்கப்பட்டது. அக்காட்சியைத் திறந்து வைத்துச் செய்த பிரசங்கத்தில், அவர் எலிமெண்டரி பள்ளிக்கூடங்களை மூன்று பிரிவாய்ப்பிரித்தார். (1) கிண்டர் கார்ட்டன் பள்ளிக்கூடங்கள்—அதாவது விளையாட்டுகள் மூலமாகவே சிறு குழந்தைகளைப்படிப்பிப்பன. (2) கிராமந்தரப் பள்ளிக்கூடங்கள்—அதாவது விவஸாயிகளின் குழந்தைகளும் தொழிலாளிகளின் குழந்தைகளும் தங்கள் பேரை யெழுதும்படியாயும் தங்களுக்கு வேண்டிய கணக்கு வழக்குகளைப் பார்த்துக்கொள்ளும்படியாயும் அதிகாரிகளுக்குத் தங்கள் குறைகளைக் கண்டு ஒரு விண்ணப்பம் எழுதத்தெரிந்து கொள்ளும்படியாயும் படிப்பிக்கும் பள்ளிக்கூடங்கள். (3) உயர்தரப் படிப்புக்குத் தயார் செய்யும் எலிமெண்டரி ஸ்கூல்—இந்தப் பள்ளிக்கூடத்தில் பிள்ளைகள் தினந்தோறும் நீண்டநேரம் வாசிப்பதோடு புத்திப் பயிற்சியும் மனப்பயிற்சியும் பெறுகிருர்கள். மிஸ்டர் ஹாட்ஜஸ் திறந்து வைத்தக் கல்விப் பொருட்காட்சிக்குப் பலவகைப்பட்ட காட்சிப் பொருள்கள் வந்திருந்தன. பெரியகுளம் ப்ரைமரி ஸ்கூல் ஒன்றிலிருந்து டாஜ்மஹால் கட்டடத்தின் பிரதிமை ஒரு சீமைச் சுண்ணும்புத் துண்டில் செய்தனுப்பப்பட்டிருந்தது. திருநெல்வேலி ஜில்லா இடையன் குடிபோர்ட் ஸ்கூலிலிருந்து கத்திகளும், குறடுகளும், மனித உருவச்சிலைகளும் ஒரு சீமைச் சுண்ணும்புத்துண்டில் செய்யப்பட்டு காட்சிப் பொருள்களாய் அனுப்பப்பட்டிருந்தன.

SANSKRIT AND THE VERNACULARS.

**ஸம்ஸ்க்ருதமும் தேசபாஷைகளும்.**—இப்பொழுது ஸ்கூல் லீவிங் ஸர்டிபிகேட்டுப் பரீக்ஷைக்குப் படிக்கும் மாணவர்களுக்கு ஸம்ஸ்கிருதம் தமிழ் முதலிய பாஷைகள் கட்டாயப் பாடமாக இராமல் இஷ்டபாடமா யிருக்கின்றன. ஆகையால் அந்த பாஷைகளை மாணுக்கர்கள் படிக்காமல் விடுகிருர்கள். அதனுல் அப்பாஷைகளுக்கு அனுதரவு உண்டாய் விடுகிறதென்றும் ஸ்கூல் லீவிங் ஸர்டிபிகேட்டுப் பரீக்ஷையின் கட்டாயப் பாடத்தில் இப்பாஷைகளின் பாடமும் ஒரு கட்டாயப் பாடமாயிருக்கவேண்டுமென்றும் ஆலோசனை ஸபையிலுள்ள கவர்னருக்கு மனுச் செய்துகொள்ள ஸமீபத்தில் சென்னப்பட்டணத்தில் பச்சையப்பன் மண்டபத்தில் பலஸ்கூல்களின் உபாத்தியாயர்களும் மாணவர்களும், அவர்களுடைய பெற்ருேர்களும் சேர்ந்து ஒரு பொதுக் கூட்டங்கூடினுர்கள்.

திவான் பகதூர் கே. கிருஷ்ணஸாமிராவ் அக்ராஸனம் வகித்தார். ஸம்ஸ்கிருதமும் தேசபாஷைகளும் கற்பதால் அளவற்ற நன்மைகள் உண்டாகுமென்றும், அந்த பாஷைகளில் வல்லோராயிருந்த பூர்வகாலத்திய பல மகான்களின் சரிதைகளைக் கேட்டு நாம் மனம் பூரிக்க அவகாசம் உண்டாகிறதென்றும், பழையகால நடையுடை பாவனைகளையும் அவைகள் ஏற்படுத்தப்பட்ட காரணங்களையும் நாம் அறிவதற்கு ஸுலபமா யிருக்குமென்றும் அவர் பேசினுர். கடைசியில் எல்லாரும் ஒருமனமாக கவர்ன்மெண்டுக்கு ஒரு மனுசெய்து கொள்ளப்பட்டது.

## SCIENTIFIC NOTES.
## சாஸ்திரீயக் குறிப்புகள்.

---

### MALARIA INVESTIGATION.

**முறைக்காய்ச்சல் சோதனை.**—சென்னை மாகாணத்தில் மலேரியா என்று சொல்லப்படும் முறைகாய்ச்சலை சோதனை செய்வதற்காக வைத்திய இலாகாவைச் சேர்ந்த உத்தியோகஸ்தர்கள் சிலரை ஸ்பெஷலாய் நியமிப்பதற்கு இந்தியா மந்திரியின் உத்தரவு கிடைத்திருக்கிறது.

### HOLES IN FLOWERPOTS.

**பூந்தொட்டிகளில் த்வாரங்கள்.**—பூந்தொட்டிகளுக்கு அடியில் த்வாரம் அமைத்திருக்கிறதற்குக் காரணம் அநேகருக்குத் தெரியாமலிருக்கலாம். பூந்தொட்டிகளில் செடிகளைவைத்து வளர்க்கும் பொழுது அச்செடிகளுக்கு வேண்டிய ஆகாரமாகிய ஜலத்தை வார்க்கிறோமல்லவா? மேலும் மழை ஜலமும் அத்தொட்டிகளில் விழுகிறதல்லவா? பூந்தொட்டிக்கு த்வாரமில்லாவிட்டால் இப்படி அதற்குக்கிடைக்கும் ஜலமானது அதிகப்பட்டுவிட்டால் அந்த ஜலம் எப்படி வெளியாகும்? பூஞ்செடிகளுக்கு வார்க்கப்பட்ட ஜலமானது அதிகப்பட்டால் அந்த ஜலம் வெளிப்படுவதற்காகவே தொட்டிகளுக்கு த்வாரம் வைக்கப்பட்டிருக்கிறது. அப்படி த்வாரம் இல்லாவிட்டால் அதிகப்பட்ட ஜலமானது வெளியே செல்லாமல் தொட்டிகளுள்ளேயே இருந்து நீர் ஊசிப்போய் தொட்டியின் அடியில் தங்கிச் செடியின்வேரை அழுகச்செய்து செடி பட்டுப்போம்.

### SINGING SANDS.

**பாடும் மணல்கள்.**—இம்மணல்கள் ஹாவாயி தீவுகளில்தான் விசேஷம். மேற்படி மணலை நமது இரண்டு கைகளுக்கும் நடுவில் வைத்துக்கொண்டு தட்டினால் அம்மணல்கள் ஆந்தை அலறுவதுபோல் ஒரு கீச்சுக்குரலை உண்டுபண்ணுகின்றன. ஒரு பையில் அம்மணலைப்போட்டுக் குலுக்கினால் நாய் குலைப்பதுபோல் சத்தமிடுகின்றன, அம்மாதிரியான மணல்கள் கோலராடோ வனாந்தரங்களிலும் மற்ற அபூர்வமான களிமண் நிலங்களிலும் அகப்படுகின்றனவாம். அவ்வனாந்தரங்களில் காற்றடித்தால் மேற்கூறிய மணல்கள் பட்சி பாடுவதுபோல "கீச் கீச்" என்று சத்தமிடுகின்றன.

சூக்ஷமக்கண்ணாடியில் இம்மணலைப் பரிசோதித்துப்பார்த்தால் உருண்டை வடிவமா யிருக்கிறது. இம்மணலைப்பற்றி சில சாஸ்திர அனுபோகஸ்தர்களது அபிப்பிராயம் யாதெனில், இம்மணல்மேல் ஒரு விதவாயு மூடிக்கொண்டிருக்கிறதென்பதும் காற்றடிப்பதனால் மேற்படி வாயு சத்தம் செய்கிறதென்பதுமாம்.

### BACTERIA.

**பாக்டீரியா.**—இவைகள் சிற்றுயிர்கள். இச்சிற்றுயிர்களில் அநேகாயிரம் ஜாதிகள் இருக்கின்றன. ஒரு ஜாதி சர்க்கரையுள்ள ரஸங்களை சாராயமாக மாற்றுகிறது. மற்றொரு ஜாதி அதே நீரைக் காடியாக மாற்றுகிறது. வேறொன்று பாலைத் தயிராக மாற்றிப் புளிக்கவைக்கிறது. நமது தோசைமாப் புளிப்பதும் அவைகளின் ஒரு ஜாதியினாலேயே. இன்னும் சில ஜாதிகள், தரையில் போடப்படும் பிராணிகளின் கழிவு பதார்த்தங்களான மலமூத்திரங்களிலுள்ள உப்பு வாயுக்கலந்த பதார்த்தங்களைப் பிரித்து வெடியுப்பாக மாற்றுகின்றன. இவைகளில் சில, புண்களில் ஒட்டிக்கொண்டு புண் சீழ்ப் பிடிக்கும்படியாகச் செய்கின்றன. வேறு சில பலவிதமான ரணஜன்னிகளை விளைவிக்கின்றன. இன்னும் சில உயிருள்ள தேகங்களிலும் விளைய சக்தி பெற்றனவாய், காலரா, ஸன்னிபாத ஜுரம், க்ஷயம், குஷ்டம், முதலிய பல ரோகங்களையும் விளைவிக்கின்றன.

இச்சிற்றுயிர்கள் அதி நுட்பமானவை 1/10,000 முதல் 1/50,000 அங்குலப் பிரமாணமுள்ளவை. ஆயிரமடங்கு பெரிதாகக் காட்டும் பூதக்கண்ணாடிகளாலேயே பார்க்கத்தக்கவை. இவ்வளவு நுட்பமாயிருப்பதால் ஒரு சொட்டில் லக்ஷக்கணக்காகத் தங்கக்கூடும். உலகம் முழுவதும் வியாபித்திருக்கின்றன. எங்கெங்கு தமக்கு ஆகாரம் கிடைக்குமோ அங்கு விழுந்தும் அதி விரைவாய் விருத்தியாகின்றன. நாம் அசுத்தமென்று மனதினால் கருதும் மலமூத்திராதிகளில் அபரிமிதமா யிருக்கின்றன. அப்படியே, நமது எச்சிலிலும், வியர்வையிலும், வியாதியஸ்தர்களுடைய மலம், மூத்திரம், வியர்வை எச்சில் முதலிய கழிவுகளிலும் அந்தந்த வியாதிக்குக் காரணமான சிற்றுயிர்கள் அவைகளின் தன்மைப்படி நிறைந்து கிடக்கின்றன.

## MEDICAL NOTES.

## வைத்தியக் குறிப்புகள்.

---

A REMEDY FOR PLAGUE.

**ப்ளேக் வியாதிக்கோரு மருந்து.**—ப்ளேக் நோய்க்கு மண்ணெண்ணெய் தக்க மருந்தாகுமென்று பர்மியர் கண்டுபிடித்திருக்கிறார்கள். ப்ளேக் நோய் கண்டவுடனே நோயாளிக்கு 3 அல்லது 4 ஸ்பூன் மண்ணெண்ணெய் உள்ளுக்குக்கொடுக்கவேண்டுமாம்; அதன் பிறகு அதை நக்கிக்கொண்டேயிருத்தல் நலமாம்.

SALT WATER BATHS.

**உப்பு ஜலஸ்நானம்.**—ஸமுத்ரஸ்நானம் இயலாதபோது உப்பு ஜலஸ்நானம் வேறுவித ஸ்நானங்களெல்லாவற்றிலும் விசேஷமானதென்று "குடும்ப வைத்தியன்" என்ற நூல் கூறுகின்றது. லகுவாகவும் செலவுச்சுருக்கமாகவுஞ் செய்யக்கூடியது. வீட்டில்தானே மேற்படி ஸ்நான ஸுகத்தை யடைவதற்கேற்றவழியும் இதுவேயாம். ஒரு மட்சாடியிலே உப்பையிட்டு போதுமான தண்ணீர் விட்டு உப்பைக் கரைத்துக்கொண்டு ஸ்நானஞ் செய்துகொள்ளலாம். கைநிறைய அந்த ஜலத்தை மொண்டு தேகத்தை நன்றாய்த் தேய்த்துக்கழுவவும், அப்பால் சுத்த ஜலத்திலே மூழ்கி உலர்ந்த வஸ்திரத்தினாலே சூடுபிறக்கும்படி துடைத்துக் கொள்ளவும், உடனே ஸுகம் உண்டாகும். உப்பு ஜலஸ்நானம் தேகவளர்ச்சிக்கும் காந்திக்கும் ஹேதுவாகும்.

SOLANUM TRILOBATUM.

**தூதுவளை.**—தூதுவளையானது கபத்தை நீக்குந் தன்மையுள்ளது. இதைக் கஷாயமிட்டு சுவாச காசம், இருமல் முதலிய ரோகங்களுக்குக் கொடுக்கலாம். இலையைத் துவயல்செய்து கொடுப்பதுமுண்டு. இதனால் தாதுப்பலமுண்டாம். கபம், மந்தம் இருமல் இளைப்பு, தீரும். இதன் இலையால் சிலேஷ்மம், கர்ணசூலை அக்கினிமாந்தம், உட்குத்து, சொறிவு, மேலுளைவு தீரும். பூவினால் தேகபுஷ்டி, தாதுவிருத்தி, சரீரபலம் அழகு உண்டாம். காயினால் கபரோகம், அரோசகம், பைத்தியம், மலபந்தம், ரத்தாசயவாயு பித்தவாதம் தீரும். பழத்தினால் க்ஷயம், ஜலதோஷம், மார்புச்சளி தீரும். தூதுவளம்பழநெய் க்ஷய ரோகங்களுக்கு தக்க ஔஷதம். வேரும் கொடியும் சுவாசமுதலிய ரோகங்கள், பல்நோய் இவைகளைப் போக்கும்.

THE CARE OF THE TEETH.

**பற்களின் பாதுகாப்பு.**—பற்களின் விஷயமாய் கவனிக்கவேண்டிய சுகாதார முறைகளாவன:—

1. பற்களை நன்றாய்ப் போஷிக்கத்தக்க எலும்பையுண்டாக்கும் ஸத்துள்ள போஜனத்தைப் போதுமான அளவு பிரதிதினமும் புசித்துவரவேண்டும். பலவகையான காய்கறிகள், பழவர்க்கங்கள், கொட்டைத்தினுசுகள் தினசரி ஆகாரத்தில் கலந்திருந்தால் பல் வளர்ச்சிக்கும் உறுதிக்கும் ஆதாரமாகும்.

2. பற்கள் பலப்பட்டு உறுதியடையும் பொருட்டு அவைகளுக்குப் போதுமான வேலைகொடுத்து வரவேண்டும். அவைகள் நன்றாய்க் கடித்து, மென்று அரைக்கத் தக்கதான கடினமான பதார்த்தங்கள் ஆகாரத்தில் கலந்திருக்கவேண்டும். லேசாக விழுங்கிவிடக்கூடிய மிருதுவான பதார்த்தங்களை மட்டில் உட்கொண்டுவரும் பக்ஷத்தில் பற்களுக்குப் போதுமான வேலையில்லாமல், அவைகள் பலங்குறைந்து பழுதடைந்து சீக்கிரத்தில் க்ஷீணித்துப்போக இடமுண்டாகும். மென்று சாப்பிடக்கூடிய ரொட்டி முதலிய பதார்த்தங்களையும், காபி, பால், முதலிய திரவபதார்த்தங்களுடன் விழுங்கிவிடும் துர்வழக்கம் சிலருக்குண்டு. அப்படிப்பட்டவர்களுக்குப் பற்கள் இருந்தும் பிரயோசனமென்ன? அவர்களைப் போல செய்யாமல் எந்தபதார்த்தத்தையும் பற்களைக் கொண்டு நன்றாக மென்று உமிழ்நீருடன் கலந்து உட்கொள்ளவேண்டும். அப்படிச் செய்வதினால் பற்களும் உறுதியடைந்து போஜனமும் எளிதில் ஜீரணமாகக்கூடும். மிட்டாய் முதலிய இனிப்புப் பதார்த்தங்கள் பற்களுக்குக்கெடுதியுண்டாக்குமாதலால் அவைகளை மிதமாய் உபயோகித்து வரவேண்டும்.

3. பற்களை அடிக்கடி நன்றாய்ச் சுத்தி செய்து வரவேண்டும். பிரதிதினமும் காலைதோறும் மெதுவான பற்பொடியைக் கொண்டும் மிருதுவான பற்குச்சியைக்கொண்டும் பற்களை உள்ளும், புறமும் சுத்தி செய்து, கூடுமானால் வெந்நீரைக்கொண்டு பலதடவை வாயைக் கொப்புளிக்க வேண்டும். பற்களின் மேலுள்ள வைரமும் ஈறும் தேய்ந்து போகும்படி கல்லினாலும், மண்ணினாலும், சாம்பலினாலும், முரட்டுக்குச்சிகளினாலும், வெகு நேரம் பற்களைத் தேய்க்கக்கூடாது.

## LEGAL NOTES.
## சட்டக் குறிப்புகள்.

—:o:—

ENDORSEMENT ON A PRO-NOTE.

**ப்ராமிஸரிநோட்டு எண்டார்ஸ்மெண்டு.**—ஹிந்து குடும்பத்தைச் சேர்ந்த மானேஜர் பெயரால் ஒரு ப்ராமிஸரி நோட்டு எழுதிக்கொடுக்கப் பட்டிருந்தது. ஷை குடும்ப மெம்பர்கள் பாகம் பிரிவினை செய்து கொண்டபோது அந்த நோட் ஒருவன் பாகத்திற்கு வந்தது. அவன் வியாஜ்யம் கொண்டுவந்தான். இதற்கு மானேஜிங் மெம்பர் நோட்டை எண்டார்ஸ் மெண்டு செய்து கொடுக்க வேண்டிய தவசியமல்ல. பாகப் பிரிவினை ஜாப்தாவில் சொல்லப்பட்டிருப்பதே போதுமானதென்று தீர்மானிக்கப்பட்டது.

INTEREST.

**வட்டி.**—ரூபா 300 கடன் வாங்கப்பட்டது. இந்த ரூபாய் 300 தவணை தவணையாக 20-மாதங்களில் செலுத்துகிறதென்றும் அப்படிச் செலுத்தத் தவறிப்போனால் தவறினதுமுதல் தவணையிலிருந்து முழுத் தொகையின் மேலும், வருஷத்திற்கு 100-க்கு $18\frac{1}{4}$ மேனிக்கு வட்டி போட்டுச் செலுத்தவேண்டுமென்றும் பத்திரம் எழுதிக்கொடுக்கப்பட்டது. இந்தப் பத்திரத்தின்பேரில் வியாஜ்ய முண்டானபோது இப்படி வட்டி போடுவது இந்தியன் கான்ட்ராக்ட் ஆக்ட் 74-வது பிரிவின்படி சட்ட விரோத மென்றும் சட்டத்தால் தடுக்கப்பட்ட வட்டி என்றும் பிரதிவாதி கக்ஷிசொன்னான். கடன்வாங்கின தொகையை வட்டியின்றி 20-மாதத்தவணையில் செலுத்த வேண்டுமென்றும், தவணை தவறினால் மேலே சொல்லப்பட்ட பிரகாரம்வட்டி செலுத்த வேண்டுமென்றும் ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகையால் இது சட்டத்தால் தடுக்கப்பட்ட வட்டியாக மாட்டாதென்று தீர்மானிக்கப்பட்டது.

KASAVARGAM.

**காசாவர்க்கம்.**—இதைப்பற்றி ஸமீபத்தில் சென்னப்பட்டணம் ஹைகோர்ட்டில் ஒரு தீர்மானம் செய்யப்பட்டது. ஒரு மிராசுதார் குடியினுடத்திலிருந்து தனக்கு மனைகட்டுக் கிடைக்கவேண்டுமென்று வியாஜ்யம் போட்டான். முதல் கோர்ட்டில் வாதிக்கு அனுகூலமாயிற்று. அதன்மேல் அப்ப... செய்ததும் வியாஜ்யம் வருவதற்கு பன்னிரண்... வருஷத்துக்கு முன்னமேயே குடியானவன் மிரா... தாருக்கு வேலைசெய்வதை நிறுத்திவிட்டபடியா... காலாவதியாய்ப்போய்விட்டதென்று சொல்லி ... கோர்ட்டுத்தீர்ப்பைமாற்றி குடியின் பக்கமாக டிஸ்... ரிக்ட்ஜட்ஜி தீர்ப்புசெய்தார். அதன்மேல் கேஸ் ஹை... க்கோர்ட்டுக்கு இரண்டாவது அப்பீலுக்கு வந்தது. ஜட்ஜிகள் மிஸ்டர் பென்ஸனும், மிஸ்டர் வி. கிருஷ்ணஸாமி அய்யரும் வெறுமையாய் குடி வேலை செய்யவில்லை என்று சொல்வது போதாதென்றும், காசாவர்க்கம் என்றால் என்னவேலை, அதைப்பற்றிய விவரங்கள் என்ன, என்று தெரிந்தாலொழிய கேஸைத் தீர்மானிக்க முடியாதென்றும், ஆகையால் அந்த விஷயங்களைப்பற்றி தீர விசார... செய்து பைண்டிங் எற்படுத்தும்படி உத்தாவு ... தார்கள். இந்த உத்தரவின்படி தஞ்சாவூர் டிஸ்... ரிக்டு ஜட்ஜி அந்த ஜில்லா முழுமையும் காசாவர்... மென்றால் என்ன என்பதை விசாரித்து பின்வ... மாறு பைண்டிங்கொடுத்தார்.

(1) மனைக்கட்டு மிராசுதாருக்கு ஸொந்த... காசாவர்க்கக் குடிக்கு அதன்மேல் ஸ்வான்பாத்ய... இல்லை. ஆனால் ஸாதாரணமாய் மேன்கூரை அ... னுக்கு ஸொந்தம்.

(2) காசாவர்க்கக்குடி மிராசுதாருக்கு வாடகை கொடுக்காமலோ அல்லது ஸ்வல்ப வாடகை கொடுத்தோ மிராசுதார் இட்டவேலையைச்செய்துகொண்டு மனையில் குடியிருக்கிறவன்.

(3) காசாவர்க்கக்குடி மனைக்கட்டை இன்னொருவனுக்குக்கொடுக்க பாத்யமில்லை. ஆனால் அவன் இறந்துபோனால் அவனுடைய வார்ஸுகள் அவன் எந்த நிபந்தனைகளுக்கு உள்பட்டுக் குடியிருந்தானோ அப்படியே குடியிருக்கலாம்.

(4) வழக்கப்படி சொன்ன வேலையைச் செய்யாமல் போனால் காசாவர்க்கக்குடியை வீட்டைவிட்டு அப்புறப்படுத்த மிராசுதாருக்கு பாத்யமுண்டு.

(5) அப்படி அப்புறப்படுத்தும்போது காசாவர்க்கக்குடியினுடைய மேன்கூரைக்குள்ள கிரயத்தை மிராசுதார் கொடுக்கவேணும்.

மேற்சொன்ன பைண்டிங்குகளை ஹைகோர்ட்டு ஜட்ஜிகள் ஒப்புக்கொண்டு வாதி மிராசுதார்பக்கம் தீர்மானம் செய்து விட்டார்கள். இது மிராசுதார்களுக்கு வெகு அனுகுணமான தீர்ப்பு.

## PERSONAL NOTES.

## னுஷ்யர்களைப்பற்றிய குறிப்புகள்.

———o———

ON'BLE MR. RAMASWMI CHETTIAR.

**னம் ராமஸ்வாமி செட்டியார்.**—ஆனரபில் ஸ்டர் எஸ். ஆர். எம். ராமஸாமி செட்டியார் மதுரைச்செந்தமிழ்சங்கத்திற்கு 1000- ரூபாய் நன்கொடையாக அளித்து மாதந்தோறும் 5 ரூபாய் அளிப்பதாக வாக்களித்திருக்கிறாராம்

MR. GLADSTONE.

**மிஸ்டர் க்ளாட்ஸ்டன்.**—க்ளாட்ஸ்டன் மந்திரியாயிருந்தபொழுது தினம் இரண்டுமணி நேரம் நடக்காமலிருக்கமாட்டார். இவருக்கு அதிகவேலை ந்தபொழுதும் 2-மணிநேரம் நடந்துவந்தாராம். சாரணமாக தினம் 14-மணி அல்லது 16-மணி ரம் வேலை செய்யவேண்டியிருந்தபோதும் தினம் மணி நேரம் நடப்பதில் காலத்தைக் கழித்தாராம். ற்று இருந்தாலும்ஸரி, ஸாதாரண மழையிருந்தாலும்ஸரி, வாட்டர் ப்ரூப் என்ற ஒருவித துணியை மல் தரித்துக்கொண்டு நடப்பாராம்; பகலில் நடக்க டியாவிடின் இரவில் நடப்பாராம்.

RAO BAHADUR GOVINDADOSS CHATHURBHUJADOSS.

**ராவ் பகதூர் கோவிந்ததாஸ் சதுர்ப்புஜதாஸ்.**—சென்னப்பட்டணம் ராவ் பகதூர் கோவிந்த தாஸ் சதுர்புஜதாஸ் ஜி. ஐ. பி. ரெயில்வேயில் மன்மாட் என்ற ஊரில் ரெயில்வேப் பிரயாணிகள் வந்திறங்க ரூபா 30,000 செலவில் ஒரு தர்ம சத்திரங்கட்டிவிடப்போகிறாரென்று தெரியவருகிறது. ரெயில்வே ஸ்டேஷனுக்கு ஸமீபத்தில் அந்த தர்மசத்திரத்தைக் கட்டிவிடுவதற்காக ரூபா 5500-க்கு ஒரு காலி நிலம் வாங்கியிருக்கிறார். கட்டிட வேலையைத் தொடங்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்து வரப்படுகின்றன. அந்த சத்திரம் ரெயில்வேப் பிரயாணிகளுக்கு வெகு உபகாரமாயிருக்கும்.

OUR EMPEROR'S DRESS.

**நமது சக்ரவர்த்தியின் உடுப்பு.**—நமது சக்ரவர்த்தி உயர்ந்த ஆடைகளைத் தரிப்பதில்லை. ஆயினும் வீட்டிலிருக்குபோது தரித்துக்கொள்ள உடுப்பும், வெளியிற் வேட்டையாடச்சென்றால் அதற்குவேண்டிய உடுப்பும், நாட்டுப் புறங்களுக்குச் செல்லுகையில் அதற்குவேண்டியஉடுப்பும், இருக்கின்றன.

இவரே தமது உடுப்புக்குவேண்டிய துணிகளை வாங்குகிறாராம். கைத்தறியால் வீட்டிலேயே செய்யும் துணிகளை வாங்கி அவ்விதம் துணி நெய்பவர்களுக்கு உதவிபுரிந்து வருகிறாராம். இவருக்கு கப்பல் யுத்தம் முதலியவைகளில் அதிகப் பயிற்சியிருக்கிறமையால் இவைகளுக்கு வேண்டிய உடுப்பு எல்லா அரசர்களைவிட அதிகமாயிருக்கின்றனவாம். ஆனால் ஜர்மன் சக்ரவர்த்திக்கு மாத்திரம் நமது சக்ரவர்த்திக்கு எவ்வளவு விதம் விதமான உடுப்புகளிருக்கின்றனவோ அவ்வள விருக்கின்றனவாம். மேலும் நமது சக்ரவர்த்தி கௌரவகர்னலாக நமது ஸைன்னியத்தில் இருப்பதுடன் இதர ராஜ்யத்திலும் இவரை அவ்விதம் நியமித்திருக்கிறார்கள்.

A GENTLEMAN ENGINE DRIVER.

**என்ஜின் ஓட்டும் ப்ரபு.**—ட்யூக் ஆப் ஸரகோஸ்ஸா என்பவர் இஸ்பானிய தேசத்து ப்ரபுக்களில் அதிக ஐசுவரியமும் பூர்வீக வம்ச பெருமையும் உடைத்தானவர்களிலொருவர். ஸரகோஸ்ஸா உயர்கோத்திரத்திற்கு இவரே தலைமையானவர். பூஸ்திதி விஸ்தாரமாயிருக்கிறது. இருந்தபோதிலும் இப்பிரபு வேலைசெய்வதில் வெகு விருப்பமுடையவர். தம்முடைய ஜென்ம தேசத்திலுள்ள காணி, பூமி, வீடுவாசல்களையெல்லாம் காரியக்காரரிடம் ஒப்பித்துவிட்டு, ப்ரான்சு தேசத்திற்குவந்து, ஒரு ரெயில்கம்பனியில் யந்திரம் ஓட்டும் அலுவல் பார்த்து வருகிறார். மற்ற ட்ரைவர்களைப்போலவே இவரும் சம்பளம்பெற்றுவருகிறார். இராக்கண், பகற்கண் விழிக்கிறார். இரண்டுமாதங்களுக்குமுன் ரெயில் வேலைக்காரர்களெல்லாம் கட்டுப்பாடாய் வேலை நிறுத்திப்போட்டபோது இந்த ப்ரபுவும் மற்றவர்களைப்போலவே வேலைசெய்யாமல் சும்மாவிருந்தார். அப்போது அவருடைய சிநேகிதர்களிலொருவரிடத்தில் தன்னைத்தான் தெரிந்துகொள்ளுவது கஷ்டமாயிருக்கிறதென்றும், ஏனெனில் தம்முடைய கைகள் வழக்கத்துக்கு விரோதமாய் வெண்மையாயிருக்கின்றனவென்றும் வேடிக்கையாய்ப் பேசிக்கொண்டிருந்தார். உலகத்தில் ஐசுவரியத்தினால் அகங்காரங்கொள்ளாதவர்கள் மகாசொற்பப்பேர்.

## FUN AND ANECDOTE.

## வேடிக்கையும் துக்கடாக்கதைகளும்.

An old woman's Fate.

**ஒரு கிழவி கதி.**—ருஷியா தேசத்தைச் சார்ந்த ஓரன்பர்க் என்னும் மாகாணத்தில் பஞ்சமுண்டாகி அகவிலை குறைந்து ஜனங்களுக்குக் கஷ்டம் நேர்ந்ததாம். இதற்குக் காரணம் பிடாரிபைப்பே'லிருக்கும் இந்தக் கிழவிதான் என்று எல்லோருங்கூடி ஒரு கிழவியை அடித்துக் கொன்றுவிட்டார்களாம்.

An Absurd Rule.

**ஒரு அசட்டு நூல்.**—ஒரு ஊரில் மிகவும் சட்டதிட்டங்களையுடைய நாடகக்கம்பெனியார் வந்து நாடகம் ஆடிக்கொண்டிருக்கும்போது, அந்த நாடக விளம்பரத்தில், "நாடகக்கொட்டைகைக்குள் வந்து கலகம் செய்வோரை, தாக்ஷணியமின்றி அவர்கள் கொடுத்த சார்ஜைத்திருப்பிக்கொடுத்து வெளியே அனுப்பிவிடுவோம்" என்று ஒரு கண்டிப்பான சட்டம் விளக்கப்பட்டிருந்தது; இதைப்பார்த்ததும் இரண்டு சிநேகிதர்கள் நாடகத்துக்குப்போய் நாடகம் முடியும்வரையில் பார்த்துக்கொண்டிருந்துவிட்டு முடியப்போகும் தருணத்தில் எழுந்து உண்மையாகவே பெருஞ்சண்டை போடுவார்போல் நடித்து ஒருவரையொருவர் குடுமியைப்பற்றிக் கீழேயிழுத்துப்போட்டு இருவரும் தரையிற்புரண்டு பெருங்கூக்குரலிட்டார்கள். உடனே ஸ்டேஜ் மானேஜர் வந்து அவர்களை விலக்கிவிட்டுக் கண்டித்தார். அப்போது நடிப்பாகச் சண்டைபோட்ட இருவரும், "ஐயா மானேஜரே! நாங்கள் நாடக சட்டத்துக்கு விரோதமாகச் சண்டைபோட்டது குற்றந்தான்; விளம்பரத்தில் கண்டபடி நாங்கள் கொடுத்த சார்ஜைக்கொடுத்துவிட்டால் வெளியே போய்விடுகிறோம்" என்றுரைத்தார்கள். மானேஜருக்கு அவ்வாறு கொடுப்பது வயிற்றெரிச்சலாயிருந்தும், "விளம்பரத்தில் கண்டபடி செய்யாவிட்டால் நிந்தையுண்டாகும்" என்று கருதி, கேட்டபடியே சார்ஜைக்கொடுத்து அவர்களை அனுப்பிவிட்டு, "இந்த ரூல் மதியீனமுள்ளதாகும்" என்று மறுநாளே விளம்பரத்தில் அதை எடுத்துவிட்டார்.

An elephant's ingenuity.

**யானையின் புத்திகூர்மை.**—சிலோனில் ஸர் வில்லியம் க்ரிகரி என்பவர் கவர்னராயிருந்த காலத்தில் கேபர்க் அரசகுமாரி அந்தத்தீவைப் பார்க்க வந்திருந்தார்கள். அப்பொழுது க்ரிகரி அவர்கள், அரசகுமாரத்திக்கு அத்தீவிலுள்ள பற்பல விசேஷ ஸ்தலங்களைக் காட்டினாராம். யானைகள் வேலை செய்வதைப் பார்க்க விரும்பி அவரைக் கேட்கவே, அவரும் அவ்விதமே யானைகள் வேலை செய்வதைக் காண்பிப்பதாகச்சொல்லி கண்டியில் ஒரு கோயிலிலிருந்து இரண்டு யானைகளை வரவழைத்தார். அவைகளை எந்த வேலை செய்யச் சொன்னபோதிலும் சுலமாகச் செய்தனவாம். ஒன்று பெரிய கற்களை வெகு எளிதில் சங்கிலிகட்டி எடுத்துக்கொண்டுபோய் மற்றொரு இடத்தில் வைத்து அச்சலிங்கியை அவிழ்த்துக் கொண்டு வந்ததாம். பின்பு மற்றொன்று செய்ததானது எங்களுக்கு மிகுந்த ஆச்சரியத்தை உண்டாக்கியது என்று சொல்லுகிறார்கள். அதாவது அது பெரியதும், நீண்டதும், பளுவுள்ளதுமான ஒரு கல்லுக்கு சங்கிலியைக்கட்டி செங்குத்தான பாறையிலிருந்து இறங்கி வரும்பொழுது அந்தக்கல் அதன் முழங்காலில் பட்டுக்கொண்டே வந்ததாம். அப்பெரியகல் இவ்விதம் பட்டுக் கொண்டேவந்தால் அதற்கு நோவுண்டாகுமல்லவா? அது நின்று, அச்சங்கிலியை எடுத்து தன் தந்தத்தில் சுத்திக் கொண்டதாம். இப்படிச்செய்தவுடன் கல் தன் முழங்காலில் முன்போல் படுகிறதா வென்று பார்த்ததாம். அச்சங்கலி நீண்டிருந்தமையால் அக்கல் அதன் முழங்காலில் பட்டுக்கொண்டிருந்தது இப்பொழுது எப்படிபடும்? படாததைக்கண்டு யாதொரு அஸௌகரியமுமின்றி கொண்டுபோக வேண்டிய இடத்துககுக் கொண்டுபோய்ச் சேர்த்ததாம்.

Nambudris.

**நம்பூதிரிகள்.**—நம்பூதிரிகளைக் குறித்துத் தமாஷ்க்கதைகள் அநேகம் உண்டு. ஒருநாள் ஒரு நம்பூதிரி தெருவழியாய்ப் போய்க்கொண்டிருக்கையில் இஷ்டனொருவன் வீட்டுத் திண்ணையிலிருப்பதைக் கண்டு அங்கே போய், "ஐயா, இந்த வீட்டில் சில நாளைக்கு முன் யாரோ ஒருவர் இறந்துபோனதாகக் கேள்விப்பட்டேன். **அது தாங்கள் தானா, அல்லது அனுஜனோ** அறிய விரும்புகிறேன்," என்று கேட்டதாக ஒரு கதை!

## CURIOSITIES.
## விநோதங்கள்.

CURIOUS CHILLI.

**நூதன மிளகாய்.**—ஒரு மிளகாய்க் கன்றின் ஒரு தண்டில் முக்கோண வடிவுடைய இரண்டு மிளகாய்கள் காய்த்திருக்கின்றன வென்று கண்டியிலிருந்து ஒருவர் எழுதுகிறார்.

A HOSPITAL FOR FISHES.

**மீன்களுக்கும் ஆஸ்பத்திரி.**—குதிரைநாய்முதலியவைகளுக்கு ஆஸ்பத்திரி ஆங்காங்கு ஏற்பட்டிருப்பது போல மீன்களுக்கும் ஆஸ்பத்திரி யொன்று அமெரிக்காவிலுள்ள நியூயார்க்பட்டணத்தில் ஸ்தாபிக்கப் பட்டிருக்கிறது.

A CURIOUS BIRTH.

**ஒரு அதிசயப் பிறவி.**—சென்றமே மாதத்தில் பிக்கா டெல்லி என்னும் ஊரில் ஒரு ஐரோப்பிய ஸ்திரீ நாய் முகத்தோடு கூடிய ஒரு குழந்தையைப் பெற்றாள். அக்குழந்தை உயிரோடிருக்கின்றது. அக்குழந்தை வெகு நாளைக்கு ஜீவித்திருக்கு மென்று டாக்டர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள்; அவள் நாய் முகமுள்ள குழந்தையைப் பெற்றதற்குக் காரணம் அவள் கர்ப்பமாயிருக்கும் போது ஒரு நாய்க்குட்டியைப் பிரியமாக வளர்த்து எப்போதும் அதைவிட்டு பிரியாமலிருந்ததே யாம்.

A MACHINE TO OPEN LETTERS.

**கடிதங்களைத் திறக்க ஒரு யந்திரம்.**—பெரிய ஆபீஸ்களில், நூற்றுக் கணக்கான கடிதங்கள் வருகின்றன. அவைகளைத் திறப்பதற்கே அநேகமணி நேரம் செலவாய் விடுகிறது. இதற்காக இப்போது ஒரு புதிய யந்திரங் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. இது வெகு விரைவில் கடிதங்களைத் திறந்து விடுகிறது. இதில் கால் குதிரைப் பலமுடைய மோட்டார் பிரயோகிக்கப் பட்டிருக்கிறது.

THE WATERLOO LAKE.

**வாட்டர்லூ ஏரி.**—பாமா தீவுகளில் வாட்டர்லூ என்கிற ஒரு விநோதமான ஏரியிருக்கிறது. 1,000 அடி நீளமுள்ள இந்த ஏரி முழுமையும் ஜ்வாலித்தெரியுந் தீ மயமாய்க் காணப்படுகிறது. ஆயினும் அதிலிறங்கி நீந்துகிற மனிதரை எரித்துப்போடுகிறதில்லை. ஆட்கள் தண்ணீரிலிறங்கும்போது அவர்கள் தேகமெல்லாம் நெருப்பாடை போர்த்ததுபோலிருக்கிறதாம். தெரிக்கிற நீர்த்துளிகள் நெருப்புப் பொரிகளைப்போல் காணப்படுகின்றனவாம். இந்த ஏரி முழுவதும் பாஸ்பரஸ் என்று சொல்லப்படும் நிபாக்கினிஸத்துடையதாயிருக்கவேண்டும்.

EAGLES.

**கழுகுகள்.**—மனிதரை முதுகில் தூக்கிக் கொண்டு பறக்கும் கழுகுகள் இருக்கின்றன. இவைகளை வாகனமாகச் சிலர் உபயோகப்படுத்துகிறார்கள். இவைகள் சேனைகளுக்கு முக்கிய அங்கமாவதை குறித்து பேடன் பௌவல் என்கிற ஆங்கிலேயர் எழுதுகிறார் :—'பலத்த காற்றடித்தால் ஒரு புகைக் கூண்டுபோகாது', இக்கழுகுகள் பயமில்லாமல் போகும். அவைகளைப்பறக்க விடுவதற்கு புகை வேண்டுவதில்லை. அன்றியும் பகைவர் கண்களுக்கு இவை ஜடுதியில் புலப்படா. ஒரு மையில் உயரமிருந்தால் அவை காணப்படுவதே யில்லை. அனுபவத்தில் அவைகளைக் காயப்படுத்த முடியாது."

A HORSE WITH THE LONGEST MANE.

**அதிக நீண்ட பிடரிமயிருள்ள குதிரை.**—உலகத்தில் மனிதர்களுடைய உபயோகத்திலிருக்கும் குதிரைகளின் தொகை 10 கோடி யிருக்கலாமென்று உத்தேசிக்கப்படுகிறது. இவைகளில் ஒன்றுக்கு மாத்திரம் 18 அடி நீளமுள்ள பிடரிமயிருண்டு. இது அமேரிக்காவில் கலிபோர்னியா மாகாணத்தில் இங்கிள் வூட் பட்டணத்தில் வஸிக்கும் மிஸ்டர் ஜில்கிட் என்பவருக்கு ஸொந்தம். மயிர் சிக்கிக் கொண்டு போகாதபடி அதை வாரி சீவிச் சடை போட்டு வைத்திருக்கிறார்கள். சடையையவிழ்த்து விடும்போது மயிர் மிக நேர்த்தியாய் சமுத்திரத்தின் அலைபோல்தரையில் படர்ந்திருக்கும். மிஸ்டர் ஜில்கிட் அப்பேர்பட்ட அருமையான குதிரையின் மேல் மகா கவனமாயிருக் கிறாரென்பது ஆச்சரியமல்ல. மயிரில் கிஞ்சித்தும் அழுக்கு சேராதபடி தினமும் அதைக்கழுவி சடைபோடும்படி செய்வார். மேலும் அம்மயிர் எவ்வளவு அடர்த் தியாயிருக்கிறதென்றால்சடையில் அடிப்பாகம் குறுக்குஅகலத்தில் 6 அடி அகலத்துக்கு மேலிருக்கிறது. சடையை அவிழ்க்க ஒன்றரை மணிநேரம் செலவழிக்க வேண்டியது. ஏனெனில் சிக்கு உண்டாகாதபடி சடையை வெகு பத்திரமாய்ப் போடவேண்டுமாம்.

## NEWS OF THE MONTH.

## மாஸ வர்த்தமானங்கள்.

### INDIAN NEWS.

### இந்திய நாட்டு ஸமாசாரங்கள்.

CROPPED HEADS.

**கத்தரிக்கப்பட்ட தலைமயிருடையவர்கள்.**—கத்தரிக்கப்பட்ட தலைமுடியையுடையவர்கள் கோவிலுக்குள் பிரவேசிக்கக்கூடாதென்று, கொச்சிராஜா ஒரு கட்டளை பிறப்பித்திருக்கிறார்.

MATCH FACTORY.

**நெருப்புக்குச்சி செய்தல்.**—ஜப்பான் தேசஞ்சென்று நெருப்புக்குச்சி செய்யும் முறையைக் கற்றுவந்த வி. கே. ஜெகநாயகமவர்களும், வி. நடராஜா அவர்களும் யாழ்ப்பாணத்தில் நெருப்புக்குச்சி செய்ய எண்ணி அதற்கேற்ற முயற்சிகள் செய்கிறார்கள்.

A MEMORIAL.

**ஒரு ஞாபக சின்னம்.**—இந்தியாவிலுள்ள முகம்மதியர்கள் நமது கவர்னர் ஜனரலாயிருந்த மிண்டோ தம்மவர்களுக்குச்செய்த உதவியின் ஞாபகார்த்தமாக அலிகர் பட்டணத்தில் ஒரு கைத்தொழிற்சாலை ஸ்தாபிக்க உத்தேசித்திருக்கிறார்கள்.

VIRUDUPATTI TENKASI RAILWAY.

**விருதுப்பட்டி தேன்காசி ரேயில்வே.**—தென்னிந்தியா ரெயில்வேக் கம்பெனியார் விருதுப்பட்டியிலிருந்து தென்காசிக்கு ரெயில் போடுவதற்கு ஸர்வே செய்யலாமென்று ஸிம்லாவிலிருந்து உத்தரவு பிறந்திருக்கிறது. இந்த ஸர்வே லயனுக்கு விருதுப்பட்டி-தென்காசி ரெயில்வே ஸர்வே லயன் என்று பெயராகும்.

SALEM CO-OPERATIVE CONFERENCE.

**சேலம் ஜில்லா ஐக்கிய நாணய கான்பரேன்ஸ்**

சேலம் ஜில்லா ஐக்கிய நாணய நிதிச் சங்கக் கான்பரென்ஸ் அடுத்த மாதம் 14-ந்தேதி சேலத்தில் கூடும். அந்தக் கான்பரென்ஸின் தலைமையை ஆனரெபில். மிஸ்டர் ஜே. என். அட்கின்ஸன் வகிக்கப்போகிறார். அந்தக் கான்பரென்ஸ் சேலம் ஜில்லாவில் கூடுகிற இரண்டாவது ஐக்கிய நாணயநிதிச் சங்கக் கான்பரென்ஸாகும்.

ADULTERATED COFFEE.

**காப்பியில் கலப்பு.**—சென்னையிலும் கும்பகோணம் தஞ்சைமுதலிய வெளியூர்களிலுமுள்ள காப்பி ஹோடல்களில் அரக்கு என்னும்பெயருடன் சுத்தக் காப்பிக் கஷாயத்தோடு கலக்கப்படும் சீயக்காய் கஷாயத்தால் காப்பிக்குப் புதிய ருசி உண்டாக காப்பி குடிக்கும் ஜனங்கள் க்ளப்புக் காப்பிக்கு ஸமானமா என்று சொல்லிக்கொண்டு, வீட்டில் மாடுகறந்து, காப்பி போட்டுச்சாப்பிட ஸௌகரிய மிருக்கிறவரும், அதை அலட்சியம் செய்து விடுகிறார்கள். இந்த சீயக்காய்க் கஷாயத்திற்கு மருந்து முறையில் பல நற்குணங்களிருந்த போதிலும் காப்பியோடு கலக்கப்பட்டால் அப்பொழுது அதற்கு என்ன குணமுண்டாகுமோ தெரியவில்லை.

A TAX ON MAHOMEDAN PILGRIMS.

**மகமதிய யாத்திரிகர்களுக்கு ஒரு புதுவரி.**—அரேபியா நாட்டில் மகமதியர்களின் யாத்திரை ஸ்தலங்களாயுள்ள மெக்கா மெடினா இவைகளுக்கு யாத்திரையாய் வரும் மகமதியர்களிடத்திலிருந்து யாத்திரை மார்க்கத்தின் சுகாதார நிலையை விருத்தி செய்வதற்காக துருக்கி கவர்ன்மெண்டார் புதிதாய் ஒருவரி விதிக்கப்போகிறார்களென்பதாக கான்ஸ்டாண்டி நோபிலிலுள்ள ப்ரிடிஷ் ஸ்தானிகரிடமிருந்து இந்தியா கவர்ன்மெண்டுக்கு தந்தி வந்திருப்பதாய் கவர்ன்மெண்டார் பம்பாய் கவர்ன்மெண்டுக்குத் தெரிவித்திருக்கிறார்கள். அந்த வரி இந்தியத் துறைமுகங்களிலிருந்து மெக்காவுக்குத் துறைமுகமாகிய ஜெட்டா துறைமுகத்தில் வந்திறங்கும் கப்பல்களின் தலைவர்களிடமிருந்து அடுத்த அக்டோபர் மாதம் முதல் கட்டாயமாய் வசூல் செய்யப்படுமாம். அந்தவரி கப்பல்களின் தலைவர்களிடமிருந்து துருக்கி கவர்ன்மெண்டின் உத்தரவை யனுசரித்து வசூல் செய்யப்படப்போவதைக் கருதி கப்பற் கட்டணத்தோடு சேர்த்து அதை வாங்கிவிடலாமென்று இந்தியா கவர்ன்மெண்டார் சொல்லி யிருக்கிறார்கள்.

A VAIDIK DHARMA SABHA.

**வைதீக தர்மப் பிரசாரம்.**—இந்தப் பெயரைக் கொண்ட ஒருஸங்கம் மைலாபூரில் ஸ்தாபிக்கப்பட்டி

ருக்கிறது. இதில் வேதவேதாங்கங்களிற் கூறியபடி வித்யாப்யாஸம் செய்விக்கவேண்டுமென்று யோசிக்கப்பட்டிருக்கிறது. இந்த சங்கத்தின் முக்கிய நோக்கங்கள் புஸ்தகங்கள் எழுதி வெளிப்படுத்துவதும், பூர்வகாலத்திலுள்ள நான்கு ஜாதிகளின் வருணாசிரம தர்மத்தை நிலைக்குக்கொண்டு வருவதும், ஏழைகளையும் கீழ் வகுப்பார்களையும் முன்னுக்குக்கொண்டு வருவதற்குப் பணம் சேகரிப்பதும், இலக்கியங்களாகவும், மத விஷயமாகவும், பின்னும் உபயோகப்படத் தக்கனவாகவுமுள்ள புஸ்தகங்களை சேகரிப்பதும், எழுத்துப் பிரதிகளை அச்சிடுவதும், வேத வேதாந்த ரெவ்யூ என்ற ஒரு பத்திரிகையை நடத்துவதும், வைதீக மிஷன் காலேஜ் என்ற ஒரு காலேஜ் ஸ்தாபிப்பதுமாம். இந்தக் காலேஜில் கற்பிக்கப்படும் பல விஷயங்களோடு நேபாளத்து விதுஷியான ஓமா ஸகோதரியாரால் சிறுமிகளுக்கும் ஸ்திரீகளுக்கும், இங்கிலீஷ், தையல் வேலை ஸங்கீதம் முதலியவைகளும் கற்பிக்கப்படும்.

CENSUS OF THE HINDUS.

**ஹிந்துக்களின் ஸங்கியை.**—சென்னை மாகாணத்து ஹிந்துக்கள், மகமதியர்கள், கிறுஸ்தவர்கள், மற்றையோர் இவர்களின் தொகையைக் கணக்கிட்டுப்பார்த்ததில் 1911-ம் வருஷக்கணக்கை உத்தேசித்து 1901-ம் வருஷக்கணக்கில் ஹிந்துக்கள் 100-க்கு 8 பேரே விருத்தியாயிருக்க, மகமதியர்கள் 100-க்கு 11 பேரும், கிறிஸ்தவர்கள் 16 பேருமாக விருத்தியடைந்திருக்கிறார்கள். ஹிந்துக்களின் பிறப்பு மாத்திரம் போன ஸென்ஸஸ் கணக்குக்காகக் குறையவில்லை. ஜனனத்தின் தொகை மட்டும் விருத்தியாயிருக்க, ஆள்களின் கணக்குக்குக் குறைவு உண்டாயிருப்பதற்கு சிசுக்களின் மரணமே காரணமாகும். இச்சிசுக்கள் திடசரீர முடையனவாயிராத ஒரு காரணத்தால் இறப்பதன்றி, தாய்மார்களின் பராமரிப்புக்குறைவாலும் இறந்துவிடுகின்றன. நமது தேசத்திலுள்ள பால விவாஹத்தின் கெட்ட வழக்கத்தினால் 14 வயதுள்ள பெண்கள் பெரும்பாலும் தாய்மார்களாய் விடுகிறார்கள். அவர்களுக்குக்குழந்தையை வளர்க்கும் பொறுப்பு எப்படி யுண்டாகும்?

LAWLEY INSTITUTE.

**லாலி இன்ஸ்டிட்யூட்.**—உதக மண்டலத்தில் இப்பெயர்கொண்ட ஒரு தர்மக்கட்டிடத்தை ஸ்தாபிக்க பொப்பிலி மகாராஜா முன்வந்து, நாளதுமீ 15-ம் தேதி அதற்கு அஸ்திவாரக்கல் நாட்டும்படி சென்னை கவர்னரை வேண்டினார். அவர் வேண்டுகோளுக்கு இசைந்த கவர்னரும் அவ்வஸ்திவாரக்கல்லை அன்று நாட்டினார். பொப்பிலி மகாராஜா தாம் இக்கட்டிடம் கட்டவேண்டியதற்குக் காரணம் யாதென்பதைப் பின்பு விவரிக்கப் புகுந்து, தாம் கிட்டத்தட்ட ஒரு வருஷகாலமாக சென்னை மாகாண நிர்வாக ஸபையில் ஒரு மெம்பராயிருந்தபோது, பெருந்தொகையைச் சம்பளமாகப்பெற்றதாகவும், அப்பணத்தைத் தாம் நல்ல வழியில் செலவிட உத்தேசித்ததாகவும், அதன்மேல் உதகமண்டலத்திற்கு வரும் உத்தியோகஸ்தரல்லாதவர்கள் வஸிப்பதற்குத்தக்க விடுதியின்மையைக்கருதி அக்குறையை நிவர்த்திக்க ஒரு கட்டிடம் கட்ட வேண்டுமென்று கருதினதாகவும் சொன்னார். இக்கட்டிடம் அமைப்பதில் தாம் எந்தக்கவர்னருடைய நிர்வாகஸபையில் உத்தியோகம் பெற்றாரோ, அந்தக்கவர்னருடைய பெயர் ஸம்பந்தமாயிருக்க வேண்டுமென்றும், எந்த இடத்தில் உத்தியோகஸ்தர்களல்லாத கனவான்கள் தேக அஸௌகரியத்தின் பொருட்டு வந்தால் இடங்கிடைக்கப் பெறாமல் அவதிப் படுகிறார்களோ அந்த இடத்தில் அவர்களின் ஸௌகரியத்திற்காகவும் இக்கட்டிடம் தாம் கட்ட உத்தேசித் திருக்கிறதாகச் சொன்னார். பின்னும், அவர் தம்மைப்போன்ற ஜமீன்தார்கள் தமது நடவடிக்கையின் ஒழுங்கினால் கவர்னரின் நிர்வாக ஸபையின் மெம்பர்களாய் வரும்படியான யோக்யதையைப்பெறுவார்களென்றும், பெற்றபிறகு இந்தலாலி இன்ஸ்டிட்யூட்டைப் போன்ற வேறு தர்மங்களைச் செய்வார்களென்று தாம் நம்புவதாகவும் கூறினார்.

REPRESENTATIVE GOVERNMENT IN INDIA.

**இந்தியாவில் ஜன நாயகம்.**—இப்போது உலகமெங்கும் ஜன நாயகமே லக்ஷியமாக ஜனங்கள் விருப்பங்கொண்டு அதற்காக உழைத்து வருகிறார்கள். ஜனநாயகமென்பது, ஒரு தேசத்து ஜனங்கள் தங்கள் ப்ரதிநிதிகள் மூலமாய் தேச நிர்வாகம் செய்யுமுறை. இந்த முறை அமெரிக்காவைச் சேர்ந்த யுனைடெட் ஸ்டேட்ஸில் முழுமையும் ஸ்தாபிக்கப்பட்டு ஜனங்களே தங்கள் ப்ரதிநிதிகள் மூலமாய் தேச நிர்வாகத்தைச் சேர்ந்த ஸகல விவகாரங்

களையும் நடத்தி வருகிறார்கள். ப்ரான்ஸ், இங்கிலாந்து, ஆகிய தேசங்களிலும் இந்த முறை அநேகமாய் இருந்து வருகிறது. ஜர்மெனி, ஆஸ்ட்ரியா, இடாலி, ஜப்பான், முதலிய தேசங்களில் ஜனநாயகம் முழுதும் ஸ்தாபிக்கப்படாவிட்டாலும் இப்போதிருக்கும் ஏற்பாடுகள் ஜனநாயகத்துக்கு அஸ்திவாரமாயிருந்து அந்தலக்ஷியத்தையே பின்பற்றிச் செல்லுவனவா யிருக்கின்றன. இது வரையில் ஸ்வயேச்சாபத்தியம் அதாவது ஒரு ராஜாவும் அவன் மந்திரிகளும், தேசத்தை பரிபாலனம் செய்யும் முறையாயிருந்த தேசங்களும் அந்த முறையால் தற்காலம் ஜனங்களுக்குரிய நன்மைகள் பலவும் கைகூடுவதில்லையென்று நம்பி, ஜன ப்ரதிநிதிகள் அடங்கிய பார்லிமெண்ட் ஸ்தாபித்துக்கொண்டு தேச நிர்வாகம் நடக்கவேண்டுமென்ற எண்ணங்கொண்டிருக்கின்றன. ருஷியா, துருக்கி, பெர்ஷியா, ஈஜிப்ட், ஸயாம், இந்தியா, இத்தேசங்களிலும் இந்த எண்ணமுண்டா யிருக்கிறது. ஸ்வயேச்சாபத்தியத்தை நீக்கி ஜனங்களின் ப்ரதிநிதி அடங்கிய ஸபைகள் தேச நிர்வாகத்தில் பங்கு பெற்று அதை வகிக்க ஆரம்பிக்குமானால், பிறகு இந்தமுறை வியாபித்து ஜனங்களுக்கு வரவர அதிகமான ஸ்வதந்திரங்கள் உண்டாகி, அந்தஸ்துப் பேதங்களில்லாமல், ஸகல ஜனங்களும் தேச நிர்வாகத்தில் அக்கறை பாராட்டி, தங்கள் ப்ரதிநிதிகள் மூலமாய் தேசத்தை யாளும் முறையுண்டாக வெகு காலம் செல்லாது. இந்தியாவும் இப்போது சட்டஸபைகள் ஏற்பட்டு ராஜ்ய நிர்வாகத்தில் ஒருவிதமாய்ப் பங்கு பெற்றிருப்பதால் இது காலக்ரமத்தில் விசாலித்து ஜன நாயகமாய் முடியுமென்ற கோரிக்கை இருந்து வருகிறது.

THE UTTANKARAI CO-OPERATIVE CONFERENCE.

**ஊற்றங்கரையில் ஐக்கியநாணயச் சங்கங்களின் கான்பரேன்ஸ்.**—சேலம் ஜில்லாவிலுள்ள ஊற்றங்கரை என்ற ஊரில் ஊற்றங்கரைத் தாலூக்காவைச் சேர்ந்த 17 ஐக்கியநாணயச் சங்கங்களின் ப்ரதிநிதிகளும், அதைச்சேராமல் சேலம் ஜில்லாவைச் சேர்ந்த 18 சங்கங்களின் ப்ரதிநிதிகளும் கூடி, இந்தச்சங்கங்களின் நடவடிக்கைகளைப்பற்றிக் கவனித்துப்பல தீர்மானங்கள் செய்தார்கள். சுமார் ஆயிரம் ஜனங்கள் வந்து கூடினதுமல்லாமல் ஜில்லா கலெக்டர் ஜட்ஜ்முதலிய உத்யோகஸ்தர்களும் வந்திருந்தார்கள். சேலம் அர்பன் பாங்கின் செக்ரிடெரியாயிருந்து இந்தச் சங்கங்களின் நன்மைக்காக உழைத்து வரும் மிஸ்டர் டி. ஆதிநாராயண செட்டியார் அக்ராஸனம் வகித்தார். உபசரணைக் கமிட்டி ப்ரஸிடெண்ட் மிஸ்டர் கே. சேஷகிரிராவ் இவர்கள் இருவரும் வழக்கம்போல் ப்ரஸங்கங்கள் செய்தார்கள். மிஸ்டர் சேஷகிரிராவ் அவர்கள் செய்த ப்ரஸங்கத்தின் ஸாராம்சத்தைப் பிழைக்கும் வழிக்காக ப்ரத்யேகமாய் எழுதி இன்னொரு பக்கத்தில் ப்ரசுரித்திருக்கிறோம்.

இந்த கான்பரென்ஸில் செய்த சில முக்கிய தீர்மானங்களாவன; விவஸாய இலாகாவில் ப்ரசுரமாகும் தமிழ்ப் பத்திரிகைகள் இந்த ஸொஸைடிகளுக்கும் கொடுக்கப் படவேண்டும். மத்திய ஸொஸைடிகளை அதாவது ஜில்லாவிலுள்ள பல சங்கங்களுக்குப் பொதுவாய் ஸ்தாபிக்கப்படும் பெரிய ஸொஸைடிகளை ஒன்று சேர்த்து இன்னும் பெரிய பொது ஸொஸைடி சீக்கிரம் ஸ்தாபிக்கப் படும்படி கவர்ன்மெண்டைக் கேட்டுக்கொள்ள வேண்டும். ஸொஸைடிகளின் கணக்குகளை மாஸம் ஒரு முறை ஆடிட் செய்து பல ஸ்தல ஸொஸைடிகளை யூனியனாகச்சேர்க்க வேண்டும்; ஒவ்வொரு கிராமத்திலும் பொது ஸ்தலமென்று இருந்து அதில் கிராமவாஸிகள் கூடிப்பேசவும் படிக்கவும் வேறுவிதமாய்ப் பொழுது போக்கவும் வேண்டும். ஸொஸைடி மெம்பர்களுக்குள் வழக்குகள் நேரிட்டால் அவைகளைக் கோர்ட் முன்பாகக் கொண்டு போகாமல் பஞ்சாயத்து மூலமாய்த் தீர்த்துக்கொள்ள வெண்டும்.

A HINDU MARRIAGE REFORMS LEAGUE.

**ஒரு ஹிந்து விவாகத்திருத்த சங்கம்.**—ஹிந்துக்களுக்குள் விவாகத்தைப் பற்றின சில வழக்கங்கள் சமூகத்தின் அபிவிருத்திக்கு விரோதமா யிருக்கின்றனவென்ற எண்ணம் பலருக்கு உண்டாகி வருகிறபடியால், அவ்வழக்கங்களைத்திருத்தி நல்ல வழக்கங்கள் உண்டாகும்படி பல இடங்களில் பலமுயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. சென்னையிலும் இதற்காக ஒரு சங்கம் ஏற்பட்டிருக்கிறது. இந்தச் சங்கத்தின் கமிட்டி ஸமீபத்தில் ஆனரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் சுந்தர அய்யர் வீட்டிற் கூடி பின்வரும் விஷயங்களைப்பற்றி ஆலோசனை செய்தது: விவாக

ஸமயத்தில் வரஸுல்கம் வாங்குதல் பிசகென்றும், பெண்களுக்குப் பதினொரு வயது ஆவதற்கு முன்னால் விவாகம் செய்வது கூடாதென்றும், பெண்கள் பெரிய மனுஷிகளான பிறகு விவாகம் செய்வதை ஆதரிக்க வேண்டுமென்றும், இந்தத் தீர்மானங்களை நிறைவேற்றப்பல் வழிகளில் முயற்சிசெய்யவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. இம்மாதிரிச்சங்கங்கள் பல விடங்களில் ஸ்தாபிக்கப்பட வேண்டும். இந்தத்திருத்தங்களை ஜனங்கள் அறிந்து சிந்திக்கும்படியாகத் துண்டுப் பத்திரிகைகள் முதலியவைகள் பிரசுரம் செய்யப்படவேண்டும். வயது வந்த பெண்களுக்கு விவாகம் சாஸ்திர ஸம்மதமென்றிருக்கும் ஆதாரங்களைச் சேர்த்துப் பிரசுரம் செய்யவேண்டும். ஸ்கூல் பிள்ளைகள் இந்த நோக்கங்களை யறியும்படி ப்ரஸங்கங்கள் செய்யப்படவேண்டும். சென்னையிலும் மற்ற இடங்களிலும் கூட்டங்கள் கூடிப் பிரபலமாகி வரும் வரஸுல்க வழக்கத்தைத் தடுக்க வேண்டும். இந்தச் சங்கத்தின் மெம்பர்கள் வரஸுல்கம் வாங்கப்படும் விவாகங்களிலும் ஸம்பந்தப்படக்கூடாது. வயது வந்த பெண்களுக்கு விவாகமாகும்போது அந்த விவாகத்தில் இந்தச் சங்கத்து மெம்பர்கள் போயிருந்து அப்படி விவாகம் செய்கிறவர்களுடன் ஸமபோஜனம் செய்யவேண்டும். இப்படி விவாகம் செய்தவர்கள் ஜாதி ப்ரஷ்டம் முதலிய தொந்தரவுகளை அனுபவிக்கும்போது அவர்களுக்கு உதவி செய்ய அங்கங்கே சங்கங்கள் ஸ்தாபிக்கப்படவேண்டும். இவ்வாறு மைலாபூர் மீட்டிங்கில் தீர்மானங்கள் செய்யப்பட்டனவாம்.

THE DURBAR CELEBRATIONS.

**தர்பார் மகோத்ஸவம்.**—சென்ற மேமீ 22உயில் சிம்லாவில் கனம்பொருந்திய ராஜா பிரதிநிதியவாகளால் பிறப்பிக்கப்பட்ட ராஜவிளம்பரத்தை அனுசரித்து, பின் வருபவைகள் ஜனங்கள் அறிவிப்புக்காக பிரசுரம் செய்யப்பட்டிருக்கிறது.

டெல்ஹி நகரில் மாக்ஷிமை பொருந்திய சக்ரவர்த்தி அவர்களும், சக்ரவர்த்தினி அவர்களும், ராஜ தோரணையோடு பட்டண ப்ரவேசத்துக்காக குறிப்பிட்டிருக்கும் 1911-ஹு டிசம்பர்மீ 7உ வியாழக்கிழமையும், அந்நகரில் சக்ரவர்த்தி அவர்களின் மகுடாபிஷேக தர்பார் நடத்த குறிப்பிட்டிருக்கும் வருகிற டிசம்பர்மீ 12உ செவ்வாய்க்கிழமை தினமும், பப்ளிக்கு விடுமுறை நாள்களாகஇருக்கும். பப்ளிக்கு ஆபீஸுகள் எல்லாம் டிசம்பர்மீ 7உமுதல் 12உ வரையில் அநேகமாய் மூடப்படும். டிசம்பர்மீ 23உ முதல் ஜனவரி 1உ வரையில் கிறிஸ்துமஸ் விடுமுறை நாளாயிருக்கும்.

மாக்ஷிமை பொருந்திய சக்ரவர்த்தி அவர்கள் தம்முடைய முடி சூட்டுதலாகிய மங்களகரமானவைபவத்தை இந்தியாவில் இருக்கும் தமதுப்ரஜைகளுக்கு தெரியப்படுத்தும் பொருட்டு தாமேநேரில் தர்பாரை நடத்துகிறார்கள்.

இந்த வைபமானது இந்தியாவில் ஒவ்வொருகிராமத்திலும் டிசம்பர்மீ 12உ கொண்டாடப்படவேண்டியதென்று ராஜ பிரதிநிதி அவர்களின் விருப்பமாயிருக்கிறது.

டெல்ஹி தர்பாரில் வாசிக்கப்படும் ராஜ விளம்பரம் எல்லாஜில்லா ஹெட்க்வாட்டர்களிலும் ஒவ்வொரு டிவிஷன், தாலூகா, டிப்டி தாசில்தார்களின் ஹெட்க்வாட்டர்களிலும், ஆஜரிலிருக்கும் ஜேஷ்ட உத்யோகஸ்தர்களாலும், ஒவ்வொரு கிராமத்திலும் அந்தந்த கிராமத்தலைவராலும் அன்றைய தினமே உச்சிகால வேளையில் பயிரங்கமாய் வாசிக்கப்படும்.

ஒவ்வொரு கிராமத்திலும் பள்ளிக் கூடத்துப் பிள்ளைகளுக்கு விருந்து அளித்தல், ஏழைகளுக்கு அன்னமிடுதல், குஸ்தி விளையாட்டுகள், ஊர்கோலங்கள், வாண வேடிக்கைகள் செய்தல், கச்சேரி, கோவில், ஸொந்த வீடுகள், கடைகள், தொழில் சாலைகள் இவைகளை தீபங்களால் அலங்கரித்தல், தெருக்களை தோரணம் முதலியவைகளினால் அலங்கரித்தல், இவ்விதமாய் விமரிசையாய் அந்த தினத்தைக்கொண்டாட வேண்டியதற்கு தக்க ஏற்பாடுகளைச்செய்யும்படி ஸ்தல கூட்டத்தார்களையும் நகர வாசிகளையும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

தாம் மகுடாபிஷேகம் கொண்ட புண்ணிய விசேஷத்தின் சிறப்பை இந்தியாவிலுள்ள தமது ப்ரஜைகளுக்கு அறிவிக்கும் கருணை பூண்டு நமது சக்ரவர்த்தியாயிருப்பவர் தம்பதி ஸமேதராய் தம்முடைய இந்தியா ராஜ்யத்துக்கு நேரில் விஜயம் செய்யும் பெரும் பாக்கியம் கிடைத்தது இதுதான் முதல் தடவை. இவ்விதப்பெரும் கருணையுடைய தம் ப்ரஜைகளில் பாலரோடு விருத்தரும், தனிகரோடு ஏழையுமான ஒவ்வொருவரும் கூடியவரையில் தெரிந்து உணரும்படிக்கான விதமாய் மஹோத்ஸவத்தைக் கொண்டாட வேண்டியது.

## FOREIGN NEWS.

## அந்நியநாட்டு ஸமாசாரங்கள்.

---

THE HUSBAND WHO LOST HIS LIP.

உதடை இழந்த புருஷன்.—"நெட்டாலில் ஒரு காப்பிரி போலீஸ் உத்தியோகஸ்தனுக்கு நான்கு மனைவிகளிருந்தார்கள். அவன் ஒரு மனைவியைப் பார்த்துவிட்டு மற்றொரு மனைவியைப் பார்க்கப் போனபொழுது அவள் அன்போடு முத்தங்கொடுப்பதுபோல் பாவித்து முத்தமிட்டு அவனது உதட்டைத் துண்டாய்க் கடித்துக் கீழே துப்பிவிட்டாள், ரங்கூனிலும் பத்திராதிபராக இருந்த ஒருவரை. அவர் மனைவி அரிவாள் மணையைக்கொண்டு காதை அறுத்துவிட்டாள். இதெல்லாங் கலிகாலக் கொடுமையே," என்று பாண்டியன் பத்திரிகை கூறுகிறது.

THE MEDINA.

மேடினா.—மகாராஜா சக்ரவர்த்தி அவர்கள் இந்தியாவுக்கு விஜயம் செய்வதை யுத்தேசித்து அவர்களுக்கென ஒரு கப்பல் பி. அண்ட் ஒ. கம்பெனியாரைத் தயாரிக்கும்படி ஆக்ஞாபித்தபடி அவர்களும் மெடினா என்ற கப்பலைத்தயார் செய்திருக்கிறார்கள். இந்தக்கப்பலின் நீளம் 560 அடி, அகலம் 62½ அடி. இது 20,000 டன் சுமை ஏற்றக்கூடியது. 13000 டன்னுக்கு ரிஜிஸ்டர் செய்யப்பட்டது. இதன் வேகம் 16,000குதிரை ஓட்டமுடையதாய் மணிக்கு 19 நாட் (நாட் என்பது ஸுமார் ஒன்றேஅரைக் கால் மைலுக்கு அதிகம்) ஓடக்கூடியது. இக்கப்பல் மேல் முழுவதும் வெள்ளை நிறமுடையதாய் ராஜ நீலப்பட்டை யொன்று போடப் பட்டதாயிருக்கும். ஸாதாரணமாக யிருக்கும் பாய்மரங்களைத் தவிர்த்து தனிமரமொன்று கட்டப்படும். இதில் பட்டத்துக் கொடி பறக்கும். அநேக கப்பற் படைகளால் இந்தக் கப்பல் நிறையப் பெற்று அட்மிரல் கெப்பலால் ஒட்டப்படும். இதில் கம்பியில்லாத் தந்தியும் வைக்கப்பட்டிருக்கும்.

HIGH PRICES IN EUROPE.

ஐரோப்பாவில் அதிகவிலை —ஐரோப்பாக்கண்டத்தில் பல தேங்களில் உணவுப் பொருள்களின் விலை மேன்மேலும் அதிகரித்து வருவதால் அங்குள்ள ஜனங்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ப்ரான்ஸ் தேசக் கவர்ன்மெண்டார் உணவுப்பொருளின் விலையதிகரித்து வருவதைப்பற்றி கலகஞ் செய்கிறவர்களைக் கண்ணோட்ட மின்றித்தண்டித்து வருகிறார்கள்; அவ்வாறு செய்தும் கலகமொழியவில்லை. அங்கு முனிஸிபாலிடியார் அதிகவிலை கொடுத்து உணவுப்பொருள்களை வாங்கிக் குறைந்த விலைக்கு விற்கிறார்கள். ஜர்மனியிலுள்ள வியாபாரிகள் தமது கவர்ன்மெண்டாருக்கு உணவுப் பொருளுக்கும் மாட்டின் தீனிக்கும் விலை யதிகரித்து வருவதால் அவற்றிற்கு விதித்துள்ள வரியைக் குறைக்க வேண்டு மென்றும் அவற்றை யன்னிய தேசங்களுக்கு ஏற்றுமதி செய்யாது நிறுத்தவேண்டு மென்றும் பெட்டிஷன் செய்திருக்கிறார்கள். அமெரிக்காவிலிருந்து மாமிச உணவு இறக்குமதியாக உத்தரவாக வேண்டுமென்றுங் கேட்டிருக்கிறார்கள். ஜர்மனியிலுள்ள ப்ரஷ்யா கவர்மெண்டார் மாட்டுத் தீனியை வாங்கிக்குறைந்த விலைக்கு விற்க அதிகாரிகளுக்கு உத்தரவு செய்திருக்கிறார்கள்.

AMERICAN MILLIONAIRES.

அமேரிக்கா கோடீசுவரர்கள்.—அமெரிக்காக்கண்டம் ஐரோப்பியர்களால்கண்டுபிடித்து நானூற்றுச்சில்லரை வருஷங்களாகின்றன. ஐரோப்பாக் கண்டத்தின் பல தேசங்களிலுமிருந்து ஜனங்கள் அமெரிக்காவுக்குக் குடியேறிப்போய் திரண்ட ஆஸ்தியைக்குவித்துப் போட்டார்கள். அமெரிக்கா முழுவதும் இப்போது 3828 கோடீசுவரர்கள் இருக்கிறார்கள். அவர்கள் 1,60,000கோடி வெள்ளியை மொத்தத்தில் உடைத்தாயிருக்கிறார்கள். அதாவது அக்கண்டத்தின் தேச ஐசுவரியத்தில் ஐந்தில் ஒருபாகம் அவர்கள் கையிலிருக்கிறது. ஐக்கிய மாகாணங்களில் 20,000 பேருக்குஒருவன் 10லக்ஷம் வெள்ளி யுடைத்தான ஆஸ்திக்காரனாயிருக்கிறான். இந்த லக்ஷாதிபிரபுக்களில் நூற்றில் 88பேர் தங்களுடைய ஸொந்த பிரயாசத்தினால் மாத்திரம் அவ்வளவு பணக்காரர்களாயிருக்கிறார்கள். நூற்றில் 12 பேர் மாத்திரம் பூர்வீக ஸொத்துள்ளவர்கள். ஆகையால் அத்தேசத்தில் சில வருஷங்களுக்கு முன் ஏழைகளாயிருந்த அநேகர் இப்போது கோடீசுவரர்களாயும், லக்ஷாதிப்பிரபுக்களாயு மிருக்கிறார்கள். நமது தேசத்தில் அவ்வளவு சீக்கிரம் பணம் சம்பாதிக்கிறதற்கு வழியுண்டோ?

## MADRAS MARKET REPORTS.

## மதராஸ் மார்க்கெட் நிலவரங்கள்.

தென்னிந்தியா சேம்பர் ஆப் காமர்ஸ் என்று சொல்லப்படும் வர்த்தக சங்கத்தாரின் ஸப்டம்பர் மாஸம் 27உ ரிப்போர்ட்டுப்படி.

PRODUCE MARKET.—விளைபொருள்கள்.

| | ரூ. அ. பை. |
|---|---|
| ஆவாரம்பட்டை பாரம் 1-க்கு | 14 முதல் 19 |
| கொன்னைப்பட்டை ஷை | 12 முதல் 13 |
| கடப்பை கடுக்காய் ஷை | 8 முதல் 9 |
| சேலம் அரசகிரிஷ்டி ஷை | 18 முதல் 20 |
| நல்லெண்ணெய் ஷை | 105 முதல் 115 |
| புங்கம் எண்ணெய் ஷை | 65 முதல் 82 |
| எட்டிக்கொட்டை ஷை | 16 |
| விளக்கெண்ணெய் ஷை | 76 முதல் 77 |
| கொட்டை முத்து .. | 11 |

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| பந்தர் பச்சை அரிசி 44 படி | 8 | 8 | 0 |
| நெல்லூர் அரிசி 31 படி .. | 6 | 10 | 0 |
| கோதுமை 4 படி .. | 1 | 0 | 0 |
| கொள்ளு 195 ராத்தல் | 6¼ | | |
| வெங்காயம்(கடப்பை)பாரம் .. | 14 முதல் 15 | | |
| ஷை (பல்லாரி) ஷை .. | 13 | 0 | 0 |
| பங்களூர் உருளைக்கிழங்கு | 16 | 0 | 0 |

METALS—உலோகங்கள்.

பித்தளைத்தகடுகள் 'Rex' ம் இங்கிலீஷும் ராத்தல் 20-60, 30-60, 20-40, 20-50, பாரம் .. ரூ. 204 முதல் 205

| | | ரூ. |
|---|---|---|
| செப்புத் தகடுகள் பாரம் | .. | 245 |
| செப்புக்கட்டி ஷை | .. | 225 |
| நாகம் ஷை | | 84 |
| ஷை (உள்ளூர்) ஷை | .. | 75 |
| ஈயம் ஷை | .. | 54 |
| காரீயம் ஷை | .. | 49 |
| வெள்ளீயம் ஷை | .. | 180 வராகன். |

IRON—இரும்பு.

| | | | |
|---|---|---|---|
| மருக்கி சட்டம் 2 செ. | பாரம் | ரூ. | 19¾—20 |
| சீமை | .. | .. | 42 |
| மருக்கி தகடு | 6—9, 12—13, | | 24—37 |
| பீப்பாய்க் கட்டு | .. | .. | 27—28 |
| 8 பட்டை எஃகு | .. | .. | 23 |
| எஃகு வில்கட்டு | .. | .. | 27—31 |
| திரணைக் கம்பி மருக்கி 2 செ. | | .. | 21 |
| சீமை | .. | .. | 40-46-49 |

## SEASON.

## காலஸ்திதி.

RAINFALL.

**மழை.**—1911௵ ஏப்ரல்௴ 1-உயிலிருந்து அக்டோபர் 2உம் வரையில் பெய்த மழை அளவும், இந்தக் காலத்தில் ஸராஸரியில் பெய்திருக்க வேண்டிய மழை அளவும், கீழே அங்குலம், ஸெண்டுகளாகக் குறிக்கப்பட்டிருக்கின்றன.

| மழை பெய்த ஊரின் பெயர். | பெய்த மழை அங்குலம். | பெய்திருக்க வேண்டிய மழை அங்குலம். |
|---|---|---|
| கோபால்பூர் | 26.09 | 32·19 |
| வால்டேர் | 15·46 | 25·20 |
| காக்கிநாடா | 20·28 | 23·62 |
| மசூலிப்பட்டணம் | 22·95 | 25·32 |
| நெல்லூர் | 11·18 | 13·36 |
| மதராஸ் | 11·56 | 18·34 |
| கூடலூர் | 14·24 | 18·58 |
| நாகப்பட்டணம் | 9.37 | 12·93 |
| பாம்பன் | 0·25 | 5·48 |
| கொழும்பு | 26·30 | 45·49 |
| திருவநந்தபுரம் | 32·04 | 41·15 |
| கொச்சி | 89·40 | 90·10 |
| கள்ளிக்கோட்டை | 83·09 | 99·31 |
| மங்களூர் | 91·30 | 113·08 |
| மெர்க்காரா | 128·65 | 112·51 |
| ஐதராபாத் | 19·57 | 26·59 |
| ரெய்ச்சூர் | | |
| பல்லாரி | 11·29 | 13·56 |
| கர்நூல் | 16·75 | 22·77 |
| கடப்பை | 17·29 | 21·98 |
| ஹாஸ்ஸான் | 22·55 | 20·61 |
| பெங்களூர் | 20·30 | 24·81 |
| கொடைக்கானல் | 35.48 | 31·66 |
| உதக்மண்டலம் | 43·61 | .. |
| கோயம்புத்தூர் | 13·64 | 9·40 |
| வேலூர் | 18·22 | .. |
| சேலம் | 16·76 | 27·84 |
| திருச்சிணப்பள்ளி | 13·64 | 16·54 |
| புதுக்கோட்டை | 29·91 | .. |
| மதுரை | 18·31 | 17·43 |
| திருநெல்வேலி | 3·67 | 7·53 |